பக்கங்கள் : பதினாறு + XVI

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 04 ஞாயிற்றுக்கிழமை (16.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 59



## சிறுவர்கள், பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் பேரணி

6 ஆயிரம் பேர் அணிதிரள்வு

(06ஆம் பக்கம் பார்க்க)

மூன்று சிறுமிகள் மீது

## பாலியல் வன்புணர்வு

மூவர் பொலிஸாரால் கைது

(வவுனியா)
வவுனியாவின் வெவ வேறு பகுதிகள் மற்றும் 04

### அபிவிருத்தி முயற்சிகளுக்கு

# நீதித்துறை தடைகளை ஏற்படுத்தக்கூடாது

### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

**மக்களின் நலனுக்காகவும் சுபீட்சத்துக்காகவும் மேற்கொள்ளும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு நீதித்துறை தடைகளை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நீர்கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

"இலங்கை நீதி மற்றும் வர்த்தக மையம்: நோக்கு, சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" எனும் தொனிப்பொருளில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த மாநாடு நீர் கொழும்பில் நடை 15



## ஆயிரம் பனை வேலணையில் அழிப்பு

பொதுமக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில் அபிவிருத்தியை காரணம் காட்டி ஆயிரக்கணக்கில் பனை மரங்கள் அழிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

பனை மரங்கள் வகை தொகையின்றி அழிக்கப்படுவது தொடர்பில் அதிகாரிகள் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்வேறுபட்ட பகுதிகளில் பனை மரங்கள் அழிக்கப்பட்டு வரும் நிலையில் வேலணை பிரதேச செயலர பிரிவுக்குட்பட்ட வேலணை கிழக்கு ஜே/15 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள காணியில் உள்ள 300 பனைகளை அழித்து, தென்னை மரங்கள் நாட்டுவதற்காக தனியார் ஒருவர் பிரதேச செயலகத்திடம் அனுமதிக்காக கடந்த வருடம் டிசம்பர் மாதம் விண்ணப்பித்திருந்தார்

அந்தவகையில் 15

## தற்கொலைகளால் எதையும் சாதிக்க முடியாது

யாழில் விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்கொலைகளால் எதையும் சாதிக்க முடியாது. வளமான மனித வளத்தை 15



மகிந்தவை தொடர்ந்து

## ரணில் இந்தியா பயணம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைத தொடர்ந்து இம்மாத இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் 15

## சைவ வீதிப் பெயர்களை மாற்றி நல்லிணக்கத்தை குலைக்காதீர்கள்

ஊர்காவற்றுறை பிரதேச சபையிடம் சைவ மகா சபை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட சில வீதிகளின் சைவப்பெயர்களை மாற்று மதப் பெயர்களாகவோ பொதுப் பெயர்களாவோ மாற்றுவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளமை வருத்தம் அளிக்கின்றது என அகில இலங்கை சைவ மகா சபை தெரிவித்துள் 15

யாழ்.பல்கலை பகிடிவதை

## தொலைபேசி, இணையத் தரவை ஆய்வு செய்ய பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்றதாக கருதப் 15

இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## ஐ.நா உறுப்பு நாடுகள் சந்திப்பில் சுமந்திரன் எம்.பி வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கைக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஐ.நா உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தியதாக சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 43 ஆவது கூட்டத்தொடர் சுவிட்ஸர்லாந்தின் ஜெனிவாவில் எதிர்வரும் 24ஆம் 15

சவேந்திர சில்வாவின் தடைக்குப் பின்னர்

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுடன் பிரதமர் மகிந்த சந்தித்து கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினர்கள் அமி பேரா மற்றும் ஜோர்ஜ் ஹோல்டிங் ஆகியோர் நேற்றுக் காலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர்.

இதன்போது இருதரப்பு உறவை பலப்படுத்துவது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. 15



ஐ.நா மனித உரிமைகள் சபையின்

## இடைக்கால அறிக்கை இலங்கையிடம் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லட் தயாரித்துள்ள இடைக்கால அறிக்கை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஜெனிவா தகவல்கள் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**MATHS QUIZ CLASSES**

தரம் 6 தொடக்கம் 10 வரையான மாணவர்களுக்கான சிதம்பரா, ஒலிம்பியாட் மற்றும் கணித வினாடி வினாவிற்கான தயாரிப்படுத்தல் வகுப்புக்கள் மாத்திரம் இணுவிலில் ஆரம்பமாகவுள்ளன.

**Mr.S.THARSHAN (JP) - 077 454 0529**

**புகையிரத வீதி, இணுவில் கிழக்கு, சுன்னாகம்.**
**(குழுவகுப்புக்கள் மாத்திரம் வீடு வந்து கற்பிக்கப்படும்.)** (2292)


# சவேந்திர சில்வாவுக்கான பயணத்தடை துரதிர்ஷ்டவசமானது - சஜித் பிரேமதாச

(கொழும்பு)

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பயணத்தடை விதிக்கப்பட்டமை வருத்தமளிக்கும் துரதிர்ஷ்டவசமான நிலைமை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக முன்நின்ற தளபதிகளில் ஒருவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் டுவிட்டர் தளத்தில் இந்த விடயம் பதிவிடப்பட்டுள்ளது. நாடு என்ற ரீதியில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவிற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவரின் டுவிட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)


**பாலர் பாடசாலைக்கு ஆசிரியர்கள்/பராமரிப்பாளர் தேவை. (Montessori)**

பாலர் பாடசாலையில் ஆங்கிலமொழி மூலம் கற்பித்தல் செய்யக் கூடிய பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1.ஆங்கில அறிவுடன் GCE.O/L தகைமை உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

2. மற்றும் ஆங்கிலமொழிமூலம் கற்பிக்க பயிற்சிபெற விருப்பமுடையவர்களும் விண்ணப்பம் செய்யமுடியும்.

3.பராமரிப்பாளர் 45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 154, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
e mail ID : sat37aero@gmail.com
Tel No : 021 222 6242 / 077 244 4172 (C-9253)


# போதைப் பொருள் விற்பனைக்கு பொலிஸார் உதவி செய்கின்றனர்

## இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த

(கொழும்பு)

நாவலப்பிட்டி பிரதேசத்தில் சுமார் 500 பாடசாலை மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருப்பதாகவும் நகரில் உள்ள மருந்து கடை உரிமையாளர்களே போதைப் பொருட்களை விற்பனை செய்வதாகவும் இராஜாங்க அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி வைபவ மண்டபத்தில் நேற்று போதைப் பொருள் அற்ற நாவலப்பிட்டி என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் போதைப் பொருளுக்கு அடிமையான மூன்று பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

நாவலப்பிட்டியில் போதைப் பொருள் விற்பனையை மேற்கொள்ள சில பொலிஸ் அதிகாரிகளும், சில முச்சக்கர வண்டி சாரதிகளும் உதவுகின்றனர்.

நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்து, புதிய பொறுப்பதிகாரி பொறுப்பேற்ற பின்னர் நகரில்போதைப்பொருள் விற்பனை ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்திற்குள் போதைப் பொருள் விற்பனையை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்க போவதாகவும் மகிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார். (ம-3)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**உடல் எடை குறைய வேண்டுமா?**

◉ எடை கூடுகிறதா
◉ வயிறு மார்பு குறைய வேண்டுமா?
◉ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்றீ கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாட்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்

**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**

தலைமுடி வளர வேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? முடி கொட்டுகிறதா? இளநரையா? தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? புதிதாக முடி முளைக்க வேண்டுமா? பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் குளிசை

**இந்த எண்ணெயை பாவித்து பயனடைய** (2290)

**077 210 6159 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**



**வேலையாட்கள் தேவை**

மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள K.M.V.R ஆயுர்வேதமருந்து & பான்சி கடைக்கு கடை அனுபவம் மற்றும் கணனி அறிவுடைய வேலையாட்கள் உடன் தேவை. (கடையை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)

**தொடர்புக்கு:-**
**0769132049, 0212243676**
**K.M.V.R**
**ஆயுர்வேத மருந்து & பான்சிகடை. K.K.S வீதி, மாவிட்டபுரம்.** (C-9269)




**வேலை ஆள்தேவை**

வாகனத்தில் பொருட்களைக் கொண்டு சென்று {Sales வாகனம்} இறக்குவதற்கு வேலையாள் தேவை. கொழும்பில் இருந்து வாகனத்தில் வரும் பொருட்களை இறக்கி களஞ்சியத்தில் அடுக்குவதற்கு வேலையாள் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர் தேவை.

**மாதாந்த சம்பளம் வழங்கப்படும்**
**077 009 0189** (2291)


# மரண அறிவித்தல்



மலர்வு 07 ✽ 11 ✽ 1930

உதிர்வு 14 ✽ 02 ✽ 2020

## சின்னத்துரை கார்த்திகேசு

[மெக்கானிக் குட்டி அண்ணா]

பழைய உடையார் ஒழுங்கையினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கார்த்திகேசு அவர்கள் 14.02.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சரஸ்வதி அம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற இரத்தினசாமி - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கந்தையா, தையல்பாகு ஆகியோரின் சகோதரரும், திருமதி சாந்திமதி தங்கத்துரை (ஜேர்மனி), திருமதி இந்துமதி ஸ்ரீராம் (பருத்தித்துறை), திருமதி கலாவதி ரத்னலிங்கம் (ஜேர்மனி), திருமதி பானுமதி சந்திரமோகன் (டென்மார்க்), ஜெயக்குமார் (சுவிஸ்), திருமதி சுஜமதி முரளிதரன் (தும்பளை), விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் திகிரி லேன் தும்பளையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிச்சவீட்டு வீதியில் அமைந்துள்ள (கோரியடி) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை. (C-9262)

தகவல் : குடும்பத்தினர்.
T.P. No : 077 664 7836


**வேலைவாய்ப்பு**

யாழில் இயங்கும் பிரபல அச்சகத்திற்கு அனுபவமுள்ள கணனி வடிவமைப்பாளர் **(Graphic Designer)** தேவை!
**ஆண் / பெண் இருபாலார்**
(பெண்கள் விரும்பத்தக்கது) (2289)
**076 1923 444 / 021 221 4221**



**காணி விற்பனைக்கு**


இராசபாதை வீதி, பாலா மாஸ்டர் கடை ஒழுங்கையில் பங்குக்கிணற்றுடன் பத்து அடிப்பாதை உட்பட 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**(தரகர் தேவையில்லை)** (2288)

நேரடித் தொடர்புகளுக்கு - **076 992 3075**


# மனதார வாழ்த்துகிறோம்

## நடராசா கந்தசாமி (JP)



யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் கடந்த 28.01.2020ல் கரணவாய் வடக்கு சக்களாவத்தையை சேர்ந்த நடராசா கந்தசாமி அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் சமூக வலுவூட்டல் நலனோன்புகை அமைச்சின் பல விருதுகள் பெற்றவர். முன்னைநாள் கிராம உத்தியோகத்தரும் பிரதேச சபை உறுப்பினரும் சித்திராலயா சனசமூக நிலையம், கம்பன் சனசமூக நிலைய தலைவரும் கரணவாய் வடக்கு கிராம முன்னேற்ற சங்க தனாதிகாரியுமாக கடமை புரிந்தவர், அவரை வாழ்த்துவதில் பெருமை அடைகிறோம்.

வாழ்த்துபவர் -
**சி.குமாரசா (JP) (முன்னைநாள் கி.சே.அலுவலர்)** (C-9264)

# இராஜதந்திர ரீதியில் மகத்தான வெற்றி

## சவேந்திர சில்வா மகிழ்ச்சி

## ஜனாதிபதிக்கு நன்றி



(தியத்தலாவ)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சீனாவின் வுஹான் நகரில் இருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு தியத்தலாவ இராணுவ முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 33 மாணவர்களையும் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அக்குரேகொட இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் இடம்பெற்றது.

சுமார் இரண்டு வாரகாலம் தியத்தலாவ இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டு விசேட சிகிச்சைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய இராணுவத் தளபதி இந்தச் செயற்பாடு இலங்கை இராஜதந்திர ரீதியில் பெற்றுக் கொண்ட மகத்தான வெற்றி எனக் கூறினார்.

அத்துடன் நாட்டு மக்களை கருத்தில் கொண்டு செயற்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் நன்றி தெரிவிப்பதாகவும் ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு உலக நாடுகளுக்கு முன்னுதாரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (இ-7)

# 13 கோடி ரூபாய் பெறுமதியான தங்கக் கட்டிகளுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மாதகல் கடற்பரப்பு ஊடாக இந்தியாவுக்குத் தங்கக் கட்டிகளைக் கடத்த முற்பட்டதாக சந்தேக நபர் இருவரை கடற்படையினர் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சுமார் 137 மில்லியன் (13 கோடியே 70 இலட்சம் ரூபாய்) பெறுமதியான 14 கிலோ 300 கிராம் தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு தங்கம் கடத்தப்படுவதாகக் கடற்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மாதகல் கடற்பரப்பில் பயணித்த டிங்கி படகு ஒன்றைச் சோதனைக்குட்படுத்திய போதே, 14 கிலோ 300 கிராம் தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டன.

மாதகலைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மீட்கப்பட்ட தங்கக் கட்டிகளுடன் யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகக் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா தடை இலங்கை அரசின் கண்களைத் திறக்கும்

## தமிழ்க்கூட்டமைப்பு எதிர்பார்ப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் அவரது குடும்பத்தினரும் ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தினுள் நுழைவதை அமெரிக்கா தடை செய்து கட்டளை பிறப்பித்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்திலே இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றிக்கான ஆதாரங்களின் அடிப்படையில் 58 ஆவது பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்த சவேந்திரசில்வா பொறுப்புக்கூற வேண்டியவராகின்றார்.

சவேந்திரசில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட வேளை மேற்குறித்த அதே காரணங்களின் அடிப்படையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அவரது நியமனத்தினை கண்டித்திருந்தது.

யுத்தம் முடிவடைந்து ஒரு தசாப்தகாலமாக பொறுப்புக்கூறலை தட்டிக் கழித்து வந்த இலங்கை அரசாங்கங்களின் கண்களை இத் தடை திறக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நீதிக்காக பல வருடங்கள் போராடியதன் விளைவால் இடம்பெற்ற சிறியதொரு முன்னேற்றமாக இதை நாம் காண்கின்றோம்.

இலங்கை அரசாங்கம் இனிமேலாவது சர்வதேச விசாரணைகளில் வெளிவந்த சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கு இடங்கொடுக்க வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி நிற்கின்றது என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சவேந்திர சில்வாவிற்குத் தடை; அரசாங்கம் கடும் ஆட்சேபனை

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தளபதி சவேந்திரசில்வாவிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிராக அமெரிக்கா விதித்துள்ள பயணத் தடைகளுக்கு கடும் ஆட்சேபனையை வெளியிட்ட இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தத் தடை சுயாதீனமாக ஆராயப்படாத தகவல்களை அடிப்படையாகக் கொண்டது எனவும் தெரிவித்தது.

இலங்கை இராணுவத்தில் அவரது சிரேஷ்ட நிலையைக் கருத்தில் கொண்டே சவேந்திர சில்வா இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்டார். அவருக்கு எதிராக நிரூபிக்கப்பட்ட வலுவான ஆதாரங்கள் எதுவுமில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இலங்கை இராணுவத்திலுள்ளவர்களில் சிரேஷ்ட நிலையில் உள்ளதாலேயே சவேந்திர சில்வாவிற்கு தற்போதைய ஜனாதிபதி இராணுவப்பிரதானி பதவியை வழங்கினார் எனவும் வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்தது.

இலங்கையின் இராணுவத் தளபதியாக சவேந்திரசில்வா நியமிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பின்னர் இந்தத் தடை அறிவிக்கப்புட்டுள்ளமை கரிசனை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது என வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்தது.

தேசிய பாதுகாப்பு விவகாரங்க்ள் தொடர்பான முக்கிய பதவிகளுக்கு நிரூபிக்கப்பட்ட அனுபவமுள்ள ஒருவரை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நியமிப்பதை வெளிநாட்டு அரசாங்கமொன்று கேள்வி கேட்பது ஏமாற்றமளிக்கின்றது எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

சவேந்திரசில்வா குறித்த தகவல்களின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து தனது முடிவை அமெரிக்கா மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொள்கின்றது என வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்தது. (இ-7)

# மக்கள் ஆணை; மார்ச் 1-ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்படும்

## தினேஷ் திட்டவட்டம்

(பாதுக்கை)


மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் மார்ச் மாதம் முதலாம் திகதி நள்ளிரவு பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான வர்த்தமானியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டாயம் கையெப்பமிடுவார் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை கொண்டுசெல்ல பலமான பாராளுமன்றமொன்று அவசியமாகும். நாட்டை வெளிநாடுகளுக்கு கூறுபோட்ட அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி மக்களுக்கு வழங்கியிருக்கும் பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாதுக்கையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மார்ச் மாதம் முதலாம் திகதி நள்ளிரவுடன் சமகால பாராளுமன்றத்துக்கு நான்கரை வருடங்கள் நிறைவடைகின்றன. மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் அன்றைய தினம் நள்ளிரவே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான வர்த்தமானியில்ஜனாதிபதிகையெழுத்திடுவார்.



புதிய பாராளுமன்றத்தை அமைத்துக்கொள்வதற்கான வாய்ப்பு மீண்டும் மக்கள் கைகளிலேயே ஒப்படைக்கப்படும். சமகால பாராளுமன்றம் குழப்பங்கள் நிறைந்ததோர் பாராளுமன்றமாகும். நாட்டைக் கட்டியெழுப்ப சக்திவாய்ந்த பாராளுமன்றமொன்று அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறைச்சாலை வைத்தியசாலைக்கு முன்னாள் தூதுவர் உதயங்க மாற்றம்

(கொழும்பு)

மிக் விமானக் கொள்வனவில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, அவரை நாளை 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.


இந்நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட உதயங்க வீரதுங்க, சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, நேற்று முன்தினம் அதிகாலை 4.37 மணியளவில், இலங்கை ஏர்லைன்ஸ்'க்கு சொந்தமான விமானம் ஊடாக கட்டுநாயக்க பண்டாரநா யக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது அவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு, கைது செய்தனர். பின்னர் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு மிக் 27 ரக விமானக் கொள்வனவின் போது இடம்பெற்ற சுமார் 14 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி மோசடி தொடர்பாக உதயங்க வீரதுங்க சந்தேகநபராகப் பெயரிடப்பட்டு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாகிஸ்தான் மண்ணில் சங்கா தலைமையிலான அணி வெற்றி



லாகூர் குலாண்டர்ஸ் அணிக்கெதிரான ரி-20 போட்டியில், மெர்லிபோன் கிரிக்கெட் கழக அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

லாஹூர்- கடாபீ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மெர்லிபோன் கிரிக்கெட் கழக அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய லாகூர் குலான்டர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 135 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து, 136 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மெர்லிபோன் கிரிக்கெட் கழக அணி, 19.2 ஓவர்கள் நிறைவில் வெற்றி இலக்கை கடந்தது. இதனால் மெர்லிபோன் கிரிக்கெட் கழக அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணி சார்பில், வில் ரோட்ஸ் 3 ஓட்டங்களையும், மைக்கேல் லீஸ்க் 10 ஓட்டங்களையும், அணித்தலைவர் குமார் சங்கக்கார 25 ஓட்டங்களையும், ரவி பொபாரா 42 ஓட்டங்களையும், சமித் பட்டேல் 31 ஓட்டங்களையும், மைக்கேல் பார்ஜஸ் 5 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிலையில், இன்று (ஞாயிற்றுக் கிழமை) அட்ச்சன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டியில், மெர்லிபோன் கிரிக்கெட் கழக அணி, பாகிஸ்தான் ஷாயீன்ஸ் அணியை எதிர் கொள்ளவுள்ளது.

# உலகக்கிண்ண ஜிம்னாஸ்டிக்கில் பங்குபற்ற சீனாவுக்கு தடை

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, உலகநாடுகள் சீனாவிற்கு பயணத் தடை விதித்துள்ளன. இதன் காரணமாக அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பை சீனா இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலியாவின் ஜிம்னாஸ்டிக் தலைமை நிர்வாக அதிகாரி கிட்டி சில்லர், தமது அறிக்கையில்

"சீன ஜிம்னாஸ்டிக்ஸ் சங்கம் மற்றும் அதன் ஜனாதிபதியுடன் நான் தொடர்பு கொண்டுள்ளேன், அவர்கள் பிரதிநிதிகள் அனைவரும் நலமாக உள்ளனர், மேலும் நோய்த்தொற்றின் அறிகுறிகள் அவர்களிடம் அறியப்படவில்லை."

"இருந்த போதிலும், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் பயணக் கட்டுப்பாடுகளை நாம் அனைவரும் மதிக்க வேண்டும்." என தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதி பெற்ற 12 சீன வீரர்களில் ஜாங் செங்லாங், நான்கு முறை உலக சம்பியனானவர். இவர் 2012 லண்டன் ஒலிம்பிக்கில் ஆண்கள் அணிக்கு தங்கம் மற்றும் ரியோ விளையாட்டுப் போட்டிகளில் வெண்கலம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பும்ராவை விமர்சித்ததால் கடுப்பான சமி

ஜஸ்பிரீட் பும்ரா ஒரு சில போட்டிகளில் சிறப்பாக விளையாடவில்லை என்பதற்காக அவரது திறமை குறித்து சிலர் கேள்வி எழுப்புவது குறித்து இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமட் சமி ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

நியூசிலாந்திற்கு எதிரான மூன்று ஒரு நாள் போட்டிகளிலும் பும்ரா விக்கெட்களை வீழ்த்தாது குறித்து விமர்சனங் கள்எழுந்துள்ள நிலையிலேயே சமிஇவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஓரிரு போட்டிகளில் அவர் சிறப்பாக விளையாடவில்லை என்பதற்காக பல போட்டிகளில் பும்ரா இந்தியாவின் வெற்றிக்கு காரணமாக அமைந்ததை எப்படி மறக்க முடியும் என சமி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஓரிரு போட்டிகளில் மாத்திரம் பும்ரா விக்கெட்களை வீழ்த்தாதது குறித்து நாங்கள் விவாதிக்கின்றோம் என்பதை என்னால் நம்பமுடியவில்லை என குறிப்பிட்டுள்ள சமி ஒரு சில போட்டிகளில் அவர் சிறப்பாக விளையாடவில்லைஎன்பதற்காக போட்டிகளை வெல்லக்கூடிய அவரின் திறமையை சந்தேகிக்கமுடியாது எனவும் சமி தெரிவித்துள்ளார்.

பும்ரா இந்தியாவிற்காக சாதித்துள்ளதை எப்படி மறக்கவோ அலட்சியம் செய்ய முடியும் என கேள்வி எழுப்பியுள்ள சமி நீங்கள் சாதகமாக விதத்தில் சிந்தித்தால் அது வீரருக்கும் அணிக்கும் நல்லது என குறிப்பிட்டுள்ளார்.



சிலருக்கு வர்ணனைதான் வேலை என்பதால் அதன் மூலம் தான் பணம் சம்பாதிக்க முடியும் என்பதால் அவர்களால் விமர்சனங்களை முன்வைக்கமுடியும் என குறிப்பிட்டுள்ள சமி எல்லாவிளையாட்டு வீரர்களும் காயமடைவார்கள் சாதகமான விடயங்களை மாத்திரம் பார்க்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வீரர் திடீரென சிறப்பாக விளையாடவிட்டால் அவரை பற்றிய பார்வைகள் எப்படி மாறுகின்றன என்பது குறித்தும் சமி ஏமாற்றம் வெளியிட்டுள்ளார்.

# பாலியல்...

மாங்குளம் ஆகிய இடங்களில் மூன்று சிறுமிகள் உள்ளிட்ட மூவரை கடந்த பல நாட்களாக வன்புணர்வு செய்து வந்த குற்றச்சாட்டில் மூவரை உறவினர்களின் உதவியுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த மூவரும் நேற்று வெவ்வேறு பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி ஒருவரை கடந்த சில நாட்களாக வீட்டில் இருந்த உறவினர் ஒருவர் பாலியல் வன்புணர்வு மேற்கொண்டு வந்துள்ளார். இந்நிலையில் குறித்த சிறுமியின் உடலில் மாற்றங்கள் ஏற்பட்டதை அவதானித்த பெற்றோர் சிறுமியை விசாரித்த போது தனக்கு நடந்த சம்பவங்களை சிறுமி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பெற்றோரால் பூவரசங்குளம் பொலிஸில் நேற்று மாலை செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக வன்புணர்வு குற்றச்சாட்டின் கீழ் உறவினரான 30வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமி ஒருவரை கடந்த சில நாட்களாக வீட்டில் இருந்து அவருடைய தந்தை பாலியல் வன்புணர்வு மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த சிறுமியின் தாயார் செட்டி குளம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக வன்புணர்வு குற்றச்சாட்டில் குறித்த சிறுமியின் தந்தையான 41 வயது நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். மேலும், மாங்குளம் பகுதியில் 17 வயது சிறுமி ஒருவர் கர்ப்பம் தரித்துள்ள நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணையையடுத்து குறித்த சிறுமியின் தந்தையான 39 வயது நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மூன்று சிறுமிகளும் மருத்துவப் பரிசோதனைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ம-3,250)


கண்ணீர் அஞ்சலி

தம்பிராஜா சோமசுந்தரம்

(வாரிவளவு, காரைநகர்)

பிறப்பு - 25.10.1948 இறப்பு - 13.02.2020



உங்களோடு பழகிய நாட்கள்
எமது நெஞ்சத்திரையில்
இன்னும் நிழலாடுகிறது
E.S.P, E.S.P என்று கூப்பிடும்
சத்தம் இன்று காதில் ஒலிக்கிறது.
நீங்கள் வீசிய நட்பு வலையில்
வீழ்ந்த நல்ல நண்பர்களில் நாமும்
இருக்கின்றோம் என்பதில் பெருமிதம்
கொள்கின்றோம்.

எமது நண்பன் தம்பிராஜா சோமசுந்தரம்
அவர்கள்2020.02.13 அன்று
காலமானசெய்தி அறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அவரின் குடும்பத்தினருக்கு எமது
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

E.S.P நாகரத்தினம் சக நிறுவனம்
வாரிவளவு, காரைநகர் நண்பர்கள்

(c-9265)

## விற்பனை பிரதிநிதிகள் தேவை

இலங்கையின் பிரபல கம்பனியில் பணியாற்றக்கூடிய முன் அனுபவமுள்ள ஆர்வமுள்ள, அதிகூடிய ஊதியத்தினை எதிர்பார்க்கும் விற்பனை பிரதிநிதிகள் தேவை.

தொடர்புகளுக்கு:
021 222 5392

(C-9256)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## மணமகன் தேவை

1995 கத்தோலிக்கம்
படிப்பு: A/L (அழகுக்கலை டிப்ளோமா)
எதிர்பார்ப்பு:- வெளிநாடு

(2282)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுத்துறை மருதங்கேணி வத்திராயன் கிராம அலுவலகத்திற்கு அருகாமையில் 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:–0755935814

(C-819)

## மருந்து இல்லா/ மருந்து வைத்தியம்

பல காலமாக சிகிச்சை எடுத்தும் சுகமாகாத எல்லா விதமான நோய்களை உடையவர்களுக்கான அதி உன்னத வைத்தியம் முள்ளந்தண்டு விலகல், கை, கால் தூக்க முடியாமை, கை, கால் விறைப்பு, மாறாத படுக்கைப் புண்கள், மூலம், தோல் நோய்கள், குழந்தைப்பேறு இன்மை, பெண்களின் அனைத்து நோய்கள்.

விபரங்களுக்கு - DR.R .Sivagurunathan
077 730 1669
திங்கள், செவ்வாய் மட்டும். சந்திப்பு இலவசம்
இல.41, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.


## பொலிஸார் 14பேர் இடமாற்றம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய உடன் அமுலுக்கு வரும் வகையில் 14 பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இந்நிலையில் உதவிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட 14 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## காணி தேவை

யாழ்.நகருக்கண்மையில் காணி/ வீட்டுடன், வசாவிளான், புன்னாலைக் கட்டுவன் இதர பகுதிகளில் செம்மண் தோட்டக்காணியும், பளை, இயக்கச்சிப் பகுதிகளில் தென்னைக்கேற்ற காணியும், கிளிநொச்சியில் வயற்காணியும் விலைக்குத் தேவை.

தொடர்பு: 077 217 4038

(2280)

## தேவை

முன் அனுபவமுள்ள பாரவூர்தி சாரதிகள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 704 0356

(C-9256)

பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற



இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9249)

ரெங்கசாமி கண்டி, அம்பத்தன்ன - 077 112 3471
Viber - 076 466 4153
வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் சுப்பர்மார்க்கட் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

01.முகாமையாளர் - 30000-40000/= வரை
02.மேற்பார்வையாளர் - 20000-30000/= வரை
03.காசாளர் - 18000-21000 /= வரை (பெண்)

☞ தொடர்புகள்: 021 492 7080
☞ நேர்முகத்தேர்வு:- 17.02 - 22.02 வரை சமுகமளிக்கலாம்
☞ நேரம்:-9.00-12.00 வரை
☞ வருகை தருவது:- அன்னை நாகபூட்சிற்றி
இல.175, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

(2272)

## புதிய தொழில்நுட்ப வாழ்க்கைக்கான நுழைவாயில்

ŪKI

100% புல்மைப்பரிசில்
முற்றிலும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட
கணினி மென்பொருள் பயிற்சிநெறி

பயிற்சி நிலையங்கள் : யாழ்ப்பாணம், கிளிநொச்சி
பயிற்சிக்காலம் : 6 மாதங்கள்
விண்ணப்ப முடிவுத்திகதி : 24.02.2020

APPLY NOW

விண்ணப்ப படிவங்கள் பெறுவதற்கு
www.uki.life

யாழ்ப்பாணம்
+94 (77) 582 1661
info@uki.life

கிளிநொச்சி
+94 (21) 228 4647
kilinochchi@uki.life

(2241)

## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

01.பலகாரம் செய்யக் கூடியவர் - ஆண், பெண்
02.சமையல் வேலை செய்யக்கூடியவர் - ஆண், பெண்

☞ தொடர்புகள்: 021 492 7080
☞ நேர்முகத்தேர்வு:- 17.02 - 22.02 வரை சமுகமளிக்கலாம்
☞ நேரம்:-9.00-12.00 வரை
☞ அன்னை நாகபூட்சிற்றி
இல.175, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

(2272)


## இராசி பலன்

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், அன்பால் சாதித்துக்காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

**மேடம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**இடபம்:** மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | ராகு |
| சூரி, புத | இராசி பலன் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி | | |
| சனி, கேது குரு, செவ் | சந் | | |

**16.02.2020**
மாசி 04, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு
அட்டமி முன்னிரவு 8.48 மணிவரை
விசாகம் முற்பகல் 10.35 மணிவரை
சுபநேரம் 9.33 - 11.03 மணிவரை
இராகுகாலம் 5.03 - 6.33 மணிவரை
ஒவ்வொரு முகிலுக்கும் மின்னல் உண்டு.

வளவன்

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** விரும்பிய காரியம் விரும்பியபடியே நடைபெறும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.


**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் அனுகூலமுண்டு, பண புழக்கம் அதிகரிக்கும் நாள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**கன்னி:** நேற்றைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# சிறுவர்கள், பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் பேரணி

## ஆறாயிரம் பேர் திரள்வு





(யாழ்ப்பாணம்)

சிறுவர்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தி யாழில் சுமார் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களின் பங்குபற்றுதலுடன் நேற்றுக்காலை மாபெரும் பேரணி இடம்பெற்றது.

நியூசிலாந்து நாட்டின் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் பிரதேச செயலகங்களின் அனுசரணையுடன் சிறுவர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்போம் என்னும் தொனிப்பொருளில் ஆரம்பமான கவனயீர்ப்புப் பேரணி யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கை வந்தடைந்தது.

இப்பேரணியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து சிறுவர்கள் வரவழைக்கப்பட்டு குறித்த பேரணி இடம்பெற்றது. (இ-10)

# யாழ்.மாவட்டத்தில் 127 வீதிகள் இம்மாத இறுதியில் அமைக்கப்படும்

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் அரசியல் தேவைக்காக மக்கள் மத்தியில் விளம்பரம் செய்யப்பட்ட "ஐ" திட்ட வீதிகள் தற்போதைய அரசாங்கத்தால் இம்மாத இறுதியில் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு நல்லாட்சி அரசாங்கக் காலப்பகுதியில் அமைக்கின்றோம் எனப் பொதுமக்களுக்கு ஆசை காட்டி அமைக்கப்படாமல் விடப்பட்ட குறித்த வீதிகள் தற்போது அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் சுமார் 260.24 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்ட 127 வீதிகள் இத்திட்டத்தில் முதற்கட்டமாக அமைக்கப்படும்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 56.57 கிலோ மீற்றர் வரையான 29 வீதிகளும் சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலகங்களுக்க உட்பட்ட பகுதிகளில் 67.64 கிலோ மீற்றர் வரையான 37 வீதிகளும் அமைக்கப்படும்.

அத்தோடு கோப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 71.81 கிலோ மீற்றர் வரையான 35 வீதிகளும் மற்றும் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலகப் பகுதிகளில் 64.22 கிலோ மீற்றர் வரையான 26 வீதிகளும் அமைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கீரிமலைக்கு ஆளுநர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் கீரிமலை தீர்த்தக்கரை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கு கடந்த 13 ஆம் திகதி விஜயம் மேற்கொண்டார். கீரிமலைப் பகுதியில் தீர்த்தமாடும் பகுதியில் மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த விஜயம் அமைந்திருந்தது.

இதன்போது அப்பகுதிகளில் மேம்படுத்தப்பட வேண்டிய வசதிகள் தொடர்பிலும் அதிகாரிகளுக்கு சில பரிந்துரைகளை ஆளுநர் வழங்கினார். (இ-7)








கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு வைத்தியர் மகேந்திரனின் வேண்டுகோளுக்கிணங்க அழகான சிலையும் பூந்தோட்டமும் கோப்பாய் இராச வீதியிலுள்ள நவமங்கை நிவாசத்தால் அமைத்துக்கொடுக்கப்பட்டது. இதனை நவமங்கை நிவாச ஸ்தாபகர் சுவர்ணா நவட்ணம் அண்மையில் திறந்து வைத்தார். கோப்பாய் பிரதேச சபை செயலாளர் சுபாசினி மதியழகன், புத்தூர் பிரதேசசபை செயலாளர் ஜலீபன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.பரமானந்தம், நிவாச நிர்வாக செயலாளர் முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பிளாஸ்ரிக் பாவனைக்கு எதிராக நூறாவது விழிப்புணர்வு நிகழ்வு



(சாவகச்சேரி)

கோர் நிறுவனமும், சாவகச்சேரி நகரசபையும் இணைந்து சாவகச்சேரி நகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனைக்கு எதிராக முன்னெடுத்து வந்த நூறாவதும் இறுதியுமான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

கோர் நிறுவனத் தலைவர் முருகையா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்தியர் டயாழினியும் கலந்து கொண்டனர்

இதன்போது கோர் நிறுவனம் மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியன இணைந்து ஒன்றரை வருட காலப்பகுதியில் சாவகச்சேரி நகரில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக திருமண மண்டபங்களில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை குறைப்பு, உணவகங்களில் வாழையிலைப் பாவனை, பொலித்தீனுக்குப் பதிலாக துணிப்பை அறிமுகம்; திணைக்களங்களின் கழிவுகளை தரம பிரித் துப் பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட பல மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த இறுதி விழிப்புணர்வு நிகழ்வில் பொலித்தீன் பைக்கு பதிலான நவீன வகை துணிப்பை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர், கத்தோலிக்க மதகுரு, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பாடசாலை ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் நகரசபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (இ-30)

# இதயம், அன்னம், யானை; சின்னம் எதுவானாலும் தேர்தல், பதிவு செய்யப்பட்ட கூட்டணியில்தான்

## மனோ கணேசன் திட்டவட்டம்

(கொழும்பு)

தேர்தலில் சின்னம், இதயம், யானை என்ற இரண்டும் இல்லை என்றால், "அன்னப்பறவை" யை ஏற்றுக்கொள்வோம். ஆனால், தேர்தலை பதிவு செய்யப்பட்ட கூட்டணியிலேயே சந்திப்போம். கூட்டணித் தலைவராக சஜித் பிரேமதாஸவும் கூட்டணித் தலைமைக்குழுவில் ஐ.தே.க. பிரதிநிதிகளுடன் கூட்டணிப் பங்காளிக் கட்சித் தலைவர்களும் இடம்பெறுவோம்.

கூட்டணியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவும் வேட்பாளர் தெரிவுக்குழுவின் தலைவராக சஜித் பிரேமதாஸவும் செயற்படுவார்கள். இவை எங்கள் இந்த குறைந்த பட்ச நிலைப்பாடுகள். இவற்றை ஐ.தே.க. செயற்குழு ஏற்கும் என நான் நம்புகின்றேன் என தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்தார். புதிய எதிரணி கூட்டணி தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

பதிவு செய்யப்பட்ட கூட்டணி, கூட்டணித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தலைமைக்குழுவில் பங்காளிக்கட்சித் தலைவர்கள், பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, வேட்பாளர் தெரிவுக்குழுத் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகிய எங்கள் குறைந்தபட்ச நிலைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், சஜித் பிரேமதாஸ தலைமையிலான பெரும்பான்மை ஐ.தே.க.அணியினரும் அனைத்துப் பங்காளிக் கட்சிகளும் இணைந்து நாம் ஏற்கனவே பதிவு செய்து, தயார் நிலையில் வைத்திருக்கும் எமது கூட்டணியின், "இதயம்" சின்னத்தில் பொதுத் தேர்தலை சந்திப்போம்.

இதில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இந்த நிலைப்பாட்டிலேயே சஜித் பிரேமதாஸவும் அனைத்துக் கூட்டணிப் பங்காளிக் கட்சித் தலைவர்களும் இருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டணியில் பிரதான கட்சி. அந்தக் கட்சி பிளவுபடக்கூடாது. இதில் நாம் மிகவும் அக்கறை கொண்டு இருக்கிறோம். உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள், பெரும்பான்மை முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், இன்றைய உள்ளூராட்சி மன்ற பெரும்பான்மை உறுப்பினர்கள், பெரும்பான்மை கடைநிலை உறுப்பினர்கள் சஜித் அணியுடன்தான் இருக்கின்றார்கள். நாங்களும் அவர்களுடன் இருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடக்கூடாது என்ற சஜித் தலைமையிலான எமது ஒட்டுமொத்த நல்லெண்ணத்தை எவரும் எமது பலவீனமாகக் கருதி எம்முடன் விளையாட முயலக்கூடாது.



அப்படியான விளையாட்டு முயற்சியில் எவரும் ஈடுபட்டால், சஜித் பிரேமதாஸ தலைமையிலான எமது கூட்டணியின் இதயம் சின்னத்தில் நாம் நிச்சயம் களமிறங்குவோம். அதற்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்து விட்டன.

பதிவு செய்யப்பட்ட கூட்டணி, கூட்டணித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, வேட்பாளர் தெரிவுக்குழு தலைவர் சஜித் பிரேமதாஸ என்பவை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு எடுத்த தீர்மானங்கள்தான். இன்று இவற்றில் இருந்து பின்வாங்குவது யார் என மக்களுக்குத் தெரியும். எங்களுடன் முரண்படுகின்றவர்கள் யார் எனவும் மக்களுக்குத் தெரியும். ஐ.தே.க. பிளவுபடுமானால், அதற்கான முழுப் பொறுப்பை எம்முடன் முரண்படுகின்றவர்கள்தான் ஏற்க வேண்டும். இப்படி செய்து ஆளும் அரசாங்கத்தை மகிழ்ச்சியடைய செய்து, அரசாங்கத்துக்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்துவிட வேண்டாம் என சம்பந்தப்பட்டோரை கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# யானை சின்னத்தை ஏற்காதவர்கள் கட்சியை விட்டு வெளியேறலாம்

## ஆசுமாரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிட்டாலும் பொதுக் கூட்டணி அமைத்து போட்டியிட்டாலும் யானைச் சின்னத்திலேயே போட்டியிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் பொதுக்கூட்டணி அமைத்து வேறு சின்னத்தில் போட்டியிட்டிருந்தாலும் பொதுத் தேர்தலின் போது யானைச் சின்னத்திலேயே போட்டியிட்டு வந்துள்ளது. இந்நிலையில் யாருடைய தேவைக்காவும் சின்னத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இந்த விடயம் தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு மாற்றம் வேண்டும் என்று எண்ணுபவர்கள் தாராளமாக கட்சியை விட்டு வெளியேற முடியும்.

இதேவேளை கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கட்சியின் கொள்கைத்திட்டத்தை முழுமையாக கற்றறிந்து கொள்ள வேண்டும். இந்நிலையில் கட்சியின் கொள்கைத்திட்டத்திற்குப் புறம்பாக செயற்படுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்தார். (இ-7)

# ஆசிரியர்களின் இடமாற்றம் குறித்த புதிய செயலி விரைவில் அறிமுகம்

## டளஸ் தகவல்

(கொழும்பு)

ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக புதிய செயலியை விரைவில் அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மத்துகம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே கல்வியமைச்சர் டளஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அத்துடன், மாணவர்கள் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்கு இணையம் ஊடாக விண்ணப்பிக்கும் புதிய முறைமையொன்றும் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதிலுள்ள சாதக, பாதக விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் கல்வியமைச்சர் டளஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். (இ-7)

# 45 வயதை கடந்து துன்பப்படும் பட்டதாரிகள்

## அரசாங்கத்திடம் கோரிக்கை

(கொழும்பு)

தொடர் போராட்டங்களில் ஈடுபட்டுவரும் பட்டதாரிகளில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் 45 வயதைக் கடந்திருக்கும் நிலையில் வயதெல்லையை மேலும் அதிகரிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்கான வயதெல்லையை 45 ஆக அரசாங்கம் அதிகரித்துள்ளமை வரவேற்கத்தக்கது எனவும் எனினும் 45 இற்கு மேல் அதிகரித்தால் பட்டதாரிகள் அனைவரது துயரங்களும் குறையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பட்டதாரிகள் வேலை வாய்ப்பு விடயம் தொடர்பாக நேற்றுச் சனிக்கிழமை கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது 7 ஆயிரம் கருத்திட்ட உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. திடீரென அது நிறுத்தப்பட்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இன்னும் அது வழங்கப்படவில்லை.

எத்தனையோ கனவுகளின் மத்தியில் இந்நியமனம் பெற்றவர்கள் இன்று தொழில் இல்லாமல் இருக்கின்றார்கள். எனவே நிறுத்தப்பட்டு இருக்கின்ற அந்தத் தொழில்வாய்ப்பை மீண்டும் அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது சாதாரணதரம் சித்தியடையாதவர்களுக்கான ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு என்று ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதுவும் நல்ல விடயம் தான். ஆனால் சாதாரண தரம், உயர்தரம் சித்தியடைந்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் என்றெல்லாம் இருக்கின்றார்கள். அதனையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு தொடர்பாக 35 வயதெல்லை இடப்பட்டது. தற்போது அதனை 45 ஆக அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர் போராட்டங்களில் ஈடுபட்டவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தற்போது 45 வயதைக் கடந்திருக்கின்றார்கள்.

அவர்களுக்கான இந்த வேலை வாய்ப்பு சந்தர்ப்பம் இல்லாமல் இருப்பது கசப்பானதாகவே இருக்கும். பட்டதாரிகள் எத்தனையோ சிரமத்துக்கும் மத்தியில் பட்டம் பெற்றவர்கள்.

அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக் கொடுக்கப்படாமல் இருப்பதென்பது அவர்கள் மத்தியில் ஒரு வெறுப்புணர்வை ஏற்படுத்துவதாக இருக்கும்.

எனவே பட்டதாரிகளுக்கான வயதை எல்லைப்படுத்தாமல் 45 வயது என்பதையும் சற்றுக் கடந்து கொடுத்தால் அவர்களது துயரங்களைக் குறைத்துக் கொள்ள முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தரமான கடலுணவுகள் நியாயமான விலையில் மக்களுக்கு கிடைக்க நடவடிக்கை எடுங்கள்

## அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அறிவுரை

(கொழும்பு)

தரமான கடலுணவுகள் நியாயமான விலையில் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலேயே இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் விற்பனை நிலையங்கள் நாடளாவிய ரீதியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பு மோதர பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் மீன் விற்பனை நிலையத்தை திறந்து வைத்த பின்னர்



ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவம் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் நாடளாவிய ரீதியில் மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், தரமான கடலுணவுகள் மக்களை சென்றடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் குறித்த விற்பனை நிலையங்களை ஆரம்பித்திருப்பதாக தெரிவித்தார்.

மேலும், இதேபோன்ற விற்பனை நிலையங்களை நாடளாவிய ரீதியில் செயற்படுத்துவதன் மூலம் மக்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பங்களிப்புச் செய்ய முடியும்.

பொது மக்களுக்குத் தரமான கடலுணவுகளை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கடந்த காலங்களில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் நாடளாவிய ரீதியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள் இயக்கப்பட்டிருந்தன.

எனினும், கடந்த கால ஆட்சியின்போது அரசியல் தலைமைகளின் தவறான வழிநடத்தல் மற்றும் குறுகிய சிந்தனைகளால் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனமும் பாரிய பின்னடைவுகளை எதிர்கொண்டிருந்தது.

இதனால், தொடர்ச்சியாக நாடளாவிய ரீதியில் மீன் விற்பனை நிலையங்களை இயக்க முடியாத சூழலில் அவற்றின் செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட புதிய அரசாங்கம், அரச கட்டமைப்புக்கள் அனைத்தையும் மீண்டும் வினைத்திறன் மிக்கவையாக மாற்றும் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடந்த அரசு நல்லிணக்கத்திற்கு முன்னுரிமை

# தேசிய பாதுகாப்பு தொடர்பில் அக்கறை செலுத்தவில்லை


## கமால் காட்டம்

(பன்னிப்பிட்டிய)

கடந்த அரசாங்கம் ஜனநாயகத்திற்கும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கும் முன்னுரிமையளித்துச் செயற்பட்ட நிலையில் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அக்கறை செலுத்தவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன குற்றம் சாட்டினார்.

இதன் காரணமாகவே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

பன்னிப்பிட்டிய பகுதியில்



நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பாதுகாப்பு உறுதி

## சமல் தகவல்

(கண்டி)

இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் செயற்படுகின்ற தீவிரவாத அமைப்புக்கள் மற்றும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக வாரந்தோறும் ஒன்றுகூடி ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்டார்.

தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட அவர், விசேட பிரமுகர்களின் வருகையின் போது நினைவிற்காக கையெழுத்திடுகின்ற தலதாமாளிகையின்



புத்தகத்திலும் கையெழுத்தைப் பதிவிட்டார்.

2019 ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல்களை அடுத்து தேசிய பாதுகாப்பு மாநாடு நடத்தப்படுவதில் ஏற்பட்ட குளறுபடிகள் தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்பட்டன. குறிப்பாக முன்னெச்சரிக்கை கிடைத்திருந்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்கான உத்தரவுகள் உரிய முறையில் வழங்கப் படாமை தொடர்பில் பல விடயங்கள் அம்பலப்படுத்தப்பட்டன.

இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, ஒவ்வொரு வாரமும் நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கான கூட்டம் உரிய முறையில் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

'நாங்கள் வாரந்தோறும் ஒன்றுகூடி நாட்டின் பாதுகாப்பு குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் உலகில் செயற்பட்டு வருகின்ற தீவிரவாத அமைப்புக்கள் குறித்தும் ஏனைய அமைப்புக்கள் தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம்.

எமக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய எமது நாட்டின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. அனைத்துப் பொலிஸ் நிலையங்கள், முப்படையினர் தெளிவுபடுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளனர்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கோட்டா ஆட்சியில் மோசடிகள் அதிகரிப்பு

# ஐ.தே.கவின் பிள்ளை சஜித் தலைமையிலான கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம்

## விஜித் விஜிதமுனி திட்டவட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் நாட்டில் மீண்டும் மோசடிகள் மேலோங்கியுள்ளன. இந்நிலையில் நாட்டு மக்களின் நலன் கருதி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் அமைக்கப்படும் கூட்டணியை வெற்றிபெறச் செய்வோம் என பாராளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ 57 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்ட நிலையில், அந்த எண்ணிக்கையை பொதுத்தேர்தலின் போது வலுவான வெற்றிக்காக அதிகரிக்க வேண்டியது அவசியமானதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

69 இலட்சம் வாக்குகளைப் பெற்று வியத்கம அமைப்பின் ஊடாக ஆட்சிப்பீடமேறிய ஜனாதிபதி கோட்டாபயவின் மற்றைய தரப்பினரும் பொதுத்தேர்தலுக்குத் தயாராகி வருகின்றனர்.

அதேபோல் , ஐக்கிய தேசியக் கட்சியும் பலம் வாய்ந்த கூட்டணியாக பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராகி வருகின்றது.

அந்த வகையில் மக்கள் விரும்பும் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிள்ளையுமாகிய சஜித் பிரேமதாஸவின் தலைமையில் பலம் வாய்ந்த கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியின் ஆத்ம கௌரவத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அந்தக் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் எதிர்வரும் ஏப்ரல் மாதம், புதிய தலைமைத்துவம் புதிய பாராளுமன்றம், புதிய வேலைத்திட்டங்கள் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 200 | 200 |
| தக்காளி | 250 | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 150 | 150 | 160 | 200 |
| கரட் | 300 | 250 | 350 | 400 |
| பூசணி | 140 | 150 | 160 | 160 |
| புடோல் | 120 | 140 | 150 | 160 |
| வாழைக்காய் | 90 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350-400 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 170 | 240 |
| பாகற்காய் | 140 | 140 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 180 | 150 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 | 160 |
| லீக்ஸ் | 250 | 260 | 280 | 250 |
| பீற்றூட் | 120 | 120 | 160 | 200 |
| கறிமிளகாய் | 200 | 240 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 900 | 500 | 500 |
| போஞ்சி | 150 | 150 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | -- | 100 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 30-40 | 30 |
| தேசிக்காய் | 40 | 30 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 40-80 | 40-70 |
| இராசவள்ளி | 180 | 140 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 200 | 240 |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | -- | -- | 120 |

# இணைத்தலைமைத்துவம், சின்னம் இன்னும் இறுதி செய்யப்படவில்லை

## விதுர விக்கிரமநாயக்க விளக்கம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி குறித்து இதுவரையில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. அனைத்துத் தரப்பினரது கோரிக்கைகளும் முழுமையாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

கூட்டணியில் பங்குகொள்ளும் தரப்பினரது கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி தொடர்பில் வினவியபோது இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்து இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலை மையப்படுத்தி பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் கூட்டணியின் ஊடாகக் குறிப்பிடப்படுகின்றன.

சின்னம், இணைத்தலைமைத்துவம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதுவரையில் எவ்விதத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

மொட்டுச் சின்னத்திலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் போட்டியிட வேண்டும் என பொதுஜன பெரமுனவினரும், சின்னத்தை மாற்றி பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் எனச் சுதந்திரக் கட்சியினரும் குறிப்பிட்டுக் கொள்வது கவனத்திற்குரியது.

உத்தேச கூட்டணியை அடிப்படையாகக் கொண்டு கூறப்படும் கருத்துக்கள் அவர்களின் தனிப்பட்ட கருத்தாகும். அவற்றைக் கட்சிகளின் உத்தியோகபூர்வ தீர்மானம் என்று குறிப்பிட முடியாது.

பல கட்சிகளை ஒன்றுபடுத்தி கூட்டணி அமைக்கும் போது இறுதியில் தலைமைத்துவத்தின் தீர்மானங்கள் செயற்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கடலில் மிதந்த படகில் 3 கிலோ "ஐஸ்" மீட்பு!

(தலங்கம)

தலங்கம - குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்துக்கு அருகில் நேற்று முன்தினம் காலை "ஐஸ்" போதைப்பொருள் மீட்கப்பட்டது. குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்திலிருந்து வருகை தந்த மீனவப்படகொன்று திருகோணமலை கடற்பரப்பிலிருந்து 180 மைல்கல் தூரத்தில் மிதந்து கொண்டிருந்த போது கடற்படையினரால் குறித்த போதைப்பொருள் தொகை மீட்கப்பட்டது.

குறித்த மீனவப் படகில் 3 கிலோ 172 கிராம் "ஐஸ்" போதைப்பொருள் காணப்பட்டது. கடற்படையினரால் மீட்கப்பட்ட போதைப்பொருள் தலங்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீடமைப்புத் திட்டங்களுக்கு உள்ளூர் ஓடுகள் மாத்திரமே

(கொழும்பு)

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களுக்கு எதிர்காலத்தில் உள்ளூர் ஓடுகளை மாத்திரம் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கு அமைய எதிர்காலத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 14 ஆயிரத்து 22 வீடுகளுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஓடுகளைப் பயன்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரேணுக துஷ்யந்த தெரிவித்தார்.

பின்னடைவை எதிர்நோக்கியுள்ள ஓடு உற்பத்தி மற்றும் மட்பாண்ட உற்பத்திகளை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உற்பத்தியாளர்களுடன் விசேட கலந்துரையாடலும் நடத்தப்பட்டுள்ளது. (இ-114)

# சுதந்திரக்கட்சியுடன் தேர்தலுக்கு முன் கூட்டணி இல்லை - பெரமுன உறுதி

(கொழும்பு)

லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடையில் பொதுத் தேர்தலுக்கு முன்னர் கூட்டணி அமைக்கப்படமாட்டாது எனவும் மொட்டுச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ளதாகவும் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் ஒருவர் கூறியதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய கூட்டணியை பதிவு செய்ய வேண்டுமாயின் மார்ச் மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் முன்னர் அதனைச் செய்ய வேண்டும். அதற்காக இரண்டு வாரகாலமே இருக்கின்றது.

புதிய கூட்டணியை பதிவு செய்ய வேண்டுமாயின் அதனைச் விரைவாக செய்ய வேண்டும். எனினும் தற்போது அது தொடர்பான எந்த அவசரமும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்புக்கு இல்லை.

தெளிவாக தெரியும் விதத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் புதிய கூட்டணி குறித்து அக்கறை காட்டவில்லை. பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் விருப்பத்தில் அவர்கள் இருக்கின்றனர் எனவும் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ இலங்கை திரும்பிய பின்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது, அவரும் இந்த நிலைப்பாட்டிலேயே இருந்தார் எனவும் அந்த முக்கியஸ்தர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சஜித் கூட்டணியின் சின்னம், பெயர் குறித்து தீர்க்கமான முடிவு இவ்வாரம் அறிவிக்கப்படும்

## மத்தும பண்டார தெரிவிப்பு



(கொழும்பு)

வலுவான கூட்டணி குறித்து அனைத்து தீர்மானங்களும் எட்டப்பட்டுள்ள நிலையில், கூட்டணியின் சின்னம் மற்றும் பெயர் தொடர்பில் இவ்வாரத்தில் உறுதியாக அறிவிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் அமைக்கப்படும் கூட்டணியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் அண்மிக்கும் நிலையில், ஐக்கிய தேசிய கட்சிக்குள் சின்னம் தொடர்பில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. இது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தலில் பொதுக்கூட்டணியாக போட்டியிடுவது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு முடிவெடுத்திருந்த நிலையில் எந்தச்சின்னத்தில் களமிறங்குவது என்ற விடயத்தில் இரு தரப்பிற்கும் இடையில் இழுபறி நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் யானைச்சின்னத்தில் போட்டியிட வேண்டுமென்று ரணில் தரப்பினர் கூறியிருந்த நிலையில், அதற்கு தாம் இணக்கம் தெரிவிப்பதாகவும், உத்தியோக பூர்வமாக ஐக்கிய தேசியக் கட்சி அந்த சின்னத்தை கையளிக்கும் பட்சத்தில் தாம் பெற்றுக்கொள்வதாகவும் சஜித் அணியினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூட்டணியின் சின்னம் தொடர்பில், இறுதி முடிவு எடுக்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தது. யானை சின்னத்திலா, அல்லது அன்னம் சின்னத்திலா அல்லது வேறு ஏதேனும் சின்னத்திலா போட்டியிடுவது என்பது தொடர்பிலான தீர்க்கமான முடிவு இவ்வாரத்திற்குள் எடுக்கப்படும் என கூட்டணியின் பொதுச்செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# சட்டமா அதிபரை இலகுவில் நீக்க முடியாது! அந்நடவடிக்கையில் அரசு ஈடுபடவில்லை

## நீதி அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டமா அதிபரை இலகுவில் நீக்க முடியாது. அவ்வாறான எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன் சின்னம் முக்கியமில்லை. ஐக்கியமாகச் செயற்பட்டால் பொதுத் தேர்தலில் சிறந்த வெற்றியைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலை வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



இதுதொடர்பாக அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

சட்டமா அதிபர் தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை. அவரை நீக்கும் தேவையும் அரசாங்கத்துக்கு இல்லை. அரசியலமைப்பின் பிரகாரம் சட்டமா அதிபரை இலகுவில் நீக்கமுடியாது.

அத்துடன் சட்டமா அதிபர் அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்படுகின்றார். அதனால் அவரை இலகுவில் நீக்கமுடியாது.

அத்துடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அது தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியுமானவகையில் எமது திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பான இறுதி முடிவு எட்டப்படும் பட்சத்தில் அதனை நாங்கள் வெளிப்படுத்துவோம்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி தனித்தோ அல்லது கூட்டணி அமைத்தோ போட்டியிட்டாலும் எமக்கு அது சவால் இல்லை. அவர்களுக்குள் ஏற்படும் பிளவைப் பயன்படுத்திக்கொண்டு தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்ற தேவை அரசாங்கத்துக்கு இல்லை. எமது வேலைத்திட்டங்கள் மூலம் தேர்தலில் வெற்றிபெறும் சக்தி எமக்கிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2020-13.03.2020

## நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடிவரும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் வக்கிரம் பெற்று, சகாய ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பொதுவாக கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் யோகம் செய்ய வேண்டுமானால் வலிமை இழக்க வேண்டும். அந்த அடிப்படையில் வக்கிரம் பெற்ற புதனால் வளர்ச்சி கூடும் என்றே சொல்லலாம். எனவே தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

அரசுவழி ஆதாயங்கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். வேலைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

ஒரு சிலர், விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு, 'புதிய தொழில் தொடங்கலாமா?' என்று சிந்திப்பார்கள். குருவின் பார்வை இருப்பதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை.

அருள்தரும் குருவின் பார்வை உங்களுக்கு பொருள் வளத்தை பெருக்கும். புதிய திருப்பத்தை தரும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர்களின் நட்பால் ஒருசில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிவகுத்துக் கொள்வீர்கள். 'சில காரியங்கள் நடைபெறாமல் தடைப்பட்டு நிற்கிறதே, தடைகள் எப்பொழுதுதான் அகலுமோ' என்று காத்திருந்தவர்களுக்கு இப்பொழுது காரியங்கள் கைகூடும் நேரம் இது.

சப்தம ஸ்தானத்தில் சனி, கேது இருப்பதால், எந்த முயற்சியை தொடங்கினாலும், அதற்கு முன்பாக குடும்பப் பெரியவர்களை கலந்தாலோசித்து செய்வது நல்லது. இருப்பினும் ஜென்மத்தில் ராகுவும், 7 இல் கேதுவும் இருப்பதால் சர்ப்பக் கிரக ஆதிக்கத்தின் பிடியில் இருக்கிறீர்கள்.

எனவே நிலையான பலன் கிடைக்காமல் ஏற்றமும், இறக்கமும் வந்துகொண்டே இருக்கும். ஒருபுறம் கொடுத்த கடனை வாங்க முடியாது. மற்றொரு பக்கம் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ராகு-கேது பெயர்ச்சிவரை உங்களுக்கு பொறுமை தேவை.

இம்மாதம் மகா சிவராத்திரி வருகிறது. அன்றைய தினம் அருகில் இருக்கும் சிவாலயம் சென்று முழு நம்பிக்கையுடன் சிவனையும், உமையவளையும் வழிபட்டு வந்தால் கவலை இல்லாத வாழ்க்கை அமையும். சர்ப்ப சாந்திப் பரிகாரமும் செய்வது நல்லது.

வக்கிர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் புதன், வக்கிரம் பெற்று அஷ்டம ஸ்தானத்தில் இம்மாதம் 21 ஆம் திகதி அடியெடுத்து வைக்கின்றார். இது ஒரு பொற்காலமாகும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும். சேமிப்பு உயரும். திடீர் வரவு வந்து திருப்தியைக் கொடுக்கும்.

புத்திக்கூர்மையோடு செயற்பட்டு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். சொத்துக்களாலும் தனலாபம் உண்டு. சொந்தங்களாலும்நன்மை உண்டு. தாய் வழி ஆதரவோடு, தகுந்த பலன் காண்பீர்கள். நண்பர்களால் வளர்ச்சி கூடும். தளர்ச்சி அகலும். கிளர்ச்சி செய்தவர்கள் மனம் மாறி கேட்ட உதவிகளைச் செய்ய முன்வருவர். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புதிய திருப்பங்கள் பலவற்றைக் காண்பீர்கள். செல்வ நிலை ஒரு படி உயரும். சேமிப்புகளும் அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களுக்கு மாற்று இனத்தவர்கள் உறுதுணையாக இருப்பர்.




மேஷ சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு பஞ்சம விரயாதிபதியான சுக்கிரன், மாதத் தொடக்கத்தில் உச்சம்பெற்று சஞ்சரிக்கிறார். அவர் மார்ச் 2 ஆம் திகதி மேஷ இராசிக்கு வருகிறார். இதன் விளைவாக பிள்ளைகளால் பெருமை வந்து சேரும்.

வெளிநாட்டில் பணிபுரிய வேண்டும் என்று ஆசைப்பட்டவர்களுக்கு அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பீர்கள். முன்னோர்கள் கட்டிவைத்து சிதில மடைந்த கோவில்களுக்கு திருப்பணிகளைச் செய்ய முன்வருவீர்கள். காசி, இராமேஸ்வரம், ஹரித்துவார் போன்ற தலங்களுக்கு ஆன்மீகப் பயணங்களை மேற் கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

கும்ப புதன் சஞ்சாரம்

மார்ச் 12 ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். 4 ஆம் இடத்திற்கு அதிபதி 9ஆம் இடத்திற்கு வரும் பொழுது யோக ங்கள் பல வந்து சேரும். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். ஆரோக்கியத் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். 'எதிர்நீச்சல் போட்டாவது எண்ணியதை சாதித்து விட வேண்டும்' என்று நினைப்பவர்களுக்கு, காரியங்கள் அனைத்தும் இயல்பாகவே நிறைவே றும் தருணம் இது.

இம்மாதம் நடராஜர் அபிஷேகத்தன்று நடராஜர் வழிபாட்டையும், சிவராத்திரியன்று சிவபெருமானையும் வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான
சிறப்புப் பலன்கள்

ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழும் மாதம் இது. அக்கம் பக்கத்தினரால் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். இதுவரை இருந்து வந்த பொருளாதாரப் பிரச்சினை அகலும்.

புகுந்த வீட்டிற்கும், பிறந்த வீட்டிற்கும், பெருமை சேர்க்கு விதம் பாடுபடுவீர்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். தாய் வழி ஆதரவு திருப்தி தரும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள்.

குரு - மங்கள யோகம் இருப்பதால் சகோதர வர்க்கத்தினரால் உங்களுக்கு அதிக நன்மை கிடைக்கப் போகிறது. பிள்ளைகளின் படிப்பு மற்றும் வெளிநாடு யோகம் பற்றி சிந்தித்தவர்களுக்கு நல்ல தகவல் வரப்போகிறது.

உத்தியோகத்தில் இருக்கும் பெண்களுக்கு உயர்பதவிகளும், விருதுகளும் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் வாய்ப்புண்டு. சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்வதோடு, சிவராத்திரியன்று சிவனையும் வழிபடுங்கள்.



விகாரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 6ஆம் இடத்தில் குரு, செவ்வாய், சனி, கேது ஆகிய நான்கு கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. அஷ்டமத்தில் சூரியனும், புதனும் இருக்கிறார்கள். சுக்கிர பலம் உச்சத்தில் உள்ளது. என்னயிருந்தாலும் தனாதிபதி சூரியன் அஷ்டமத்தில் மறைவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பச்சுமை கூடும். செலவுகள் அதிகரிக்கும். கடுமையாக முயற்சித்தும் சில காரியங்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும்.

குருவின் பார்வை ஓன்றே உங்களுக்கு கைகொடுக்கப் போகிறது. அதன் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே திட்டமிட்ட காரியங்கள், கடைசி நேரத்தில் எப்படியாவது கைகூடிவிடும். உற்றார், உறவினர்கள் உங்கள் மீது பழி சுமத்தலாம். ஊர் மாற்றம் அல்லது வீடு மாற்றம் பற்றிய சிந்தனை உள்ளத்தில் உதிக்கும். சூரியனின் பார்வை வாக்கு ஸ்தானத்தில் பதிவதால், கோபம் அதிகரிக்கலாம். முன்கோபத்தால் முன்னேற்றப் பாதையில் சில சறுக்கல்கள் ஏற்படும்.

புதன் வக்கிர இயக்கத்தில் இருப்பது நன்மைதான். விரயாதிபதி வக்கிரம் பெறும் பொழுது, தேவைக்கேற்ற பணம் கடைசி நேரத்தில் வந்து சேரும். 'வாகனங்கள் பழுதாகி பாடாய் படுத்துகிறதே' என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம்' காட்டுவர். 'திட்டமிட்ட காரியங்களைச் செய்ய பணம் இல்லையே' என்று கவலைப்பட வேண்டாம். நண்பர்கள் ஒருசிலர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். பொன், பொருட்கள், ஆடை, ஆபரணங்கள் வாங்கும் நேரம் இது.

குருவின் பார்வை பதியும் இடங்கள் எல்லாம், நல்ல பலன்கள் ஏராளமாகக் கிடைக்கும். அந்த அடிப்படையில் 10ஆம் இடத்தைக் குரு பார்ப்பது யோகம்தான். 'பழைய தொழில் சரியாக நடைபெறவில்லையே' என்று கவலைப்பட்டவர்கள், இனி தொழில் மாற்றம் செய்ய முன்வருவர். மாற்றினத்தைச் சேர்ந்தவர்கள் பணம்போட்டு, பங்குதாரர்களாகச் சேரவும் முன்வருவர்.

இம்மாதம் மகா சிவராத்திரி அன்று சிவபெருமானை வழிபடுவது நல்லது. மேலும் நடராஜர் அபிஷேகத்தன்று நடராஜப் பெருமானையும் வழிபட்டு வந்தால் நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

## முன்னேற்றப் பாதைக்கு திரும்பும் நேரம்

வக்கிர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் இம்மாதம் 21ஆம் திகதி சப்தம ஸ்தானத்தில் வக்கிரம் பெறுகிறார். இக்காலத்தில் குடும்ப பிரச்சினைகள் கொஞ்சம் அதிகரிக்கலாம். மாமன், மைத்துனர் வழியில் மனக்கசப்புகள் ஏற்பட்டு அகலும். சேமிப்பில் கொஞ்சம் குறையலாம். திடீர், திடீர் என வெளியூர் பயணங்கள் அதிகரித்து அலைச்சலைக் கொடுக்கும். வேலை மாற்றங்களும், வீடு மாற்றங்களும் ஒருசிலருக்கு உருவாகலாம். உணர்ச்சிவசப்படுவதன் மூலம் உறவினர் பகை ஏற்படும். சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள். வெளிநாடு சென்று பணிபுரிய வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள், வேலை கிடைக்காமல் திரும்பலாம். பொறுமையும், நிதானமும் தேவைப்படும் நேரமிது.

மேஷ சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 11 இற்கு அதிபதியான சுக்கிரன், மார்ச் 2ஆம் திகதி தொழில் ஸ்தானம் எனப்படும் 10ஆம் இடத்




திற்கு வருகிறார். இதன் விளைவாக தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கேட்ட இடத்தில் தொகை கிடைக்கும். துன்பம் என்ற நான்கெழுத்து உங்களை விட்டு விலகும். இன்பம் என்ற நான்கெழுத்து இல்லம் தேடி வரும். கரைந்த சேமிப்பை ஈடுகட்டுவீர்கள். கடல் தாண்டி வரும் தகவல் காதினிக்கச் செய்யும். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். உயர்மட்ட அதிகாரிகள் உங்கள் மீது பாசம் காட்டி பல நல்ல வாய்ப்புகளை வழங்குவர்.

கும்ப புதன் சஞ்சாரம்

மார்ச் 12ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்திற்கு அதிபதி எட்டாம் இடத்திற்கு வரும்பொழுது 'விபரீத ராஜயோகம்' செயற்படும். நல்ல திருப்பங்கள் நாடிவரும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. சஞ்சலங்கள் அகலும். சந்தோஷங்கள் கூடும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். ஆக்கபூர்வமாகச் சிந்தித்து செயலாக்கி சில காரியங்களில் வெற்றி காண்பீர்கள். அரசியலில் அடியெடுத்து வைக்கும் யோகம் கூட ஒருசிலருக்கு உண்டு. பொதுவாக தடைகள் தானாக விலகும் நேரம் இது. கடை திறப்புவிழா, கட்டடத் திறப்புவிழா போன்றவைகளில் பங்கேற்பீர்கள்.

இம்மாதம் பௌர்ணமி அன்று மலை வலம் வருவதோடு, மகா சிவராத்திரி அன்று சிவபெருமானையும் வழிபட்டால் சிந்தித்த காரியங்கள் வெற்றியாகும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

குடும்ப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், இல்லத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். மனதளவில் நினைத்த சில காரியங்கள் மளமளவென்று நடந்து, உங்களை மகிழ்ச்சிப்படுத்தும். பெற்றோர்களுட்ன் பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை சிறப்பாக இருக்கும். இருப்பினும் வாக்கு ஸ்தானத்தைச் சூரியன் பார்ப்பதால் கோபத்தின் காரணமாக சில சமயங்களில் பிரச்சினைகள் உருவாகலாம். கொஞ்சம் பொறுமையோடு செயற்பட்டால் குடும்ப அமைதி கூடும். பிள்ளைகளின் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். மாதத்தின் மையப் பகுதியில் ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். பிள்ளைகளின் வேலை சம்பந்தமாக பணிபுரியும் இடத்தில் கொஞ்சம் பக்குவமாக நடந்துகொள்ளுங்கள். மற்றவர்களைப் பற்றி விமர்சிக்க வேண்டாம். குல தெய்வ வழிபாட்டை மேற்கொள்வதோடு, பௌர்ணமி அன்று கிரிவலம் வந்தால் நற்பலன்கள் வந்து சேரும்.

(தொடரும்)

# பயங்கரவாத செயற்பாட்டாளர்களுக்கு புனர்வாழ்வு சிறப்புப் பிரிவு பாதுகாப்பு அமைச்சில் உருவாக்கம்

## தலைவராக தர்ஷன நியமனம்



(கொழும்பு)

ஐ.எஸ்.பயங்கரவாதச் செயற்பாட்டாளர்களுக்கு குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களோடு தொடர்புடையவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதை விசேட நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள புனர்வாழ்வுப் பிரிவின் தலைவராக இராணுவத்தின் யாழ்.மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களைத் தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் சர்வதேச பயங்கரவாத மற்றும் மத, மொழி, இன ரீதியான தீவிரவாத ஒழிப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு இச்சிறப்புப் பிரிவின் தலைவராக தர்ஷன ஹெட்டியாராச்சி நியமிக்கப்பட்டார்.

அதற்கு மேலதிகமாகவே புனர்வாழ்வுப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இரு சிறப்புப் பிரிவுகளும் ஒன்றோடு ஒன்று மிக நெருக்கமாக தொடர்புபட்டவையாக ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றன.

புலிகள் இயக்க செயற்பாட்டாளர்கள், போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள், சூதாட்டக்காரர்கள் போன்றவர்களுக்கும் இப்புதிய பிரிவு மூலமாக புனர்வாழ்வு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் அடங்கலாக நாடு பூராகவும் புனர்வாழ்வு மையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களால் குற்றவாளிகளாகக் காணப்பட்டு, புனர்வாழ்வு வழங்க உத்தரவிடப்படுபவர்களை இம்மையங்களுக்கு அனுப்பி புனர்வாழ்வு வழங்கிய பிற்பாடு சமூகத்தோடு இரண்டறக் கலக்க வைத்து நற்பிரஜைகளாக வாழ வைப்பது இப்பிரிவின் நீண்டகால பிரதான இலக்கு என்று தெரிவிக்கப்படுகிறது.

மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி கடந்த வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக புதிய கடமையைப் பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கார் மோதி பாலகி பலி!

(வெல்லவாய)

வெல்லவாய - வீரவில வீதியில் குடாஓய பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் 5 வயதுச் சிறுமி உயிரிழந்தாள்.

குறித்த சிறுமி வீதியைக் கடக்க முற்பட்ட போது கார் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானாள்.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமி வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஊவ குடாஓய, ஹல்மில்லவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 5 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்தாள்.

விபத்து தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் குடாஓய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பரிசளிப்பும் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

கெக்குழு சிறுவர் கழக கலாசார இலக்கியப்போட்டி பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பும் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வலி.வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.சமுர்த்திப் பணிப்பாளர் க.மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி காங்கேசன்துறை முகாமையாளர் திருமதி சங்கீதா தயானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-7-105)

# விவசாய அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

2020 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி அறவீடும் விவசாய அடையாள அட்டை பதிவும் கைதடி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களால் நாளை 17, நாளை மறுதினம் 18 ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய்) முற்பகல் 9.30 மணி முதல் நாவற்குழி பொதுநோக்கு மண்டபத்தில் (அறநெறிப் பாடசாலை மண்டபம்) நடைபெறும்.

எனவே பின்வரும் ஆவணங்களுடன் விவசாயிகள் சமுகமளிக்குமாறும் உரவினியோக காலத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியாத காரணத்தாலும் எதிர்வரும் விவசாய நடவடிக்கை தொடர்பில் புள்ளி விபரங்கள் வழங்குவதற்கு வசதியாகவும் குறிப்பிட்ட திகதிகளில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**கொண்டுவரவேண்டிய ஆவணங்கள் ஏக்கர் வரி செலுத்தல்**

கடந்த வருட ஏக்கர் வரி பற்றுச்சீட்டு அல்லது நிழற்படப் பிரதி, 2020 ஆம் ஆண்டுக்கான கமக்காரர் அமைப்பு சந்தா பற்றுச் சீட்டுப் பிரதி 120/=, ஏக்கர் வரி செலுத்தப் பணம்

**விவசாய அடையாள அட்டை பெற்றுக்கொள்ள தேவையான ஆவணங்கள்**

கடவுச்சீட்டு அளவுப் படம் (நீலப்பின்னணி), குடும்பப் பதிவு அட்டை, 250/= ரூபா செலுத்தப்பட்ட கமக்கார அமைப்பு பற்றுச்சீட்டு 120/= ரூபா கமக்கார அமைப்பு வருடாந்த சந்தா பற்றுச்சீட்டு (ஏக்கர் வரி செலுத்த மற்றும் அடையாள அட்டை) கமநல வங்கிக் கணக்கு புத்தகம் அல்லது கணக்குத் திறக்க பணம், வயற்காணி பதிவு பற்றுச்சீட்டு என்பனவாகும்.(இ)

# நகரசபையாகும் சாய்ந்தமருது! மக்கள் இரவிரவாகக் கொண்டாட்டம்



(சாய்ந்தமருது)

நகரசபை வழங்கப்பட்டதாக வெளியான தகவலையடுத்து சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் முன்பாக மக்கள் நேற்று முன்தினம் இரவு முழுவதும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பிரதான வீதியில் போக்குவரத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டதுடன் அதனைச் சீர்செய்யும் முகமாக கல்முனை போக்குவரத்துப் பொலிஸார் கடமைகளை மேற்கொண்டனர்.

மேலும் மக்கள் திரளாகக் கூடி பாதசாரிகளுக்கு இனிப்பு வழங்கிக் கொண்டாடியதுடன், வெடிகளும் கொளுத்தப்பட்டன.

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபையிலிருந்து பிரிந்து சாய்ந்தமருது நகரசபை புதிதாக உதயமாகின்றது.

இதனை, நீண்டகாலமாக முன்னெடுத்த ஜனநாயகப் போராட்டத்திற்குக் கிடைத்த ஒரு வெற்றியாக மக்கள் பார்க்கின்றனர்.

சாய்ந்தமருது மக்களைப் போன்றே கல்முனையில் தனிப் பிரதேசம் கேட்கவில்லையாயினும் நிர்வாக ரீதியில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என அழைக்கப்படும் தமிழ் பிரதேச



செயலகம் தரம் உயர்வு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெளிநாட்டில் பணியாற்றுபவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டியது அரசின் பொறுப்பு-மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையர்களுக்காக அரசாங்கம் புதிய நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையர்கள் நாட்டிற்கு வழங்கும் ஆதரவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.



அதற்கமைய வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பணியாளர்களின் பிள்ளைகளின் செயற்பாடு தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவணியைத் தேடித் தரும் தரப்பாக வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையர்களைக் கருத வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மாதம்பிட்டியவில் இரட்டைக்கொலை மற்றுமொரு சந்தேகநபர் கைது

(வெல்லம்பிட்டிய)

மாதம்பிட்டிய பிரதேசத்தில் இரண்டு பேரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரிடம் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்த சந்தேகநபர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சந்தேகநபரிடமிருந்து கொலைக்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி மாதம்பிட்டிய பொது மயானத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு குறித்த இரட்டைக் கொலை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டுத்துவக்கு வெடித்ததில் சகோதரர்கள் படுகாயம்

(முறிகண்டி)

கட்டுத்துவக்கு வெடித்ததில் சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்தனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது. கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு ப்குதியில் கால்நடைகளை அழைத்துச் சென்றபோது, வேட்டையாடப்படுவதற்காக பொறி வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்துள்ளது.

குறித்த சம்பவத்தில் கால் பகுதியில் படுகாயமடைந்த நிலையில் இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2-100)

# குளம் கையளிக்கும் நிகழ்வு



(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி, பச்சிலைப்பள்ளி, பிரதேச செயலர் பிரிவில் உள்ள மூன்று பாரிய குளங்கள் 17 மில்லியன் ரூபா செலவில் ஐ.எல்.ஓ. நிறுவன நிதிப்பங்களிப்பில் புனரமைக்கப்பட்டு அப்பகுதி விவசாயிகளிடம் கையளிக்கும் நிகழ்வும் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பும் கிளிநொச்சி கனகபுரத்திலுள்ள நண்பர்கள் விருந்தக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

ஐ.எல்.ஓ.நிறுவன மாலைதீவு, ஸ்ரீலங்கா நாடுகளுக்குரிய பணிப்பாளர் திருமதி சிம்ரன் சிவ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் தொழில்நுட்ப ஆலோசகர் ஐ.எல்.ஓ. தோமஸ்றின், பொறியியலாளர் பிறேம்குமார், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் எஸ்.ஆயரூபன் உட்பட பலர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (ஜ-2-84)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு நரம்பியல் வைத்திய நிபுணர் நியமனம்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு வரலாற்றில் முதற் தடவையாக நரம்பியல் வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் வரலாற்றில் இதுவரை காலமும் நரம்பியல் வைத்தியர் ஒருவர் இன்றியே காணப்பட்டு வந்த நிலையில் முதற் தடவையாக தற்போது நரம்பியில் வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

இதுவரை காலமும் நரம்பியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் வவுனியா வைத்தியசாலைகளுக்குச் சென்ற நோயாளிகள் இனிவரும் நாட்களில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தமது சிகிச்சையை பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2-9-350)

## வங்கிக் கடன்களால்

# நெல் கொள்வனவு சாத்தியமற்றது

## கூட்டுறவுச் சங்கங்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளிடம் இருந்து நெல்லினைக் கொள்வனவு செய்வது சாத்தியமற்றதாக மாறியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த இருபது நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் வியாபாரிகள் விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதாகத் தெரிவித்த நிலையில் முல்லைத்தீவு மாவடடச் செயலகத்தில் அவசரக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் வங்கிகளிடம் இருந்து கடன்களைப் பெற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபடுவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது. மாவட்டச் செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் நெல் சந்தைப்படுத்தும் சபை நெல் கொள்வனவில் ஈடுபட்டுள்ள போதிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நெல் கொள்வனவில் ஈடுபட முடியவில்லை. காரணம் வங்கிகளிடம் இருந்து கடன் பெற முடியாத நிலை. ஏற்கனவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல வங்கிகளிடம் இருந்து பெற்ற கடன்களை முழுமையாகச் செலுத்தி முடிக்காமை எனப் பல காரணங்களால் வங்கிகளிடம் இருந்து கடன்களைப் பெற முடியாத நிலையில் இவ்வாண்டு காலபோக நெல்லினை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமைகள் தொடர்பான விபரங்களை தற்போது திரட்டி வருகின்றது. வரும் சிறுபோகத்தில் தான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளிடம் இருந்து நெல்லினைக் கொள்வனவு செய்யக் கூடிய நிலைமை உருவாகும் எனத் தெரிவிக்கப் படுகின்றது. (ஜ-2-350)

# சட்டவிரோத மணல் அகழ்வு 9 பேர் பொலிஸாரால் கைது

## இரு உழவியந்திரங்கள் கைப்பற்றல்

(அக்கராயன்)

கிளிநொச்சியில் அண்மைக் காலமாக இயற்கை வளத்தை சுரண்டும் நோக்கில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்ற வண்ணம் உள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த அதிகாரிகள் பலவிதமான முயற்சிகள் எடுத்தபோதும் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் அதிகாரிகளுக்கும் அச்சுறுத்தல்கள் விடுப்பதால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுகுளம் அண்மித்த நாச்சிக்குடா பகுதியில் நேற்று முன்தினம் மாலை சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு உழவியந்திரங்களும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2-350)

# பிள்ளைகளை ஒழுக்கத்துடன் வளர்க்காவிட்டால் மிக மோசமான சமூகமாக எமது இனம் மாறும்

## சிறீதரன் எம்.பி.எச்சரிக்கை

(முறிகண்டி)

பெற்றோர்கள் பிள்ளைகளை ஒழுக்கத்துடன் வளர்க்காவிட்டால் மிக மோசமான சமூகமாக எமது இனம் மாறும் நிலையே ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி உருத்திரபுரம் சக்திபுரத்தில் அமைக்கப்பட்ட ஜமுனன் முன்பள்ளிக்கான புதிய கட்டடத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அக்காலப்பகுதியில் தனியான கட்டமைப்புக்களை உருவாக்கி முன்பள்ளிகளை தரமாக வழிநடத்தினர். ஒரு விடுதலை அமைப்பால் இதனை கொண்டு செல்ல முடியும் எனில் ஏன் ஓர் அரசாங்கத்தினால் கொண்டு செல்ல முடியாதுள்ளது.

ஒவ்வொரு அரசாங்கங்களும் ஆட்சிக்கு வரும்போது புதிய புதிய கல்விக்கொள்கைகளை உருவாக்குகின்றன. ஆனால் கல்வியில் முன்னேற்றம் எட்டப்படுவதில்லை. இலங்கையின் கல்விக்கொள்கைகள் அவ்வப் போது அரசியல் இருப்புக்காக உருவாக்கப்படுகின்றன. இலங்கையின் கல்விக்கொள்கை மாறாத வரையில் கல்வியில் எந்த முன்னேறத்தையும் அடைய முடியாது.

நாட்டின் வழிகாட்டிகளாக பல்கலைக்கழகங்கள் இருக்கும் அதேவேளை அவை உயர்ந்த பார்வையில் பார்க்கப்படுகின்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் கிளிநொச்சி வளாக மாணவர்கள் தமது பல்கலைக் கழகத்தின் பெயரைக்கூற வெட்கப்படுகிறார்கள். அரசியல் என்பதற்கு அப்பால் எமது சமூகம் தவறான பாதையில் செல்கின்றது.

இந்நிலையில் பெற்றோர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் எமது பிள்ளைகளின் வளர்ப்பு முறைகள் தொடர்பில் திரும்பிப் பார்க்க வேண்டும். இளம் சமுதாயம் ஏன் இவ்வாறானதொரு நிலைக்குச் சென்றுள்ளது என்பது தொடர்பில் நாம் ஆராய வேண்டும். எமது வளர்ப்பு முறையில் குறைபாடுகள் உள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும்.

இனிவரும் காலங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை ஒழுக்கத்துடன் வளர்க்காது போனால் மிக மோசமான சமூகமாக எமது இனம்மாறும்நிலையே ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-9-100-312)

## உப உணவுப் பயிர்ச்செய்கையில்

# விவசாயிகள் கூடுதலாக ஈடுபட வேண்டும்

## கிளி.மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற வறுமை நிலையால் போசாக்கு மட்டம் குறைந்திருப்பதன் காரணமாக விவசாயிகள் உப உணவுப் பயிர்ச் செய்கையில் கூடுதலாக ஈடுபட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.அற்புதச்சந்திரன் தெரிவித்தார். வன்னேரிக்குளம், கண்ணகைபுரம் கிராமங்களில் அண்மையில் நடைபெற்ற பயிர்ச் செய்கைக் கூட்டங்களில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மாவட்டத்தின் விவசாயிகள் நெல்லினையே கூடுதலாக பயிர்ச் செய்கையாக மேற்கொள்கின்றனர். ஆனால் நெல்லினை விட உப உணவுப் பயிர்ச் செய்கை இலாபகரமானது. நீர்ச் சிக்கனம் மிகுந்தது. மாவட்டத்தில் நிலக்கடலை, கௌபி, பயறு உட்பட உப உணவுப் பயிர்களின் விலைகள் அதிகமாகவுள்ளன. இதனைக் கூடுதலாக விவசாயிகள் செய்கை மேற்கொள்வதன் மூலம் பெரும் பயனடைய முடியும். கிளிநொச்சி மாவட்டத்தின் வறுமையினை இல்லாது ஒழித்து போசாக்கு மட்டத்தினை அதிகரிப்பதற்கு உப உணவுப் பயிர்ச் செய்கை அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2-350)




வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களம் பூநகரி பிரதேச செயலக அனுசரணையுடன் மகளிர் அபிவிருத்தி நிலைய ஒழுங்கமைப்புடன் பூநகரி பிரதேச செயலக பழைய வளாகத்தில் கடந்த ஒரு வருடகாலமாக நடைபெற்ற மனைப்பொருளியல் டிப்ளோமா பயிற்சி நிறைவடைந்து பயிற்சி நிறைவு நிகழ்வும் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன. இந் நிகழ்வில் பூநகரி பிரதேச உதவிச் செயலர் திருமதி பார்த்தீபன் கிரிஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அத்துடன் கிராம அபிவிருத்தி அலுவலக மாவட்ட சமூகசேவை அலுவலர் உட்பட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

தனது திறமைகளை காலத்தில்
பயன்படுத்திக்கொள்ளத்
தெரிந்தவனே அறிவாளி —யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆனந்தசுதாகரனின் பிள்ளைகளை ஜனாதிபதியிடம் கூட்டிச் செல்லுங்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்திருந்தார்.

இதில் விசேடமாக தமிழ் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனையும் ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரன் சிறைத்தண்டனையை அனுபவித்து வருபவர்.

கடந்த வருடம் அவரின் மனைவி நோய் காரணமாக இறந்துபோக, அவரது இரண்டு சிறுபிள்ளைகளும் அநாதைகளாயினர்.

மனைவியின் மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்காக ஆனந்தசுதாகரனை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கிளிநொச்சிக்கு அழைத்து வந்தனர்.

இறுதிக்கிரியை முடிந்து உடல் எடுத்துச் செல்லப்பட, ஆனந்தசுதாகரன் சிறைச்சாலை வாகனத்தில் ஏறுவதற்குச் சென்றார்.

அப்போது அவரது பெண் குழந்தை தந்தையின் பின்னால் சென்று தானும் சிறைச்சாலை வாகனத்தில் ஏறமுற்பட்ட சம்பவம் அங்கு நின்ற அனைவரையும் அழ வைத்தது.

அதிலும் குறிப்பாக மேற்படி சம்பவத்தைப் பார்த்த சிறைக்காவலரும் கண்ணீர் விட்டு அழுதார்.

இந்தத் துன்பமான நிகழ்வைத் தொடர்ந்து, ஆனந்தசுதாகரனின் இரண்டு பிள்ளைகளும் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு அன்றைய வடக்கின் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஏற்பாடு செய்திருந்தார்.

இரண்டு பிள்ளைகளும் ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்தபோது, அடுத்த புதுவருடத்தில் உங்கள் தந்தை உங்களோடு இருப்பார் என்று உறுதிபடக் கூறினார்.

ஜனாதிபதி கூறியதை நம்பிய பிள்ளைகள் மன ஆறுதலோடு வீடு திரும்பினர்.

ஆனால் அந்தச் சிறுபிள்ளைகளுக்கு ஓர் உண்மை தெரிந்திருக்கவில்லை.

அதாவது நாங்கள் தமிழ்ப் பிள்ளைகள். எனவே எங்களுக்கு அவர்கள் தருகின்ற உறுதி மொழிகள் நிறைவேற்றப்படமாட்டாது என்பது பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தக் குழந்தைகளுக்குக் கொடுத்த வாக்குறுதியைக்கூட நிறைவேற்றி வைக்காமல் போய்விட்டார்.

எனினும் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தானே சிறைக்கு நேரில் சென்று, தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட்டதுடன் ஆனந்தசுதாகரனையும் பார்த்துள்ளார். இது ஒரு முன்னேற்றகரமான செயலாகும்.

எனவே வடக்கின் ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள் ஆனந்தசுதாகரனின் பிள்ளைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கூட்டிச் சென்று சந்திக்க வைக்க வேண்டும்.

தாயை இழந்த அந்தப் பிள்ளைகள் தந்தையோடு வாழ்வதற்கு இந்தச் சந்திப்பு உதவும் என்பதால், வடக்கின் ஆளுநர் இந்தப் புண்ணிய கருமத்தைச் செய்வார் என நம்பலாம்.

### உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் முயற்சியாளர்களுக்கு

# நாட்டில் புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான தொழில் முயற்சிகளை விரிவுபடுத்த வேண்டும்-ஜனாதிபதி

(கொழும்பு)

தேவையற்ற அதிகார தலையீடுகள் மற்றும் அதிக சட்டதிட்டங்களை நீக்கி உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் நாட்டில் புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்மூலம் வர்த்தக துறைக்கு வசதிகளை வழங்கக்கூடிய எளிமையான வினைத்திறன்மிக்கதும் முறையானதுமான கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டும். இதற்காக விரிவான உதவியை வழங்குவதற்கு சட்டத்துறையை சேர்ந்தவர்களுக்கு முடியுமென்றும் நேற்று முன்தினம் நீர்கொழும்பில் நடைபெற்ற "தேசிய சட்ட மாநாடு 2020" இல் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வருடாந்தம் ஏற்பாடு செய்யும் மாநாட்டின் இவ்வருட கருப்பொருள் "இலங்கை நீதி மற்றும் வர்த்தக மையம்: நோக்கு, சவால்கள். மற்றும் வாய்ப்புகள்" என்பதாகும்.

விரிவான பல்வேறு துறைகளினூடாக துரிதமாக அபிவிருத்தியடைந்துவரும் தொழிநுட்ப முறைமைகள் பூகோள வர்த்தக மற்றும் தொழிற்துறைகளில் பாரியமாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளன். இந்த மாற்றங்களுடன் இலங்கையும் முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார். துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கி புதிய மாற்றங்களின் ஊடாக வழங்கப்படும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

துரித தொழிநுட்ப மாற்றங்களுடன் உலகின் மிக முக்கிய சந்தையாக ஆசியா கேந்திர நிலையமாக திகழ்கிறது. ஆசியாவின் எழுச்சியை எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்கு அதிகபட்சம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்காக சிறிய நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் முறைமைகளை உருவாக்க வேண்டியதன் தேவையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு தனது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக தெரிவித்தார். (ம-3)

## பொதுக்கூட்டம்

வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் 2020 ஆண்டு கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபைகளுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 2020.02.19 ஆந் திகதி புதன்கிழமை பிரதேச செயலாளர் தலைமையில் பிற்பகல் 3.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இதில் வலி.தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கலைஞர்கள் கலை ஆர்வலர்கள் மற்றும் கலை மன்ற உறு--ப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார் (ம)

## வவுனியாவில் பேருந்து மோ.சைக்கிள் விபத்து

### பெண் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஏ9 வீதி தாண்டிக்குளம பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற பேருந்து-மோ.சைக்கிள் விபத்தில்ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையில் இருந்து வவுனியா நோக்கி சென்ற இ.போ.ச பேருந்து தாண்டிக்குளம் சந்திக்கு அண்மித்த போது முன்பாக சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மதிவண்ணன் சிவகுமாரி (40) என்ற பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்டபொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-3,299)

## மீனவக் கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

மீனவக் கலாசார விழா நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9மணிக்கு கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது

மீனவ மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அவர்களின் கலை கலாசாரத்தை முன்னிலைப்படுத்தி குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு கடற் தொழில் நீரியல்வளப் பிரதி அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்

(ம-3,10)

## திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர்

### பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற திருட்டுக் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இருவரை பொலிஸா் கைது செய்துள்ளனர்

யாழ்ப்பாணத்தில் மிக அண்மைக் காலங்களில் இடம்பெற்ற வழிப்பறி மற்றும் நகைக்கொள்ளை ஆகிய குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் (ம-3,10)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை


**யாழ்.பிரதேசத்தில்** வதிரி, தேவரையாழி, அல்வாய், திக்கம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** புதுக்குளம் கோவில்குளம் கிராமம், இலுப்பைக்குளம், பகல அளுத்வத்த கிராமம், சாம்பல்தோட்டம், மதவுவைத்தகுளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**பிடித்த காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதை விட செய்யும் காரியத்தை நமக்கு பிடித்ததாய் மாற்றிக் கொள்ள வேண்டும். -ஷேக்ஸ்பியர்**

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய் அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும்போதே செய்.
- கடவுளே உங்களுள் செயலாற்றுகிறார், அவரே தமது திருவுளப்படி நீங்கள் செயற்படுவதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும் தருகிறார்.
- இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவர் இறை மக்களுக்கான ஒளிமயமான உரிமைப் பேற்றில் பங்குபெற உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கிஉள்ளார்.
- மனவலிமை கொண்டவர்களாகிய நாம் வலுவற்றவர்களின் குறைபாடுகளைத் தாங்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.
- நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.
- கருணை நிறைந்தவர் தம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து உண்பர் அவரே ஆசி பெற்றவராகிறார்.
- நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம் கொண்டவை, பகைவர் தரும் முத்தங்களோ வெறும் முத்தப்பொழிவே.




கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (படங்கள்: கிளி.குமார்)

# ஒலிம்பிக் போட்டிகள் திட்டமிட்டவாறு நடைபெறும்

## ஒலிம்பிக் நிர்வாகம் அறிவிப்பு



கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியிலும் 2020 டோக்கியோ ஒலிம்பிக்கானது திட்டமிட்டவாறு நடத்தப்படும் என்று ஒலிம்பிக் நிர்வாகத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சீன நகரமான வுஹானில் கொரோனா வைரஸ் 64 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை பாதிப்படையச் செய்துள்ளதுடன், 1500 பேரை உயிரிழக்கவும் செய்துள்ளது.

இந் நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைக்கு அமைவாக ஒலிம்பிக் விளையாட்டுக்களை இரத்து செய்வதோ அல்லது அதனை ஒத்தி வைக்கவோ தற்போது வரை எந்தத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என சர்வதேச ஒலிம்பிக் நிர்வாகத்தின் உறுப்பினர் ஜோன் கோட்ஸ் தெரிவித்தார்.

அதன்படி ஜூலை 24 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த ஒலிம்பிக் போட்டிகளானது தடையின்றி இடம்பெறுவதுடன், ஜப்பான் வரும் சீனர்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றோம்.

சீன அணியினர் இப்போது பெரும்பாலும் சீனாவிற்கு வெளியே உள்ளனர். பயிற்சி மற்றும் தகுதி நிகழ்வுகளுக்கான விளையாட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகள் ஜப்பான் வரத் திட்டமிட்டால் சீனாவைத் தவிர வேறு நாட்டிலிருந்து அவர்கள் வரலாம். அதில் எமக்கு எந்தவொரு சிக்கலும் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஆசியாவில் பல விளையாட்டு நிகழ்வுகள் ஏற்கனவே பாதிக்கப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# தென்னாபிரிக்காவிற்கு பதிலடி கொடுத்தது இங்கிலாந்து அணி




தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில் இங்கிலாந்து அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 1-1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றியது.

டர்பன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 204 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பென் ஸ்டோக்ஸ் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் ஜேஸன் ரோய் 40 ஓட்டங்களையும் மொயின் அலி 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில், லுங்கி ங்கிடி 3 விக்கெட்டுகளையும் என்டில் பெலுக்வாயோ 2 விக்கெட்டுக்களையும் டப்ரைஸ் சம்ஸி மற்றும் டுவைன் பிரிடோரியஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 205 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்க அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 202 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் இங்கிலாந்து அணி இரண்டு ஓட்டங்களால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது தென்னாபிரிக்க அணி சார்பில், குயிண்டன் டி கொக் 65 ஓட்டங்களையும் ராஸ்ஸி வெண்டர் டஸன் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும் டெம்பா பவுமா 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், டொம் கர்ரன், கிறிஸ் ஜோர்தான் மற்றும் மார்க் வுட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் பென் ஸ்டோக்ஸ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 11 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 3 பவுண்ரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களை பெற்ற இங்கிலாந்து வீரர் மொயின் அலி தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான இருபது-20 போட்டி இன்று சென்சூரியனில் நடைபெறும். (ஜ-2)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# ஐ.பி.எல்.தொடரின் ஆரம்ப நாள் பிற்போடப்படுமா?

## ஐ.சி.சியின் அறிவிப்பால் குழப்பம்




இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கோரிக்கையை சர்வதேச கிரிக்கெட் சபை நிராகரித்துள்ள நிலையில் ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப நாள் பிற்போடப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஐ.பி.எல்.இருபது-20 தொடர் தொடங்கும் நாளன்று ஐ.சி.சி. கூட்டம் நடைபெறவிருப்பதால், கூட்டத்தினை ஒத்திவைக்க வேண்டுமென இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கோரிக்கை விடுத்தது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி முதல் நடைபெறுகின்றது. இந்த கூட்டத்தில் 2023 ஆம் ஆண்டு முதல் 2031 ஆம் ஆண்டு வரையிலான டெஸ்ட் போட்டி அட்டவணையை நான்கு நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியாக மாற்றுவது குறித்து முடிவு எடுக்கப்படவுள்ளது.

இதேவேளையில் இந்தியாவில் நடத்தப்படும் ஐ.பி.எல். இருபது-20 தொடர் 29 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஐ.பி.எல்.தொடர் ஆரம்பமாகும் நாளில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர்கள் மற்றும் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் ஐ.சி.சி.கூட்டத்தில் இருக்க வேண்டும். அதனால் ஐ.சி.சி. கூட்டத்திற்கான திகதியை ஒத்தி வையுங்கள் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வேண்டுகோள் விடுத்தது. ஆனால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் வேண்டுகோளை ஐ.சி.சி நிராகரித்துள்ளது.

கூட்டத்திற்கான திகதி ஏற்கனவே முடிவு செய்யப்பட்டதால், பயணம், அதிகாரிகள் தங்குமிடம் மற்றும் கூட்டம் நடைபெறும் இடம் என அனைத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது.

எனவேதான், திகதியை ஒத்தி வைக்க முடியாது என ஐ.சி.சி. தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது. (ஜ-2)

## அமெரிக்க காங்...

இலங்கையின் இராணுவ தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க நேற்றுமுன்தினம் தடை விதிக்கப்பட்ட நிலையில் இரண்டு நாட்டு உயர்தரப்பினரும் மேற்கொண்ட முதல் சந்திப்பு இதுவாகும்.

சட்டவிரோத கொலைகள் உட்பட்ட போர்க்குற்றம் தொடர்பிலான நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்தமையை அடுத்தே சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நேற்றைய சந்திப்பின் போது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பு உள்ளதை காங்கிரஸ் உறுப்பினர் பேரா மகிந்த ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டினார். (ம-3)

## தற்கொலை...

பாதியில் அழிக்காதே என, நேற்றைய தினம் யாழ். பேருந்து தரிப்பிடத்துக்கு முன்னால் கைகொடுக்கும் நண்பர்கள் மற்றும் ஸ்ரீ லங்கா சுமித்திரேயோ அமைப்பினால் விழிப்புணர்வு நடவடிக்கை இடம்பெற்றது.

யாழில் அதிகரித்துள்ள தற்கொலைச் சம்பவங்களுக்கு எதிரான வாசகங்களை ஏந்தியவாறு "மன உளைச்சல்களுக்கு உள்ளாவோர் மனம் விட்டுப் பேசுங்கள்" என்ற சுலோகங்களை ஏந்தியவாறு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கை இடம்பெற்றது. (ம-3,10)

## ஐ.நா உறுப்பு...

திகதி ஆரம்பமாகவுள்ளது.

கூட்டத்தொடருக்கு முன்னர் ஜெனிவாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற உறுப்பு நாடுகளுடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்துகொண்டிருந்தார்.

இந்த சந்திப்பு தொடர்பில் அவர் ஜெனிவாவிலிருந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது, இலங்கை தீர்மானத்தில் இணங்கிய விடயங்கள் அனைத்தையும் செய்து முடிக்கும் வரை மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என தாம் கோரியதாகக் குறிப்பிட்டார்.

அதுவே பாதிக்கப்பட்ட தரப்பினுடைய எதிர்பார்ப்பு என திட்டவட்டமாக தாம் கூறியதாகவும் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (ம-3)

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/02/15
சீட்டிழுப்பு இலக்கம் 1504
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 06 13 56 61
05 55
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 15-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2393
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 17 38 50 72
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15.02.2020
சீட்டிழுப்பு இலக்கம் 1018
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 0 2 3 5 9 0
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 15/02/2020
சீட்டிழுப்பு இலக்கம் 262
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 09 38 44
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

## சைவ வீதிப் பெயர்...

ளது.

மேற்படி வீதிகளின் பெயர் மாற்றம் தொடர்பாக ஊர்காவற்றுறை பிரதேச சபை விளம்பரப்படுத்தியுள்ளமை தொடர்பாக சைவ மகா சபை ஆட்சேபனை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தீவகத்தின், பாரம்பரியமிக்க துறைமுக நகரான காவலூர் பண்டைய அழகிய சைவத் தமிழ் கிராமங்களையும் அந்நிய ராட்சியின் பின் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கி கத்தோலிக்க மக்களை கொண்ட கிராமங்களையும் கொண்டமைந்த பிரதேசமாகும்.

இந்நிலையில் அங்குள்ள சைவ ஆலய வீதிப் பெயர்கள் சில வருடங்களுக்கு முன்னர் தான்தோன்றித்தனமாக மாற்றப்பட்டு மாற்றுமத பெயரப்பலகைகள் இடப்பட்டுள்ளன. பதிவேடுகளில் உள்ள பெயர்களுக்கு முரணாக, சபையினதோ மக்களினதோ அனுமதி இன்றி தவறாக அப்போது செய்யப்பட்ட இந்த பெயர் மாற்றங்களை, இப்போது திட்டமிட்டு சட்டபூர்வமாக மாற்ற முனைவது தவறான முன்னுதாரணமாகும்.

ஊர்காவற்றுறையில் சைவர்களும் கத்தோலிக்கர்களும் மத நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் சைவ ஆலயத்தின் பெயரைத் தாங்கிய வீதிகளின் பெயர்களை மாற்றம் செய்ய முனைவது மக்களின் நல்லிணக்கத்தை பாதிக்கும் செயலாகும்.

எனவே, இம் முயற்சியை கைவிடுமாறும் பதிவேடுகளில் தொன்றுதொட்டு - சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை - வழக்கிலிருந்த உண்மையான, பதிவேடுகளில் உள்ளமை போன்று பெயர்களைக் காட்சிப்படுத்துமாறு சைவத்தமிழ் மக்கள் சார்பாக சைவ மகா சபையினராகிய நாங்கள் ஊர்காவற்றுறை பிரதேச சபையை கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தொலைபேசி...

படும் பகிடிவதை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களின் தொலைபேசி தரவுகள் மற்றும் இணையத் தரவேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கிளிநொச்சி குற்ற விசாரணை பொலிஸ் பிரிவுக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. யாழ் பல்கலை கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் கல்வி பயிலும் மாணவிகள் மீது அப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் ஆண் மாணவர்களால் பாலியல் ரீதியான பகிடிவதைகள் இடம்பெற்றதாக கடந்த வாரம் பல சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளிவரத் தொடங்கின.

இவ்வாறு வெளியிடப்பட்ட கருத்துக்களில் அநேகமாக தொலைபேசி உரையாடல்கள் மற்றும் சம்பந்தப்பட்டதாக கருதப்படும் மாணவர்களின் ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களினால் வெளியிடப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தியது

இந்நிலையில் கிளிநொச்சி குற்றப் பிரிவு பொலிஸார் குறித்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி நீதவானின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையிட்டு குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராயுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. (ம-3,10)

## ஆயிரம் பனை...

பனைவளம் தெங்கு பயிர்செய்கைக்கு அழிக்கப்படுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என தெரிவித்து அதாவது பனைவளம் பாதுகாக்கப்பட வேண்டிய நோக்கில் குறித்த பனைகள் அழிப்பதற்கு பனை அபிவிருத்திச் சபையால் தடை விதிக்கப்பட்டது

அதே விடயத்தை கவனத்தில் கொண்டு வேலணை பிரதேச சபையால் குறித்த நபருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பனைகளை அழிப்பதற்கு தற்போது முயற்சிகள் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அபிவிருத்தியை காரணம் காட்டி குறித்த பனை மரங்கள் வகை தொகையின்றி அழிக்கப்படுவதால் பனை வளம் அழிந்து போவதற்கு சாத்தியம் உண்டு.

பனைக்கு ஈடாக எந்த மரங்களையும் அப்பகுதியில் நாட்டுவதில் பயன் இல்லை. பனைகளை அழிக்க ஆரம்பித்தால் தொடர்ச்சியாக இந்த அழிப்பு நடவடிக்கை இடம்பெறும். எனவே ஆரம்பத்தில் குறித்த விடயத்தை தடை செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அனுமதி மறுக்கப்பட்ட இடத்தில் மீண்டும் அனுமதி அளிக்கப்படுவது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3,9)

## நீதித்துறை தடை...

பெற்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சபாநாயகர் கரு ஜயசூரிய, ரணில் விக்கிரமசிங்க, சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியென சட்டத்துறையில் நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள். இந்தக் குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றது. அது ஒட்டுமொத்த நடவடிக்கைக்கும் பிரச்சினையாக அமைந்துள்ளது. தொடர்புடைய தரப்பினருக்கு இது அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. சட்டத்துறை மற்றும் அரசாங்கத்தின் அனைத்துப் பிரிவினரும் அதற்கான தீர்வைக் காண வேண்டியது அவசியமானதாகும். இதற்காக மூன்று துறைகளினதும் அதிகாரம் தெளிவாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அதனால் ஜனநாயகத்திற்கு குறிப்பிடத்தக்க அழுத்தம் ஏற்படக்கூடும் என ஜனாதிபதி இந்த மாநாட்டில் குறிப்பிட்டார்.

நிறைவேற்றுத் துறை மற்றும் சட்டவாக்கத்துறை ஆகியன மக்களால் ஜனநாயக முறைமையூடாக நியமிக்கப்பட்டுள்ளன.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 884
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,843,295/-
வெற்றி இலக்கங்கள் 21 25 32 37
ஆங்கில எழுத்து Q
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3301 திகதி: 2020.02.15
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 21 29 71
ஆங்கில எழுத்து Y
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 33,339,125/-
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1127
சீட்டிழுப்பு திகதி 15.02.2020 சனிக்கிழமை
E 04 28 34 54
3 3 0 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.95,986,076
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
Web: www.dlb.lk

குறிப்பாக, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஆணை நிறைவேற்றுத்துறைக்கு உள்ளது. நோக்கத்தை நோக்கிப் பயணிப்பதற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

ஆகவே, நிறைவேற்றுத்துறையினால் எடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு நீதிமன்ற செயற்பாடு தடை ஏற்படுத்தா திருத்தல் முக்கியமானது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-3)

## இடைக்கால...

தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 24ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 43 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

ஆனால், இதுவரை இலங்கை அர சாங்கமானது ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அறிக்கைக்கு பதில் அனுப்பவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த 43 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன்போது இலங்கை குறித்த அறிக்கையை ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லட் உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ளார்.

குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையை தொடர்ந்து இலங்கை குறித்த விவாதம் நடைபெறவுள்ளது. மேலும் மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகளும் இலங்கை தொடர்பாக தங்களது நிலைப்பாட்டை வெளியிடவுள்ளன.

கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 என்ற பிரேரணை எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பாகவே ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக ஒரு நாடு தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தயாரிக்கும் அறிக்கையானது அது வெளியிடப்படுவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட நாட்டின் பார்வைக்கு அனுப்பப்படுவது வழமையாகும்.

இந்நிலையிலேயே இலங்கை தொடர்பான அறிக்கையை ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதரகம் ஊடாக ஐ.நா. மனித உரிமை அலுவலகம் இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்தவகையில் குறித்த அறிக்கை தொடர்பாக, இலங்கை அரசாங்கத்தின் பதிலை வெளிவிவகார அமைச்சே ஐ.நா. மனித உரிமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ரணில் இந்தியா...

விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

பெங்களூருவில் எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் நடைபெறும் சர்வதேச மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இந்த மாநாட்டில் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் அனில் கும்ளே ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

இதன்போது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமற்ற வகையில் இந்திய ஜனாதிபதியுடன் சந்திப்பை மேற்கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம-3)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 15.02.2020 வெற்றி வாரம் 2770 வர்ணம் இளம் நீலம்
துலாம் வெற்றி இலக்கங்கள் 05 07 26 36
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,194,024
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 5 9 9 8
ரூ.100 பரிசுக்குரிய 2 6 5
2020.02.16 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

## வேலையாட்கள் தேவை

நல்லூரில் இயங்கும்
இனிப்புத் தொழிற்சாலைக்கு
பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: (2258)
**077 969 3210**

## காணி விற்பனை

ஆடியபாதம் வீதி, (இராமசாமி சந்தி) முருகன் வீதியில் துண்டுகளாக காணி விற்பனைக்கு உண்டு. (துண்டு1 1¾ பரப்பு)

தொடர்பு:- (2275)
**077 728 6061**
**077 818 8835**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK-550*/=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

077 68226240 → 0768226240

V2 TRAVELS (C-8785)

## மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது

5kg க்கு மேல் 1கிலோவுக்கான கட்டணம்
பிரான்ஸ்- ஜேர்மனி- டென்மார்க்- கொலண்ட்- பெல்ஜியம்- ரூ.750
இத்தாலி- சுவீடன்- ரூ.850 லண்டன் -ரூ.650 சுவிஸ்- ரூ.1000

கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்

டிஸ்ரிவி(DishTv), மின்சாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும்

யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும், பொதிகளை அனுப்பிடவும்

வெளிநாடு, உள்நாடுகளுக்கான பொதிகளை விரைவாகவும் குறைந்த செலவிலும் அனுப்பிட பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500 | 72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கனகராயன்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500 |

(C-9198)

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=

கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



**076 443 1576**

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-9193)

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் Hall, 4 அறைகள், Attach Bath room, பெரியவளவுடனும் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு :
**077 553 2345 (Ravi)** (C-9261)


## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ள... சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் (2283)
பண்டாரிக்குளம், வவுனியா.
077 630 6290 / 076 328 7119


# மரண அறிவித்தல்

## செல்லத்துரை ஜனார்த்தனன் (றூபன்)



பிறப்பு – 15.01.1975 இறப்பு – 13.02.2020

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி தெற்கு கலை ஒளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஜனார்த்தனன் 13.02.2020 வியாழக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லத்துரை - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை-சகுந்தலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், திலகாவின் அன்புக் கணவரும், கிஷாலி, சரஞ்சியன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மற்றும் காந்தரூபி, ரமா, ஜெயராம், காலஞ்சென்ற ஜெகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜீவா, டயஸ், கமலா, கேதீஸ், பாமினி, பிரகாஷ், கோகிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி காலாயான்புலம் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

கலை ஒளி வீதி, சிறுப்பிட்டி தெற்கு.
நீர்வேலி. (2281)

தகவல் :
கேதீஸ் (மைத்துனர்) - 077 372 0192


SLGTI SRI LANKA GERMAN TRAINING KILINOCHCHI INSTITUTE

**Sri Lanka German Training Institute**
**POSTOF VISITING INSTRUCTORS**
**WALK-IN INTERVIEW**

Walk-in interview for below positions will be held during **24.02.2020 to 28.02.2020** at the administrative block of SLGTI Ariviyalnagar kilinochchi

1. Lecturer - English
2. Lecturer - ICT
3. Lecturer - Construction Technology

**Qualifications**

An Engineering Degree in the relevant field
For the candidate appearing for English lecturer should have at least HND in English or higher qualification with recognized English teacher training certifications

Candidate are requested to appear with original relevant certificates with the copies National Identity Card and a Self prepared application

**Director / Principal**
**Sri Lanka German Training Institute**
**14.02.2020**

(C-9255)

A3 Colour Print 30/-
Banner - 35/-

# யாழ் நகரில் முதன் முதலாக இதுவரை யாரும் காணாத டிஜிட்டல் கலர் பிறிண்டிங்



உங்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து, பல வருட காலமாக பிறிண்டிங் துறையில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற எமது **ஜனா டிஜிட்டல் பிறிண்டிங்** நிறுவனமானது தற்பொழுது புதிய தொழிநுட்ப வசதிகளுடன் கூடிய அதிநவீன டிஜிட்டல் கலர் பிறிண்டிங் இயந்திரத்தை மாசி மாதம் 08ம் திகதி ஆரம்பித்துள்ளோம். என்பதை எமது அன்பார்ந்த வாடிக்கையார்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (C-9263)

ஜனா அழைப்பிதழ் காட்சியறை

அனைத்து வகையான டிஜிட்டல் பிறிண்டிங்
அனைத்து வகையான ஸ்ருடியோ அல்ப சீற் பிறிண்டிங்
ஓப்செட் பிறிண்டிங் அன் கட்டிங்

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பிறிண்டிங் தேவைகளையும், உடனுக்குடன் தரமாகவும் நேர்த்தியாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
077 073 1654 / 077 2729 186
இல.246, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.

உங்கள் வரவே எங்கள் வெற்றி எங்கள் வெற்றிக்கு துணை நிற்க அன்புடன் அழைக்கின்றோம்.


## புதிய செயலி

(கொழும்பு)

ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக புதியதொரு செயலியினை எதிர்காலத்தில் அறி முகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மதுகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே கல்வியமைச்சர் டளஸ் அலகப்பெரும இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன். மாணவர்கள் க.பொ.தர சாதாரண தர பரீட்சைக்கு இணையம் ஊடாக விண்ணப்பிக்கும் புதிய முறைமையொன்றும்விரைவில் அறிமுகம் செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

*Registered as a Newspaper in Srilanka*

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 265

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 | 16.02.2020 | தொலைபேசி : 021 222 3378




## நாடு புத்தருக்குரியது நம்பிக்கை சிவன் மீது



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். அவரது முகத்தில் கோபப் பொறி பறந்தது. ஊர்காவற்றுறையில் உள்ள சைவ ஆலயங்களின் பெயர்களில் இருக்கக்கூடிய வீதிகளின் பெயர்களுக்கு கத்தோலிக்கப் பெயர்களைச் சூட்டுகின்ற சதி வேலையை ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எடுத்துள்ளது. இதற்கு ஆலடி மாநாடு தனது கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்க வேணும் என்றார்.

பண்டிதரைத் தொடர்ந்து எழுந்த மூப்பர் கதிரேசன் கோயில் வீதிக்கு புனித மரியாள் வீதி என்று பெயர் வைக்கின்ற போது அது திட்டமிட்ட சதி வேலை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

என்னைப் பொறுத்தவரை ஊர்காவற்றுறைப் பிரதேசசபை சைவ-கத்தோலிக்க மக்களிடையே மோதலையும் முரண்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக இந்த வேலையைச் செய்திருக்கிறது என்று தான் சொல்லுவன்.

**வாத்தியார்:** மூப்பர் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. ஊர்காவற்றுறையில இருக்கிற கத்தோலிக்க மக்கள் சைவசமய மரபுகளோட வாழ்கிறவர்கள். ஆசிரியர்களாக, அதிபர்களாகக் கடமையாற்றிய ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பலரை எனக்குத் தெரியும். அவர்கள் மிகவும் நல்லவர்கள், பண்பாளர்கள், சைவ மக்களோட சகோதரர்களாக வாழ்ந்தவர்கள். ஆகையால ஊர்காவற்றுறைக் கத்தோலிக்க மக்கள் ஒருபோதும் கதிரேசன் கோயில் வீதிக்கு புனித மரியாள் வீதி என்று பெயர் மாற்றும்படி கேட்டிருக்கமாட்டார்கள் என்பதை நான் அடித்துச் சொல்லுவன்.

**கங்காணி:** மன்னாரில திருக்கேதீச்சர வளைவை தள்ளி விழுத்தி காலாலை உழக்கி சைவமக்களை ஆத்திரமடையச் செய்த அதே பின்னணியிலதான் ஊர்காவற்றுறையில கதிரேசன் கோவில் வீதிக்கு புனித மரியாள் வீதி என்று பெயர் மாற்றுகின்ற சதி நடக்கிறது.

**விதானையார்:** கதிரேசன் கோயில் வீதிக்கு புனித மரியாள் வீதி என்று பெயர் மாற்றம் செய்யிறது மட்டுமல்ல பாருங்க, கந்தசாமி கோவில் வீதிக்கு கொட்டங்காடு வீதி என்றும் ஸ்ரீ ஞானவைரவர் வீதிக்கு தேவகொட்டங்காடு வீதி என்றும் பெயர் மாற்றம் செய்வதெனத் தீர்மானித்ததற்குள் ஊர்காவற்றுறையில உள்ள சைவ ஆலயப் பெயர்களை அடியோட மாற்றுகிற கயமைத்தனம் தெரியுதுதானே.

**சிறாப்பர்:** என்னைப் பொறுத்தவரை இதற்குக் கத்தோலிக்க மக்களும் உடன்படமாட்டினம். கந்தசாமி கோயில் வீதிக்கு கொட்டங்காடு வீதி என்று பெயர் சூட்டுகிற மனநிலையோட தானே ஊர்காவற்றுறைப் பிரதேச சபை இருக்குது. இப்படியான மனநிலை உள்ளவர்களால பொதுமக்களுக்கு எந்தச் சேவையையும் வழங்க முடியாது.

**சாத்திரியார்:** இந்த விடயத்தை இப்படியே கதைத்துக் கொண்டிருக்காமல், ஒரு கடுமையான கண்டனத் தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம்.

(சாத்திரியார் இவ்வாறு கூறியதும் ஆலடியில இருந்த அத்தனை பேரும் எழுந்து நின்றனர். வாத்தியார் வைத்திலிங்கம் கோபத்தோடு கூறினார். சைவ-கத்தோலிக்க மக்களிடையே மோதலை ஏற்படுத்தி தமிழினத்தை சிதைக்கின்ற காரியத்தைச் செய்கின்ற துரோகத்தனத்தை ஊர்காவற்றுறைப் பிரதேச சபை முதலில கைவிட வேணும்.

இவ்வாறான செயல்கள் பேரினவாதத்தின் பின்னணியில நடக்கின்ற நாசகாரியம். எனவே இத்தகைய செயல்களை சைவ-கத்தோலிக்க மக்கள் இனம் காணவேணும். இல்லையேல் எதிர்காலத்தில தமிழர் தாயகத்தில சைவ-கத்தோலிக்க மத முரண் பாடுகள் பல்கிப் பெருகி தமிழின ஒற்றுமையை அழித்துப் போடும்)

இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் கோபாவேசத்துடன் கூற, ஆலடியில சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. தொடர்ந்து பண்டிதர் குரல் கொடுத்தார்.



## ஊர்காவற்றுறையில நடக்கிற நாசகாரத்தைப் பாருங்களன்

**பண்டிதர்:** இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கூறிக் கொள்ளும் சிங்கள ஆட்சித் தலைவர்கள் சைவக் கடவுளர்களைத் தானே நம்புகினம்.

பண்டிதர் இவ்வாறு கூறியதும் அதனைப் புரிந்து கொள்ள முடியாத சிறாப்பர் என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள் என்றார்.

**பண்டிதர்:** இந்தியாவுக்குச் சென்ற பிரதமர் மகிந்த ராஜபக்ஷ காசிக்குச் சென்று சிவனை வழிபட்டதோட தர்ப்பணமும் செய்திருக்கிறார்.

**சாத்திரியார்:** என்ன பிரதமர் மகிந்த ராஜபக்ஷ காசியில தர்ப்பணம் செய்தவரோ?

**பண்டிதர்:** ஓம் சாத்திரியார், வன்னிப் பெருநிலப் பரப்பில நடந்த யுத்தத்தில பிராமணர்களும் கொல்லப்பட்டவர்களல்லோ அதுதான் பிரம்மகத்தி தோசம் பிடித்திருக்கும் போல. ஆகையால காசிக்குப் போய் தர்ப்பணம் செய்யுங்கள் எண்டு சோதிடர்கள் கூறியிருப்பினம்.

**விதானையார்:** அப்ப, யுத்தத்திற்குப் போக முதல் புத்தபிரானிட்டப் போய் வழிபடுகிறது, யுத்தம் முடிந்த பிறகு சிவனிட்டப் போய் தர்ப்பணம் செய்து பிரேத தோஷ பரிகாரம் தேடுறதாக்கும்.

**கங்காணி:** இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று சொன்னாலும் புத்தரில சிங்கள ஆட்சியாளர்களுக்கு நம்பிக்கை இல்லைப்போல.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:** புத்தரில நம்பிக்கை இருந்தால், இந்தியாவுக்குச் சென்று காசிக்கும் திருப்பதிக்கும் போக வேண்டிய தேவையென்ன?

**சிறாப்பர்:** சொன்னாப்போல ரணில் விக்கிரமசிங்கவும் திருப்பதிக்குப் போய் தன்ர நிறைக்குச் சமமான தங்கத்தைத் திருப்பதியானுக்குக் கொடுத்த வரல்லோ. மகிந்த, ரணில், மைத்திரி என எல்லாரும் திருப்பதிக்குச் சென்று வழிபடுகிறவியள்.

இப்படி வழிபட்டுப் போட்டு இங்க வந்தவுடன இலங்கை பௌத்த நாடு என்று சொல்லுகினம் எண்டால் கடவுளிட்டயும் அரசியல்தானே நடக்குது.

**விதானையார்:** இப்ப இலங்கையில பௌத்தத்தால சைவ சமயத்திற்கு வாற ஆபத்தைவிட, மிகப் பெரியதொரு ஆபத்து நெருங்கி விட்டது.

இவ்வாறு விதானையார் கூற, அதனை மாநாட்டு உறுப்பினர்கள் விளங்கிக் கொள்வதற்கு முன்னதாகவே ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# மாவை. சேனாதிராஜாவுக்கு வலம்புரியின் பிரதம ஆசிரியர் எழுதும் விளக்கக் கடிதம்

மதிப்பிற்குரிய
மாவை. சோ.சேனாதிராஜா
அவர்களுக்கு
அன்பு வணக்கம்.

தங்களின் நீண்டகால அரசியல் வாழ்வுக்கான எம் மதிப்பு என்றும் உண்டு. எனினும் தங்கள் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் கடும் கருத்து விமர்சனங்கள் எம்மிடம் உள்ளன.

இக்கடும் விமர்சனத்திற்கு தமிழரசுக் கட்சி மீதான காழ்ப்புணர்வே காரணம் என்று தயவுசெய்து கருதிவிடாதீர்கள். மாறாக தமிழரசுக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளே எமது எதிர்விமர்சனத்திற்கு மூலகாரணமாகும்.

ஆம், வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை அழைத்து வந்தவர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள்.

எனினும் ஒட்டுமொத்தக் கூட்டமைப்பும் ஒன்றாக அழைத்தால் மட்டுமே தேர்தலில் போட்டியிட வருவேன் என்று கூறியவர் நீதியரசர் விக்னேஸ்வரன். இதனால் ஒட்டுமொத்தக் கூட்டமைப்புக் கட்சிகள் ஒன்றாகச் சென்று நீதியரசர் விக்னேஸ்வரனை அழைத்ததால் அவர் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடச் சம்மதம் தெரிவித்தார்.

எதிர்பார்த்தது போல தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் அவர் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரானார்.

எனினும் தாங்களும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அவரின் ஆதரவாளர்களும் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு ஒத்துழைப்பு வழங்காதது மட்டுமன்றி அவரை இயங்கவிடாமல் முட்டுக்கட்டை போட்டுத் தடுப்பதில் முழுமூச்சாக நின்றனர்.

இதனால் வடக்கு மாகாண சபை இன்னும் உச்சமான திட்டங்களைச் செய்ய முடியாமல் போயிற்று. இருந்தும் உங்களின் பிரசாரம் வடக்கு மாகாண சபையின் உச்ச வினைத் திறனின்மைக்கு நீதியரசர் விக்னேஸ்வரனே காரணம் என்பதாக இருக்கிறது.

இவையெல்லாம் அடிப்படை நியாயமற்றவை. அதிலும் தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், வன்னியசிங்கம், தர்மலிங்கம் போன்ற நேர்மைமிக்க தலைவர்களின் பாசறையில் கற்றறிந்த தாங்கள் அவ்வாறு செய்வது வேதனைக்குரியது.

இப்போதுகூட, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் தளர்ந்து விட்டார். முதுமையின் இயல்பான அத்தனையும் அவரிடம் குடி புகுந்து விட்டன. இனி அவரால் ஏதும் செய்ய முடியாதென்பதே உண்மை.

அப்படியானால் கூட்டமைப்பு என்று தற்போது அழை க்கப்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சி யாரிடம் போகப் போகிறது. அதன் எதிர்காலம் என்னவாகும் என்பன ஏக்கம் நிறைந்ததாகவே இருக்கிறது.

தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி சபைகளின் இயங்குநிலை பற்றி நிச்சயம் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

யாழ். மாநகர சபையில் சாதியச் சண்டையே மேலோங்கிய விடயமாகப் பேசப்பட்டு வருகிறது. நல்லூர் பிரதேச சபையானது திருத்திய வடிகாலை மீளத் திருத்துகிறது, போதாக்குறைக்கு மலக் கழிவுகளைக் கொண்டு சென்று பொட்டல் வெளிகளில் கொட்டிவிட்டு தப்பித்து ஓடி விடுகிறது. இதைவிட நல்லூர் பிரதேச சபை வேறு எதனையும் சாதித்ததாகத் தெரியவில்லை.

அப்படி ஏதேனும் சாதித்ததாக தாங்கள் ஆதாரப்படுத்தி அறிக்கை தந்தால் நிச்சயம் இவ்விடத்தில் பிரசுரிப்போம் என்பதையும் உங்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

ஆக, வடக்கு மாகாண சபையில் நீதியரசர் விக்னேஸ்வரனின் செயற்பாடுகளை குழப்பியடித்த அதே பண்பாடு கூட்டமைப்புத் தலைமை வகிக்கும் அத்தனை மாநகர, பிரதேச சபைகளிலும் காணப்படுகிறது. இவை பற்றியெல்லாம் பொது நிலை நின்று சிந்தித்தால் நிச்சயம் வேதனைப் படாமல் இருக்கமுடியாது.

இவை சிறு குறிப்புரை மட்டுமே. மற்றும்படி நாம் தங்களுக்கான இவ்விளக்கக் கடிதத்தை எழுதுவதன் முக்கிய நோக்கம் 13.02.2020 அன்று எழுதிய வலம்புரி ஆசிரியர் தலையங்கம் தொடர்பிலேயே ஆகும்.

***பொங்கல் பானைக்கு மக்கள் பாடம் புகட்டுவர்*** என மாவை. சேனாதிராஜா கூறியது ஏற்புடையதல்ல என நாம் எழுதிய ஆசிரியர் தலையங்கத்திற்கு தங்களின் பதில்; ***பானைக்கு மக்கள் பாடம் புகட்டுவர்*** என நான் ஒருபோதும் கூறவில்லை என்பதாகும்.

அவ்வாறு தாங்கள் கூறவில்லையென்றால், உங்கள் மறுப்பை நீங்கள் கூறியதாகச் செய்தி வெளிட்ட யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைக்கே அறிவித்திருக்க வேண்டும்.

ஏனெனில் ***பானைக்கு பாடம் புகட்டுவர் மக்கள்- மாவை. எம்.பி. தெரிவிப்பு*** என 11.02. 2020 ஆம் திகதி அன்று குறித்த பத்திரிகையின் முன் பக்கத்துத் தலைப்புச் செய்தியாக வெளி வந்திருந்தது.

எனவே மேற்குறித்த செய்தி 11.02.2020 ஆம் திகதி வெளி வந்த நிலையில் வலம் புரியின் ஆசிரியர் தலையங்கம் 13.02. 2020 ஆம் திகதி வெளி வந்திருந்தது. எனினும் இன்று வரை அச்செய்தி தொடர்பில் உங்கள் மறுப்புச் செய்தி எதுவும் குறித்த பத்திரிகையில் பிரசுர மாகவில்லை.

இத்தகைய நியாயங்கள் எம்மிடம் இருந்த போதிலும் நீங்கள் அனுப்பிய மறுப்புக் கடிதத்தை வலம்புரியின் முன் பக்கத்தில் பிரசுரித்திருந்தோம். இதுமட்டுமல்ல, ஏலவே தங்களின் செய்திகளும் சில நேரங்களில் தாங்கள் தெரிவிக்கும் மறுப்புகளையும் முழுமையாக வலம்புரி பிரசுரித்துள்ளது.

அதுவே பத்திரிகை தர்மம். ஒருவர் குறித்து வெளிவந்த செய்தி தொடர்பில் சம்பந்தப்பட்டவர் தனது கருத்தைத் தெரிவிக்கும் போது அதனைப் பிரசுரிப்பதுதான் நீதியும். நியாயமும் தர்மமும் ஆகும். இதனை எக்காலத்திலும் வலம்புரி பின்பற்றும் என்ற உறுதியுரையோடு எமது விளக்கத்தை நிறைவு செய்கின்றோம்.

நன்றி
அன்புடன்
பிரதம ஆசிரியர்
வலம்புரி.

யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைச் செய்தி



ஒற்றுமையை சிதைக்கும்
பானைக்கு பாடம்
புகட்டுவர் மக்கள்
மாவை எம்.பி. தெரிவிப்பு

# விடுகதைகளும் விடைகளும்

- சிறுசிறு கதவுகள் செய்யாக்கதவுகள் திறக்க அடைக்க சத்தம் செய்யாக் கதவுகள்.

**கண் இமைகள்**

- கத்திபோல் இலை இருக்கும் கவரிமான் பூப்பூக்கும். தின்னப்பழம் பழுக்கும். தின்னாத காய் காய்க்கும்.

**வேப்பமரம்**

- காலில்லாத பந்தல் காணக்காண விநோதம்.

**வானம்**

- காலையில் நான்கு கால் கடும் பகலில் இரண்டு கால் மாலையில் மூன்று கால் முடிவிலே எட்டுக்கால்.

**தவழும் குழந்தை, நடக்கும் இளைஞன், தடியுடன் கிழவர், தூக்கிச் செல்லும் நால்வர்**

- கிணற்றைச் சுற்றி வெள்ளைக் கல்.

**பல்**

- படுத்துத்தூங்கினால் கண்முன் ஆடும் அடுத்து விழித்தால் மறைந்தே ஓடும்.

**கனவு**

- ஒற்றைக்காலில் சுற்றிடுவான் ஓய்ந்து போனால் படுத்திடுவான்.

**பம்பரம்**










# எங்கே தேடவேண்டும்

சிவனடியான்



ஒரு சமயம் வியாபாரி ஒருவர் அதிக பணத்துடன் யாழில் இருந்து கொழும்பு நோக்கி ரயிலில் சென்றார். முன் இருக்கையில் இருந்த ஒருவன் இவர் கொள்வளவிற்காக கொழும்பு செல்வதால் மிகுந்த பணம் வைத்திருப்பார் என அவதானித்தபடியே இருந்தான்.

ஒருமுறை வியாபாரி இயற்கைக் கடமைக்காக இருக்கையை விட்டு எழுந்து சென்றான். முன் இருந்தவர் உடனடியாக பதற்றத்துடன் அவரது கைப்பை மற்றும் உடைமைகளை பரிசோதித்தான். ஒன்றும் கிடைக்கவில்லை. மீண்டும் வியாபாரி கண் அயர்ந்தபோது முழு மூச்சுடன் தேடினான். ஒன்றும் கிடைக்கவில்லை. கொழும்பை அண்டியபோது வியாபாரி தன்னிடமுள்ள பணத்தை எடுத்து எண்ணிப் சரிபார்த்தார். அப்போது முன் இருந்தவர் கோபத்துடன் இப்பணத்தை எங்கு வைத்திருந்தாய். நான் தேடியும் கிடைக்கவில்லை என்றான். அப்போது வியாபாரி "என் பணத்தை நீ அபகரிக்க முயலுவாய் என்று தெரிந்துதான் பணத்தை உன் தலையணையின் அடியில் வைத்து விட்டேன். உன் பொருளை நீ சோதிக்கமாட்டாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும்" என்று பதில் சொன்னான்.

கடவுள் நம்முடைய இதயத்தில் இருக்கிறார். வெளியில் இல்லை. புறத்தில் கடவுளை தேடுவது தவறான வழியாகும். உள்முகமாகச் சென்றால் தான் கடவுள் நம்மிடம் இருப்பதை அறிவோம்.

பகவான் கூறுகின்றார், ஒவ்வொரு ஜீவனின் இதயத்திலும் பரமாத்மா இருக்கின்றார். அவர் அணுவுக்கு அணுவாயும் பிரமாண்டத்திற்கு மேல் பிரமாண்டமாகவும் சிறியவை எல்லாவற்றிலும் சிறிதாகவும் பெரியவை அனைத்திலும் பெரிதாகவும் இருக்கின்றார். அதை உணர்ந்த ஞானி ஒருபொழுதும் துன்புறமாட்டான். எறும்பில் இருந்து யானை வரை அனைத்து ஜீவராசிகளிலும் உறைவது ஆத்மாவே. இம் முழு உலகையும் சூழ்ந்தும் தாங்கியும் நிற்பது இந்த சூட்சுமமான ஆத்மாவே.

எனவே எம்மனதை உள்முகமாகத்திருப்பி "என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்" என்ற சிவயோக சுவாமியின் வாக்கை பின்பற்றி விடாமுயற்சியோடு கூடிய பயிற்சியால் மனதை வசப்படுத்தி நிலையான ஆனந்தத்தை அனுபவித்து வெளியுலக பொருட்களில் இருந்து புலன்களை பிரித்து உறுதி, நேர்மையைக் கைக்கொண்டு சஞ்சலமற்ற மன நிலையை ஏற்படுத்தி சத்தியம், சாந்தம் எனும் இரு சரக்கை சமநிலை எனும் தேனில் குழைத்து பத்தியம் என பருகினால் பாரினில் உயர்வெய்தலாம் என்ற வாக்கிற்கு ஏற்ப ஆன்ம ஈடேற்றம் காண்போமாக.

**பரமேஸ்** — **வதிரி**

**எத்தனை கட்சிகள் ஒன்று சேர்ந்தாலும் கூட்டமைப்பை ஒன்றும் செய்ய முடியாது தானே?**

தம்பி அந்தக் காலம் மலையேறிப் போச்சுப்பன். இப்ப தமிழ் மக்களுக்கு நல்ல புத்தி வந்திட்டு யார் யார் யாரிட்ட எத்தினை எத்தினை கோடி வாங்கினவர்கள் என்ற புல் டீட்டைல் அவர்கள் கையில் இருக்கிறது.

இனி உந்த பருப்புபெல்லாம் இங்க வேகாது ராசா.

வேணுமென்றால் வேற எங்கேன் கொண்டு போய் ரை பண்ணிப் பாருங்களேன்.






**சயன்** — **யாழ்ப்பாணம்**

**வியாசரே உங்களுக்கு யாராவது போட்டி என நினைக்கிறீரோ?**

இந்த உலகிற்கு ஒரு சூரியன், ஒரு சந்திரன். அதுபோல் ஒரு வியாசர் அவ்வளவு தான்.

உங்கள் கேள்விகளுக்குப் பதில் எழுதுவது தான் எனது வேலையே தவிர கேள்விகளை எழுதுவது அல்ல என் வேலை. அதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

நாம் நம்பாட்டுக்குச் சிவனே என்று இருக்கிறோம் .நீங்கள் என் வாயைக் கிளறிவிட நான் உளறிவிட அப்புறம் சம்பவமாகிடும் விடுங்க.

**கோபிகா** — **தொண்டைமானாறு**

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நிலை எப்படி இருக்கும்?**

தமிழினத்தின் உரிமைகளை வென்றெடுக்க போலி வேடம் போடாமல் உண்மை, நேர்மை என்ற தாரக மந்திரத்தைக் கொண்டு செயற்படும் என நம்புகின்றோம்.

என்ன, காலம்காலமாக எங்களைத் தமிழ்த் தலைமைகள் ஏமாற்றியதாலோ என்னவோ தமிழ் மக்கள் யாரையும் நம்பும் மனநிலையில் இல்லை.

ஆனால் தமிழ்மக்களின் நலன்சார்ந்து சிந்திக்கும் கட்சிக்கு மக்கள் ஆதரவு கிடைக்கும் அதுவே உண்மை.

**சாதுரியா** — **யாழ்ப்பாணம்**

**சஜித்தின் கூட்டணியின் சின்னம் எது?**

யானை வேண்டும் என்றும் அன்னம் வேண்டும் என்றும் இரு கன்னை பிரிய யானையுமில்லை அன்னமுமில்லை. இதயச் சின்னம் என் சின்னம் என்று சஜித் கூற இப்போது அதுவும் சிக்கலில் நிற்கிறது.

பொறுத்திருந்து பார்ப்போம்.

**இனவாதம், மதவாதம் பிடித்த பேரினவாதத்திடமிருந்து சிறுபான்மையினருக்கு தீர்வு கிடைக்குமா?**



**ஜீபா** — **கரவெட்டி**

**விக்னேஸ்வரன்- கஜேந்திரகுமார் கூட்டமைப்பிற்கு சவாலாக இருப்பார்களா?**

அவர்கள் மட்டுமல்ல இப்போதிருக்கும் நிலையில் நான் களத்தில் இறங்கினால்கூட அவர்களுக்குச் சவாலாகத்தான் இருக்கும்.

தமிழ் மக்களை நம்ப வைத்துக் கழுத்தறுத்தவர்கள் அரசு தரும் அற்பசொற்ப சலுகைகளுக்கு விலைபோய் எங்களை, எங்கள் உரிமைகளை அரசிடம் அடகு வைத்தவர்கள்.

இவர்களை இனித் தமிழ்மக்கள் நம்பத் தயார் இல்லை என்பதே உண்மை.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**இலங்கை அரசுகள் ஏமாத்துவது போதாது என்று இந்திய அரசும் தமிழர்களை ஏமாற்றுகிறதே?**

**சுதன்** — **குப்பிழான்**

**இலங்கை அரசுகள் ஏமாத்துவது போதாது என்று இந்திய அரசும் தமிழர்களை ஏமாற்றுகிறதே?**

ஒருவரின் காலில் பாம்பு கடித்து விட்டது. அவரை அவசரமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது அவரைக் கொண்டு சென்ற வாகனம் விபத்தில் சிக்கி பாம்பு கடித்தவரின் கால் முறிந்து விடுகிறது.

அவரை இன்னொரு வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள்.

வைத்தியர்கள் பாம்பு கடித்ததற்கு வைத்தியம் செய்வதா? இல்லை கால் முறிந்ததற்கு வைத்தியம் செய்வதா?

பாம்பு கடித்து கால் முறிந்தவர் நிலையயே தமிழர் நிலையும்.

**தரன்** — **யாழ்ப்பாணம்**

**வியாசரே நேற்று முன்தினம் உங்களை பண்ணைப் பக்கம் பார்த்ததாக ஒரு நண்பர் கூறினாரே?**

அடப்பாவி டேய் அறுத்த இடத்திலை இன்னும் இரத்தத்தின்ர ஈரமே காயலை அதுக்கிடையிலை அங்க போனனா?

தம்பி தரன் பண்ணைப் பக்கம் காதலர்கள் போக இப்ப பயப்பிடுறாங்களாம்டா. யார் எப்ப எங்கியிருந்து எதை எடுத்துக் குத்திடுவாங்களோ எண்ட ஏக்கம் தான். இருக்காத பின்ன உயிர் முக்கியம் தானே.

**தர்ணிகா** — **கவுந்தில்**

**நாட்டில் இப்போது மட்டும் தனித் தமிழ் அரசா இயங்குது?**

ஒன்று இரவு ஏதும் கனவு கண்டிருப்பீர் அல்லது உம் தலையில் பலமான அடி ஏதோ வீழ்ந்திருக்கிறது. இல்லையென்றால் இப்படிப் பேசும் ஆள் நீரில்லையே.

**திகழன்** — **யாக்கரு**

**இனவாதம், மதவாதம் பிடித்த பேரினவாதத்திடமிருந்து சிறுபான்மையினருக்கு தீர்வு கிடைக்குமா?**

ஒரு வகுப்பில் ஐம்பது மாணவர்கள் இருந்தால் அதில் ஆசிரியர் அடிப்பதற்கென்றே ஒரு ஐந்து மாணவர்கள் இருப்பார்கள்.

நாய்க்கு எங்கு அடித்தாலும் பின் காலை நொண்டுவது போல வகுப்பில் என்ன பிழை நடந்தாலும் அந்த ஐந்து மாணவர்களுக்குத்தான் அடிவிழும்.

அது போல் தமிழரை வைத்திருக்கிறது பேரினம்.

இனி இறுதிவரை அடிவாங்குவதை விட வேறு எதையும் செய்து விட முடியாது.

**கவின்** — **வல்வெட்டித்துறை**

**வியாசரே தலைவரின் இருப்புப் பற்றி?**

ஹலோ... ஹலோ... ஹலோ... யார்கதைக்கிறது. கவரேச் பிரச்சினை போல நீங்கள் கதைக்கிறது ஏதும்விளங்கேல்லைஹலோ... ஹலோ...

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

# இதயம் வலிக்கிறது

கவிதைக் களம்

கிளியூர் நா.அபிஷா, இரணைமடு



புரியாத புதிராய் என்னுள் புகுந்தாய்
புதிதாய் என் வாழ்வில் ஓர் நிஜத்தை
தேடும் மனதினை தந்தாய்
உன் அன்பின் மழையில்
நனையச் செய்தாய்
ஓர் சொல்லால் நெஞ்சுக்குள்
தென்பை வைத்தாய்
ஓர் பார்வையில் பைத்தியமாக்கினாய்
மறுவார்த்தையில் மனதில்
மரண வலியைக் காட்டினாய்
ஊமையான நேரமதில்
உறவாட உறவானாய்
செம்மையான நிலவாய் விடியலில்
கலந்து விட்டாய்
என் வார்த்தையை சேமித்தேன்
உனக்காக கவிமடல் எழுதிட
உன் மறுத்திட்ட வார்த்தையும்
மறந்து எழுதுகின்றேன்
என் காதல் வலியாக...

## புதிய தலைமுறையே வருக

விகாரங்களின் போர்வைக்குள்
மனம் விரக்தியடைந்து கிடக்கிறது
எண்ணற்ற வார்த்தைகளும்
கண்ணற்ற பார்வைகளுமாய்
காலம் கடந்து செல்கிறது
சொல்லில் பிழைத்த காலம்
பல்லில் காய்ந்து கரைந்து விட்டது
பொல்லாப்புக்கும் புகழுக்கும்
ஒரு கூட்டம்
பொய்மைக்கு வாய்மை தவறா
மறுகூட்டம்
பெருக்கு வாழ்தல்
பேர் சொல்ல வாழ்தலாகி
போர்க்களமாகிப் புனைந்து
கிடக்கிறது
கையில் காவிய சுமையை
கடப்பையில் உடைத்த
அழப்படை வார்த்தை
இன்னும் காலம்
கனிந்து கிடப்பதாய்
மரணம் விற்று
பிழைத்த கூட்டம்
கால்கள் வலித்து
எச்சமிருக்கும் எம்மை
ஏப்பமிடும் ஊன்
உனக்குள் உணர்வுகள்
விழித்திட வேண்டும்
எமக்கானதை நாமே பெற்றிட
வெற்றுடல் நீக்கி
புத்துயிர் பெற வா
புதிய வழியில்

நெடுந்தீவு சி.சிறி

# வைரத்தேக்கு

வன்னி மண்
பொன் விளையும் பூமி
பெருங்காடு வெட்டி
நிலம் பண்படுத்தி
நாற்று நட்டு நீர் பாய்ச்சி
வளர்த்தனர்
வானுயர்ந்து வளர்ந்து
சூழலுக்கு செழுமை சேர்த்து
செழித்து வைரம் பெற்ற
தேக்கு
காண்போர் கண்பட்டு
காணாமல் போவதா?
மெய்வருந்தி பாடுபட்டவரின்
கை கால்
வாழாவிருக்குமா?
யார் நீ நில்
மனித நேயமற்றவனே
சொல்
தேக்கு நாற்று நட்டு
நீர் ஊற்றி வளர்த்தாயா?
ஆரைக்கேட்டு
வைரத்தேக்கு
அரிந்து வீழ்த்தினாய்?
ஏற்றினாய்
இரும்பு வண்டியில்!
வாய்மூடி நிற்கின்றாய்!
மன்னித்தேன் போ
மீண்டும் வருவாயென்றால்
மன்னிக்கமாட்டேன்
வண்டியும் வெட்டரிவாளும் விட்டு
வெறுங்கையனாய்
விரைவாய் வீட்டுக்கு

வேரற்கேணியன்

# அலை தொடும் நினைவுகள்

தனிமைகளுக்குள் எல்லாம்
முடிக்கப்படும் போது
அடிமனதில் எங்கோ
அடங்காத ஏக்கம் எரிமலையாய்
கொப்பளித்துக் கொண்டிருக்கிறது

முடிவுகளுக்குள் தான்
தாளாத ஏக்கங்கள்
தத்தளிக்கின்றதோ என்று
அடிமனம் அடக்க நினைக்கிறது
இருந்தும் முடியவில்லை அதற்கு

தாளாத ஏக்கங்கள் போதுமென
நினைவுகளை அசை மீட்ட
அலை அலையாய்த் தொடுகிறது
அழகிய கரையின் நினைவலைகள்

நினைவுகளை மீட்டிவிட ஏக்கங்கள்
எருதுகளாய்ச் சீறிப்பாய்ந்து வர
திமிலடக்கி முடிகிறது
தீராத கனவுக் குழந்தைகளோ
திக்கொன்றாய்க் கிடக்கிறது

எருதுகளாய்ச் சீறிவரும் ஏக்கமோ
இரு விழிகளில் இணை தொடுத்து
கரு விழியில் கணை தொடுத்து
நாணயக் கயிறுகளாய்
இறுகிக் கிடக்கிறது

இரு விழியில் இணைதொடுத்து
ஒரு விழியாய் உருமாறி
இதயமெங்கும் கதைபேசி
நொடிப் பொழுதில் வாழ்ந்த காலங்கள்
வெறும் நினைவலையாய் நிமிர்கிறது
தனிமைகளோ உயர்கிறது

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 485



## வலியும் வலிமையும்

எட்டிக் கை நீட்டினால்
தொட்டுவிடும் தூரம்
கரையென்றாலும்
கரைசேர விடாது
முதலைபோல் சுழி
விடலை முயன்றாலும்
பழி வராதிருக்க
வழி தேடித் தவிக்கின்றாள்
இது போன்றே அரசியலும்
ஒருவகையில் சூழ்ச்சிகள்
நிறைந்த சுழியே

க.நாகராசா
நுணாவில்

## உச்சிதனை மோரும்

பச்சிளம் பிஞ்சுகளைப்
பாலியல் வல்லுறவுக்குள்
இச்சைதனைத் தீர்க்கும்
இரக்கமிலா கொலைஞரிடை
உச்சிதனை மோரும்
உன் தாய் மனது மகிழ்ப்புவி
மெய்ச்சும் வகை உதவிதனை
மிக உணர்வாய் கைகொடுத்து
தஞ்சமளித்த நின் பணிக்குலகு
தலைமேலே தூக்கி வைக்கும்

க.தவமணிதாசன்
நல்லூர்

## அறங்கள் (சட்டங்கள்)

கரம் பற்றிக் கரைசேர காப்பரணாய்
இருந்த அறங்கள் (சட்டங்கள்)
சாட்சிகளாய் அக்கினியும் அருந்ததியும்!
ஆயிரம் பொய் சொல்லி முடித்தாலும்
முடிவு சொர்க்கத்தில் எடுக்கப்பட்டதாய்
வாழ்ந்த தியாகப் பண்பாடுகளும்
பாரம்பரியங்களும் வெறும்
சம்பிரதாய சடங்குகளாய் இன்று

இ.ஜெ.பாலன்

## கரம்கொடுத்து உதவுமுனை

அள்ளிச் செல்லும்
நீரலையால் அபலை
உள்ளமெலாம் பேதலிக்க
உரத்த குரலோசையினால்
கள்ளமில்லா நெஞ்சோடு
கரம் கொடுத்து உதவுமுனை
அள்ளி அணைத்துவரின்
அரும் நன்றி ஏற்றிடுவாய்

தணிகைவாசன். தாவடி

## போகும் வழி உனக்கு...

மனதில் உறுதியுடன்
மதித்து உயிரைக் காப்பாற்ற
முனைந்த நெஞ்சைப் பாராட்டி
மானுடமோ சாகவில்லை இன்னும்
சமூகத்தில் சந்ததிகள் போற்றும்
ஆக உன் கடமை தனை ஆங்கே
அச்சமின்றி செய்த வீரன் நீ!
போகும் வழி
உனக்குப் புண்ணியமே!

கந்தபாலன்
நல்லூர்

## அநீதி வெள்ளம்

அநீதி வெள்ளத்தில் தத்தளிக்கும்
தமிழினமே! பெண்ணே!
பீதியுடன் அநீதி வெள்ளத்தில்
போராடும் தமிழினமே!
நீதி வள்ளம் இல்லையே கரை சேர!
கை கொடுத்து கரை சேர்க்க
நீதி தேவன் கை நீட்டுகிறான்
கை பிடித்து விடு நீதியின் கரைசேர


சி.சுகிர்தமலர்
ஆனைப்பந்தி

## தலைவனின் அன்பு

என்னை நம்பி வந்தவள்
எனக்காக தன்னுயிரையும்
தரத்துணிந்தவள் என்னில்
(வி)சுவாசம் கொண்டவள்
எனை யாசித்தவள்
அவளுக்காக யான்
என் வினை செய்வேன்
அவளைக் கைவிடாதிருப்பதே

புனிதநகர்
கற்கோவளம்

# மௌனத்தின் தேடல் -486



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## ஆபத்துக்குதவும் பண்பு

நீராடச் சென்ற சிறுமி
நீரில் மூழ்கித் தன்
உயிருக்குத் தத்தளிக்க
இரக்கங்கொண்ட இளைஞன்
தன்னுயிரையும் பாராது
சிறுமியின் உயிரைக் காக்க
துணிந்து கைகொடுத்து
காப்பாற்ற முயற்சிக்கிறான்
ஆபத்து வேளையில்
உதவும் பண்பு மேலானது
மனிதாபிமானம்
மகத்தானது

துரை
தென்மட்டுவில்

## மனிதநேயம்

ஆற்றில் தவறி விழுந்த பெண்ணின் கை
கொடுத்து காப்பாற்ற முயலும் மனிதா!
ஆபத்தின் போது பிறருக்கு இப்படி
மனிதநேயத்துடன் உதவும்
உன்னைப் போன்ற நல்லுள்ளம்
கொண்டவர்களாலேயே நம் உலகில்
இன்று சிறிதேனும் மழை பெய்கிறது

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

## புடம்போட்ட...

உடுக்கை இழந்த கை
ஓடி வந்து உதவுவதாய்
மிடுக்குடனே மேதினியில்
பிளிர்ந்த குறிக்கோளாய்
கடனாகச் சமூகத்திற்கு
கடமைதனைச் செய்ததுமே
தடம் பதித்ததாய் மானுடத்தின்
தன்மானம் காப்பாற்றி
புடம் போட்ட தங்கமகனானாய்

சிவகந்தன், காவலூர்

# குற்றம் சொல்லாமல் சுற்றம் இல்லையடி...

சிறுகதை

**யாழ்ப்பாணத்தில் ஐந்து பெண் குழந்தைகளைப் பெற்ற ஒருவர் தனது ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புகளை எல்லாம் விட்டுப் பிள்ளைகளுக்காக உழைக்கவும் சேமிக்கவும் வேண்டுமென்பது எழுதாதவிதி**



செழித்து வளர்ந்திருந்த மரங்கள் செடிகள் எல்லாம் இலையுதிர்த்து மீண்டும் துளிர்விட ஆரம்பித்த சித்திரை மாதத்துடன் மீண்டும் வசந்தகாலம் ஆரம்பித்துள்ளது. வெளியில் இளந்தென்றல் வீசியபோதும் வீட்டுக்குள் புழுக்கம். வெளியில் வந்தால் வெக்கை கொட்டுகிறது. சாய்வு நாற்காலியை நித்தியகல்யாணி மரத்தடியில் போட்டுவிட்டு இருக்க மனம் விரும்புகிறது. யாரையாவது உதவிக்குக் கூப்பிடலாமென எண்ணினால் பாவம் தாமரை பகல் முழுவதும் வீட்டு வேலைகளுடன் பேரக்குழந்தைகளையும் என்னையும் பராமரித்த களைப்பில் இப்போதுதான் கண்ணயர்ந்துள்ளாள் போலத் தெரிகிறது.

பொல்லாத வைரஸ் காய்ச்சல் பீடித்து நான்கு நாட்களுக்குள் குணமாகிவிட்டாலும் கால் பாதத்தில் நரம்புகள் பாதிப்படைந்து விட்டதால் நடக்க இயலாது. ஒரு தளம்பல். சமநிலையில்லாத நிலை. ஒவ்வொரு பாதத்திலும் கிலோக் கணக்கில் பாரம் கட்டிவிட்டது போல உணர்வு. பிரயத்தனத்துடன் நடக்க முயன்றாலோ விழுந்து விடுவேனோ என்ற பயம். ஒருவாறு சமாளித்துக்கொண்டு சாய்வு நாற்காலியை இழுத்து இழுத்துக்கொண்டு சென்று நித்திய கல்யாணி மரத்துக்கடியில் போட்டுவிட்டு அதில் மெல்லச் சாய்கிறேன். யாழ்ப்பாணத்துக் கட்டடம் காடுகளுக்கூடாகப் புகுந்து புறப்பட்டு வந்த தென்றல் உடலை மெல்ல வருடிக்கொண்டு செல்கின்றது. சுகமாகவும் இருக்கின்றது.

சாய்வு நாற்காலியை இழுத்த சத்தம் கேட்டதால் அருண்ட தாமரை படுக்கையில் என்னைக் காணாது "எங்கேயிருக்கிறீர்கள்" என்று கேட்டாள். நீர் படுமப்பா... நான் இங்கை காற்றுக்காக வெளியில் வந்திருக்கிறன். உள்ளே ஒரே புழுக்கமாக இருக்கிறது. "கதிரையை எவ்வாறு இங்கே கொண்டு வந்தனீர்கள்" என்னை எழுப்பியிருக்கலாம்தானே.

எத்தனை தடவையப்பா உமது உறக்கத்தை குழப்புவது? பகல் முழுதும் வேலை செய்து விட்டு களைத்துப்போய் படுத்திருக்கும் உம்மை எழுப்ப மனம் வரவில்லை. அதனால் நானே... இழுத்துக்கொண்டு வந்தனான். தவறிக் கிவறி விழுந்து மற்றக் கையையும் உடைத்துக் கொள்ளுற வேலைகள் பார்க்காதையுங்கோ.

இல்லைத்தாமரை, அலாரம் வைத்ததுபோல இரண்டு மணித்தியாலத்துக்கொரு முறை சலம் எடுப்பதற்காக உம்மை எழுப்ப வேண்டியிருக்கே. அதற்கென்ன செய்வது? அவர்கள் தருகின்ற மருந்துக்கு சலம் அடிக்குமென்றுதானே கூறினவை. அப்பத்தானே வருத்தம் சுகமாகும்.

சரி, சரி நீர் படுத்துக்கொள்ளும் உதவி ஏதாவது தேவைப்பட்டால் கூப்பிடுகிறேன் எனக் கூறிவிட்டு வானத்திலே நீந்தி வருகின்ற வெண்ணிலவைப் பார்க்கின்றேன். சித்திரை மாத நிலவு பிரகாசமாயிருக்கிறது. நீலவானப் பின்னணியில் தென்னாங்கீற்றுகளுக்கால் வருகின்ற தென்றல் உடலுக்கு சுகமாயிருக்கின்றது. நித்திய கல்யாணிப் பூக்கள் ஒன்றுடன் ஒன்று ஏதோ இரகசியங்கள் பேசுகின்றன.

எமது திருமண வாழ்வில் ஐந்து குழந்தைகளும் பெண் குழந்தைகளாகவே பிறந்து விட்டதால் அவர்களின் கல்வி, வளர்ப்பு, கல்யாணத்துக் கெனத் தேவைப்படும் காசுக்காக கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. ஓய்வு கிடைப்பதே அரிதாக இருந்தது. தாமரையுடன் கூடியிருந்து பேசவோ, திட்டமிடவோ நேரம் இல்லாமலிருந்தாலும் எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் ஐந்து பெண் குழந்தைகளைப் பெற்ற ஒருவர் தனது ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புகளை எல்லாம் விட்டுப் பிள்ளைகளுக்காக உழைக் கவும் சேமிக்கவும் வேண்டு மென்பது எழுதாதவிதி. ஏனைய இனங்களில் இவ்வாறு சீதனத்துக்காக உழைக்க வேண்டிய தேவைகள் அதிகம் இல்லை. இறைவனின் அருளாசியும் தாமரையின் ஒத்துழைப்பும் நிறையவே இருந்ததால் உழைக்கவும் சேமிக்கவும் முடிந்தது.

பிள்ளைகள் ஐவரையும் உயர்கல்வி கற்க வைக்கவும் அரச தொழில் தேடிக்கொடுக்கவும் முடிந்தது. மூத்தவர் இருவருக்கும் நல்ல இடத்து மாப்பிள்ளை தேடிக்கொடுத்தும் ஆயிற்று. மூன்றாவது மகள் படுசுட்டி. அரச தொழில் பார்க்கும் அவளுக்கு சம்பந்தம் தேடியபோதுதான் 8 இல் செவ்வாய் என்றும் 3 இல் சூரியன் என்றும் என்னை நன்றாகவே அலைய வைத்துவிட்டார்கள். அவளும் திருமணம் இப்போதைக்கு வேண்டாம் என்றும் உயர் கல்வி கற்கவென்றும் பிடிவாதமாக இருக்கவே கடைசி மகளுக்கேற்ற வரன் சந்திக்கக் கல்யாணம் முடித்து வைத்துள்ளேன்.

மூன்றாவது மகளின் திருமணம் பெரும் பிரச்சினையாக இருக்கவே, எனது நண்பர்களதும் உறவினர்களதும் கடும் முயற்சியால் ஒரு சம்பந்தம் பொருந்தி வந்தாலும் அவளுக்கான வீடும் காணியும் இராணுவம் பிடித்து வைத்துள்ள பகுதிக்குள் அமைந்திருந்தது. மாப்பிள்ளை வீட்டு ஆட்கள் காணி வீடு வளவு விடுபட்டு எழுதித்தந்தால்தான் திருமணம் வைக்கலாம் என்று கூறவே, நானும் அதை மீட்க நன்றாக அலைந்து விட்டேன். ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், மகஜர்கள், மீட்புப் போராட்டம் என அலைந்து களைத்துவிட்டேன். இரும்பு நிர்வாகம் இரங்கவே இல்லை.


ஆட்சி மாற்றத்தாலோ, வேறேதன் அழுத்தம் காரணமாகவோ தைப்பொங்கலுடன் வீடுவளவு அடங்கிய காணியுடன் பெருநிலப்பரப்பு விடுவிக்கப் பெற்று உரிமையாளர்களிடம் கையளிப்பதாகக் கூறுகின்றனர். இவ்வாறு பல தடவைகள் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருப்பினும் இப்போதுள்ள அரச தலைவரின் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைத்து, மூன்று வருடங்களுக்கு முன்னரே பொருத்தி வைத்திருந்த மாப்பிள்ளை வீட்டார்கள் எங்கடை வீட்டுக்கு வந்து திருமணப் பேச்சை ஆரம்பித்தனர்.

ஆரம்பத்திலிருந்து நாம் இதையே கூறி வருகின்றோம். அவளுக்கான காணி வீட்டை மீட்டுத் தருவோம் என்றுதான் கூறிக்கொண்டேயிருக்கிறோம். இப்போதும் நிச்சயமில்லாத காணியையும் வீட்டையும் எப்படி எழுதித் தருவது. அவளும் படிக்கவென்று பதிவுகள் செய்துவிட்டு நிற்கிறாள். காணி வரட்டும், படிப்பும் முடியட்டும் என நான் கூறியபோதும் தாமரை விடாப்பிடியாக இணங்க வைத்துவிட்டாள். அண்மையில் வரும் நாளொன்றில் அதற்கான பூர்வாங்க நடைமுறைகள் எடுக்கவும் இணங்கிக் கொண்டிருந்த வேளை அறைக் கதவைத் திறந்து வெளியே வந்தவள் எவனொருவனினதோ கதையைக்கேட்டு ஐயறவு கொண்டு சீதையைத் தீக்குளிக்க வைத்த இராமனுக்கும் வேடம் பூண்டுவந்து அகலிகையை புணர்ந்த இந்திரனால் தான் ஏமாற்றப்பட்ட, ஆற்றாமையால் கோபம் கொண்டு அகலிகையைக் கல்லாய்ப் போகச் சாபமிட்ட கௌசிகனுக்கும் இவர்களுக்கும் அதிக வேறுபாடு தெரியவில்லை அப்பா. எல்லா வேளைகளிலும் பெண்களைக் குற்றம் காண்பதும் சந்தேகம் கொள்வதும் ஆணினத்தின் ஆற்றலில்லாமையைத்தான் காட்டுகின்றது. காணி போனாலும் வீடு போனாலும் நாம் இருவரும் சேர்ந்து தேடிக் கொள்ளலாம் என்ற தற்துணிவு இல்லாதவர்களுடன் என்னால் இணைந்து வாழமுடியாதப்பா. பெண் படித்திருக்கிறாளா?, நல்ல குண இயல்பு உள்ளவளா?, குடும்பத்திற்கு ஏற்றவளா? என்பது பற்றிக் கதைக்காமல் காணி, வீடு பற்றிக் கதைப்பவர்களுடன் வாழமுடியாதப்பா.

காணிக்காகவும் வீட்டுக்காகவும் வந்தவர்களுக்குக் காணியையும் வீட்டையும் எழுதிக் கொடுங்கள். என்னைக் கட்டிக்கொடுக்காதீர்கள். எனக்கு வேலையுண்டு, வருமானமுண்டு. போலியாக அன்பு செலுத்தவும் வாழவும் என்னால் முடியாதப்பா என்று கூறிவிட்டு அறைக்குள் சென்றுவிட்டாள். நானும் அவர்களும் விக்கித்து நின்றோம். முதலில் நீங்கள் உடன்படவில்லை. இப்போது அவள் இஷ்டப்படுகிறாள் இல்லை. எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று வாய் கூறினாலும் நல்லாய்க் கேட்டாள் என மனம் நினைத்துச் சந்தோசப்பட்டது.

இளந்தென்றல் வீசும் சித்திரை மாத இரவில் நித்தியகல்யாணி மர அடியில் சாய்மனைக் கதிரையில் சாய்ந்தபடி அவளின் ஒவ்வொரு வார்த்தையிலும் காணப்பட்ட தெளிவும் உறுதியும் நிதானமும் எண்ணிப் பெருமிதம் கொள்ள வைக்கிறது. சமூகத்திற்குப் பயந்து சாக்கடைக்குளய் குதிக்கேலாது.

மயூரதன்,
யாழ்ப்பாணம்.



# மிச்சக்காசு

தொண்டைமனாறு ஆற்றின் மீதான இனிய உப்புக் காற்று உடலை வருடிச் செல்ல சந்நிதியானை வழிபட்டு விட்டு அவசர அவசரமாக 751 அரச பேருந்தைப் பிடிப்பதற்காக மனைவி பிள்ளைகளுடன் வேக வேகமாக நடந்தார் சத்தியன் ஏதோ வேகநடைப் போட்டியில் பங்குபற்று வது போன்று... சத்தியன் சந்நிதியான் என்று முழு நம்பிக்கை சத்தியனின் அனைத்து வேண்டுதல்களையும் சந்நிதியான் நிறைவேற்றி வைத்திருக்கிறான்... அதனால் என்ன வேலை கிடந்தாலும் மனைவியுடன் ஒவ்வொரு வெள்ளியும் சந்நிதிக்குப் போகாவிட்டால் மனுசனுக்கு பத்தியப்படாது.

இண்டைக்கு இந்த பேருந்து நடத்து நருக்கு சரியான காசை கொடுக்க வேண்டும். மிச்சக்காசு வாங்கிற தென்றால் சரியான பாடு.. ஒருவருக்கு நாற்பத்தேழு ரூபா என்று மனிசியும் நானும் போனால் தொன்னூற்று நான்கு ரூபாவுக்காக நூறு ரூபா தாளை நீட்டினால் சில நடத்துநர்கள் ஆறு ரூபா தரமாட்டாங்கள்... இவங்களுக்கு ஏன் ஆறு ரூபாவை நான் விட வேண்டும்.

இன்று இரண்டு முழுசு இரண்டு அரை அப்ப நூற்று நாற்பத்தொரு ரூபா வரும் என்ன செய்யலாம். என்னட்ட ஒரு ரூபா சில்லறை இல்லை. எதற்கும் பேருந்து வரட்டும் பிறகு இதைப் பற்றி யோசிப்பம் என்று தொண்டை மானாற்றுச் சந்தியை அடைந்தார் சத்தியன்.

ஆறு பத்தாயிற்று இன்னமும் பேருந்தைக் காணவில்லை. பேருந்தைத் தவற விட்டு விட்டோமோ என்று ஒரே மனப்பட படப்பு. இறுதி பேருந்து தவறவிட்டால் பருத் தித்துறை வீதிக்குப் போய்த்தான் பேருந்து எடுக்க வேண்டும். தனிய என்றால் சமா ளிக்கலாம். மனிசி பிள்ளைகளும் வந்திருப்பதால் முச்சக்கர வண்டியை பிடித்துத்தான் போக வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்த போது தூரத்தில் பேருந்து வருவதைக் கண்டார்.

**சில்லறைத்தனமான சிரிப்பை நிறுத்து. உழைப்புக்கு தான் ஊதியம் வழங்க வேண்டும். அவருக்கு சம்பளம் கிடைக்குது தானே. அதற்கு பிறகு ஏன் இந்த வெட்டுக்கொத்து.**

அப்பாடா முருகன் என்னைக் கைவிட மாட்டார் என்றவர் பேருந்து வந்ததும் ஏறி முத்திரைச் சந்திக்கு இரண்டு முழுசு இரண்டு அரை என்று நூற்றைம்பது ரூபாவை நீட்டினார். நடத்துநர் பயணத்திற்கான சீட்டை கொடுத்தார். மிச்சக்காசு வரும் என்று எதிர்பார்த்த சத்தியனுக்கு மிச்சக்காசு வராததால் உள்ளுக்குள் கோபம் வந்தது. தம்பி நூற்றி நாற்பத்தி ஒரு ரூபாய் தானே மீதி எங்கே என்றதும் நடத்துநர் ஐந்து ரூபாவைக் கொடுத்தார். சத்தியன் விடவில்லை. தம்பி இன்னமும் நான்கு ரூபா தர வேண்டும் என்றதும் நடத்துநர் மீண்டும் ஒரு ஐந்து ரூபாவைக் கொடுத்து விட்டு ஏதோ சொல்ல கீழ இருந்த பயணி சிரித்தார்.

சத்தியனுக்குக் கோபம் பத்திக் கொண்டு வந்தது. தம்பி இஞ்ச பார் எனக்கு நான்கு ரூபா பெரிய காசில்லை எத்தனையே பேருக்கு நான் உதவி செய்யிறன். அதைச் சொல்லிக் காட்டக்கூடாது. மாதாந்தம் பத்து மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனத் திற்கான கட்டணத்தை நான் இலவசமாக கொடுக்கிறன். இந்த சில்லறைத்தனமான சிரிப்பை நிறுத்து. உழைப்புக்கு தான் ஊதியம் வழங்க வேண்டும். அவருக்கு சம்பளம் கிடைக்குது தானே. அதற்கு பிறகு ஏன் இந்த வெட்டுக்கொத்து.

சத்தியன் இது தான் சந்தர்ப்பம் என்று எடுத்துவிட்டார். கடையில பொருள் வாங்கப் போனா மிச்சக்காசு இல்லை என்று இனிப்புக்களை கொடுக்கிறது. அந்த இனிப்புக் களுக்குள்ளும் கடைக்காரருக்கு ஒரு இலாபம் இருப்பதுடன் எங்களுக்கு நீரழிவு நோய்தான் வருகிது. மொத்தத்தில நாங்கள் முட்டாளாவது தான் மிச்சம். ஏன் கடந்த வருடம் தான் இலங்கை மத்திய வங்கி அதிகளவு சில்லறை நாணயங்களை யாழ்ப்பாணத்திற்கு வழங்கிச்சு. அப்படியிருக்க இந்தச் சில்லறைக் காசு எல்லாம் எங்க காணாமல் போகுது. எல்லாம் கடவுளுக்குத் தான் வெளிச்சம். என்னிலும் ஒரு தவறு இருக்கு பயணத்தின் போது நான் தேவையான சில்லறையைக் கொண்டு வராமவிட்டது. இப்ப நான் நடத்துநருக்கு ஒரு ரூபா கடனாளி.

என்னதான் இருந்தாலும் வீட்டுக்குள்ள இருக்கிற சில்லறைகள் வெளியால வரும் வரை சில்லறைத் தட்டுப்பாடு இருக்கும் தான் என்று கூற சத்தியனின் மனைவி "அப்பா சும்மா இருங்கோ எல்லாரும் பார்க்கினம்" மானம் போகிது தயவு செய்து அமைதியாக இருங்கோ.

இப்படியே கதைத் துக் கொண்டு முத்திரைச் சந்தியை அடைந்தார் சத்தியன். பேருந்திலிருந்து இறங்கி வீடு நோக்கிப் புறப்பட்டார். இருந்தபோதும் அவரது மனதில் நடத்துநரின் ஒரு ரூபா தன்னிடம் இருப்பது மிகவும் மனச்சுமையாகவே இருந்தது.

**— சத்திரியன் —**

# சிரி... சிரி...



நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மக்களின் செலவைக் குறைக்க பொங்கலுக்கு அடுத்த நாளே தீபாவளியைக் கொண்டு வருவோம்.

"டாக்டர், நெஞ்சுவலி வந்ததும் முதலுதவி என்ன செய்யணும்?" "எதுக்குக் கேட்கறீங்க?" "தீபாவளிக்குப் முப்பதாயிரம் ரூபாயில பட்டுப் புடைவை எடுத்திருக்கேன். பில்லை என் கணவர்கிட்டேயும் என் மாமியார்கிட் டேயும் காட்டணும். அதான் கேட்டேன்."





ஒரு வருஷமா என் க்ளினிக்குக்கு வர்றீங்களே... முன்னேற்றம் தெரியுதா?"
"தெரியுது டாக்டர்"
முதல்ல நீங்க சுவீலர்ல வந்தீங்க...
அப்புறம் மாருதி கார்ல வந்தீங்க.
இப்போ ஆடி கார்ல வர்றீங்க..."


இந்தப் பட்டாசுக்கு ஏன் என் பேரை வெச்சிருக்காங்க?"
"இது என்ன பண்ணினாலும் வெடிக்காது தலைவரே!"
ஆனா குண்டு வெடிக்கும் போர் மூழும் என்று அறிக்கை மட்டும் விடுவீங்களே அதுதான்!





"எனக்கு வாரிசு அரசியல்ல விருப்பமே இல்லை."
"அப்புறம் எதுக்கு தலைவரே உங்க பையனை கட்சிக்குக் கொண்டுவந்து பொறுப்பு குத்தீங்க?"
"அது ஒண்ணும் என்னோட விருப்பம் இல்லையே... என் பையனோட விருப்பம்தானே...'

# உலகில் மிக நீண்ட சட்டவிரோத சுரங்கம்



உலகின் மிக நீளமான சட்டவிரோத கடத்தல் சுரங்கம், அமெரிக்காவுக்கும் மெக்ஸிக்கோவுக்கும் இடையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மெக்ஸிக்கோவின் திஜுவானா நகரையும் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள சான் டியாகோ நகரையும் இணைக்கும் வகையில் இச்சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுரங்கத்தின் நீளம் 1313 மீற்றர் (4309 அடி) ஆகும். ரயில் தண்டவாளம், வடிகால் மற்றும் காற்றோட்டத்துக்கான முறைமை, உயர் மின்விநியோக முறைமை ஆகியனவும் இச்சுரங்கத்தில் உள்ளன. உலகின் மிக நீளமான கடத்தல் சுரங்கம் இது என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சுரங்கத்தை கண்டுபிடித்த அதிகாரிகள், அங்கு போதைப்பொருட்கள் எதையும் கண்டுபிடிக்கவில்லை. எவரும் கைது செய்யப்படவும் இல்லை. இச்சுரங்கத்தை யார் நிர்மாணித்தார்கள் என அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. எனினும், மெக்ஸிக்கோவின் போதைப்பொருள் கடத்தல் குழுக்கள் அப்பகுதியில் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# என் சகாக்களுக்கு கொரோனா தொற்றாமல் மூச்சை நிறுத்திக் கொள்கிறேன்

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் சீன மக்கள் முடங்கியுள்ளனர். இதுவரை 1500இற்கும் அதிகமானவர்கள் உயிழந்துள்ளனர். 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இதன் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை வைத்தியசாலைகளில் இருந்து 6 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மக்கள் தொகை அதிகம் கொண்ட சீனாவில்,' மருத்துவர்கள் குறைவாக உள்ளனர் என்பதை சமீபத்தில் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்தது. சீனாவில் 10,000 மக்களுக்கு 2 மருத்துவர்கள் என்ற ரீதியில்தான் உள்ளனர் என உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது. வைரஸ் தாக்கம் அதிகம் பாதிக்கப்பட்ட வுஹான் மாகாணத்தில், மருத்துவப் பணியாளர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். மருத்துவ ஊழியர்கள் இரவு-பகல் பார்க்காமல் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், சீன அரசு வெளியிட்டுள்ள ஒரு தகவல் மக்களை அதிர்ச்சியடையவைத்துள்ளது. சீனாவில் 1,700 மருத்துவப் பணியாளர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 6 பேர் உயிரிழந்துவிட்டதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. சீன ஊடகங்களில் கடந்த சில நாட்களாக வெளியான மருத்துவப் பணியாளர்களின் புகைப்படங்கள், கொரோனாவின் தாக்கத்துக்கு எதிரான அவர்களின் தியாகங்களை வெளிப்படுத்துவதாக இருந்தது. முகத்தில் மாஸ்க் அணிந்து நீண்ட நேரம் பணியாற்றுவதால் ஏற்பட்ட வடுக்கள். அந்தக்காயங்களுக்கு பிளாஸ்டர் போட்டுக்கொண்டு சேவையாற்றும் செவிலியர்களின் புகைப்படங்கள், அவர்களின் தியாகத்தை உணர்த்துவதாக இருந்தது.

இந்நிலையில், மருத்துவப் பணியாளர்களுக்கு கொரோனா பாதிப்பு இருப்பதாக வெளியான தகவல், சீன மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. மருத்துவ ஊழியர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இதுவே மருத்துவப் பணியாளர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படக் காரணம் என்றும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.


**என் உடலில் இருக்கும் கொரோனா வைரஸ், சக நண்பர்களைத் தாக்கிவிடுமோ எனப் பயமாக இருக்கிறது. அவர்கள் என் அறைக்கு வரும்போது, நான் மூச்சுவிடுவதை நிறுத்திக்கொள்கிறேன்.**



வுஹான் மாகாணத்தில் உள்ள சென்ட்ரல் வைத்தியசாலையில், 150 இற்கும் மேற்பட்ட மருத்துவ ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். அங்கு பணிபுரியும் செவிலியர் ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார். இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அவர் பணியாற்றிய அதே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைத்தளத்தில் அந்த செவிலியர் வெளியிட்டுள்ள பதிவில், "நான் அனுமதிக்கப்பட்டிருக்கும் தளம் மருத்துவ ஊழியர்களால் நிரம்பிக் காணப்படுகிறது. என் உடலில் இருக்கும் கொரோனா வைரஸ், சக நண்பர்களைத் தாக்கிவிடுமோ எனப் பயமாக இருக்கிறது. எனவே, அவர்கள் என் அறைக்கு வரும்போது, நான் மூச்சுவிடுவதை நிறுத்திக்கொள்கிறேன்" என்று சோகமாகப் பதிவிட்டுள்ளார்.

## அவதானம்



மூடிய நிலையில் உள்ள ஷூ, செருப்பு ஆகியவற்றின் உள்ளே பல்லி, பூரான் உள்ளிட்டவை இருக்கக்கூடும் என்பதால், அணியும் முன் அவற்றைச் சோதனையிட வேண்டும்.

இந்தியாவில் பெண் ஒருவர் அணியும் ஷூவுக்குள் விஷப்பாம்பு இருந்த விவகாரம் இப்போது தெரிய வந்திருக்கிறது.

ஆடம்பரப் பொருள்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் பணியாற்றும் ஜசீரா, வேலை முடிந்து இரவில் வீட்டுக்கு வந்து காலணியைக் கழற்றி வைத்துள்ளார். மீண்டும் காலையில் பணிக்குச் செல்வதற்காகப் புறப்பட்டபோது,

ஷூவின் உள்ளே இருந்த சாக்ஸை எடுத்ததும் உள்ளே இருந்து ஏதோவொன்று அவரது கையைக் கடிக்க நீண்டு வெளியே வந்திருக்கிறது. அச்சமடைந்த அவர், கூச்சலிட்டபடி ஷூவைத் தூக்கி வீசிவிட்டார். சத்தம் கேட்டு வீட்டினர் அங்கு வந்து பார்த்தபோது, ஷூவுக்குள் இருந்து பாம்பு வெளியே வந்திருக்கிறது.

சட்டித்தலையன் வகை பாம்பு

சட்டித்தலையன் வகை பாம்பு, ஒரேநேரத்தில் பலமுறை கடித்து விஷத்தைச் செலுத்தும் என்பதும் தெரியவந்ததால், குடும்பத்தினர் அதிர்ச்சி அடைந்தனர்.

அந்தப் பாம்பு எப்படி வீட்டுக்குள் வந்தது என்பது தெரியாமல் குழம்பிவருகிறார்கள். பிடிபட்ட பாம்பு, பாதுகாப்பாக வனப்பகுதிக்குள் விடப்பட்டது.

# அசைக்க முடியாத ட்ரம்ப்



அமெரிக்க செனட் சபையில் பதவி நீக்கத் தீர்மானம் தோல்வி அடைந்ததால் ஆபத்தின்றி ஜனாதிபதி பதவியில் தொடர்கிறார் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். அமெரிக்க அரசியல், கட்சிரீதியாகப் பிளவுபட்டிருப்பதை மட்டுமல்ல் முக்கிய எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சிக்குள்ளேயே உள்ள பிளவுகளையும் இது வெளிக்கொண்டு வந்திருக்கிறது. தனக்கு எதிரான தீர்மானம் தோற்றுவிட்ட பிறகு, தான் குற்றம் ஏதும் செய்யவில்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டதாகக் கூறியிருக்கிறார் ட்ரம்ப். ஆனால், அதில் உண்மை இல்லை.

ஜனாதிபதித்தேர்தலில் ட்ரம்ப்புக்கு எதிராகப் போட்டியிட வாய்ப்புள்ள முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடேனுக்குக் களங்கத்தை ஏற்படுத்தத் தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த முயன்றார் ட்ரம்ப். ஜோ பிடேனின் மகன் ஹண்டர் பிடேன், உக்ரேய்ன் நாட்டில் வணிகத்தில் ஈடுபட்டார். அவர் மீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, விசாரணை நடத்த வேண்டும் என்று உக்ரேய்ன் நாட்டு ஜனாதிபதியை ட்ரம்ப் கேட்டுக்கொண்டார். அவர் தயங்கியபோது, அந்த நாட்டுக்கான நிதியுதவியை உடனடியாக வழங்காமல் தாமதப்படுத்தினார் ட்ரம்ப். இது அரசியல் ஆதாயத்துக்காக அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் செயல் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. அந்தக் குற்றச்சாட்டை அமெரிக்க நாடாளுமன்றக் குழு விசாரிக்க ட்ரம்ப் ஒத்துழைக்கவில்லை. நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குலைக்க முயன்றார் என்பது ட்ரம்ப் மீதான இன்னொரு குற்றச்சாட்டு.

பதவியில் இருக்கும் ஜனாதிபதியை நீக்க வேண்டும் என்றால், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும். ட்ரம்ப் உறுப்பினராகவுள்ள குடியரசுக் கட்சி பெரும்பான்மை வகிக்கும் செனட் சபையில் தீர்மானம் வெற்றி பெறாது என்பது ஏற்கனவே தெரிந்த விடயம்தான். குடியரசுக் கட்சி முழுதாக அவரை ஆதரித்தது. அந்தக் கட்சியின் மிட் ரோம்னி மட்டும் ட்ரம்ப் மீதான இரண்டு குற்றச்சாட்டுகளில் ஒன்றை ஆதரித்து, ஜனநாயகக் கட்சியினருடன் சேர்ந்து வாக்களித்தார். இந்தத் தீர்மானம் மூலம் ட்ரம்ப்பைப் பதவிநீக்கம் செய்ய முடியாது என்று தெரிந்தும் ஜனாதிபதி செய்தது குற்றமே என்று நாடறியச் செய்வதற்குத்தான் இந்த முயற்சியில் இறங்கியதாக ஜனநாயகக் கட்சிக்காரர்கள் பதில் அளிக்கின்றனர். இந்த விசாரணையும் பதவிநீக்கத் தீர்மானமும் ஜனநாயகக் கட்சியினர் எதிர்பார்த்தபடி ட்ரம்ப்பின் புகழைக் குலைத்துவிடவில்லை. அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாகப் போட்டியிட அவருக்கு ஆதரவு பெருகியிருக்கிறது.

அமெரிக்காவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 43.5% முதல் 49% வரையிலான அமெரிக்கர்கள் ட்ரம்ப்பை ஆதரித்துள்ளனர். அவர் ஜனாதிபதியானது முதல் இதுவரை இந்த அளவுக்கு அவரை அமெரிக்கர்கள் ஆதரித்ததில்லை. அதே வேளையில், தார்மீக அடிப்படையில் பதவி விலகல் தீர்மானத்தைக் கொண்டுவந்த ஜனநாயகக் கட்சியினரிடையே பிளவு ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்க வாக்காளர்கள் முக்கிய பிரச்சினைகளாகக் கருதுபவை மீது அக்கறை செலுத்தி, ஒற்றுமையாக இருந்து வெளிப்படையாகச் செயற்பட்டு, ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தால்தான் வெற்றி பெற முடியும்.

# தமிழர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்

# மோடியின் கூற்றை அக்கறையுடன் நோக்குமா இலங்கை

இந்தியாவின் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு இருந்த விசேட அந்தஸ்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் நீக்கி அந்த மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாக தரங்குறைத்து பிரித்து வைத்த செயலின் பின்னணியில் நோக்குகையில், இலங்கைத் தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்குமாறு அவர் வலியுறுத்துவது வெறுமையானதாகத் தோன்றுகிறது என்று இந்தியாவின் இரு பிரபல தேசிய ஆங்கில பத்திரிகைகள் கூறியிருக்கின்றன.

இலங்கையின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு பிரதமர் மோடியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து ஆசிரிய தலையங்கங்களை தீட்டியிருக்கும் த இந்துவும் டெக்கான் ஹெறால்டும் இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு விடுத்த வேண்டுகோள் தொடர்பில் பிரதமர் ராஜபக்ஷ உறுதியான முறையில் பதிலளிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியிருப்பதுடன் இலங்கை அரசாங்கம் மோடியின் கோரிக்கையை பாரதூரமான அக்கறையுடன் கவனத்தில் எடுப்பது சாத்தியமில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றது.



## த இந்து

"முதல் வருகை : என்ற தலைப்பில் த இந்து பத்திரிகை தீட்டியிருக்கும் ஆசிரியர் தலையங்கம் வருமாறு :

இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பிறகு வெளிநாடொன்றுக்கான முதன் முதலான விஜயமாக கடந்த வருடம் நவம்பரிலும் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்ற பிறகு முதன் முதலாக வெளிநாட்டுப் பயணமாக கடந்த வாரமும் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயங்கள் புதிய இலங்கை - இந்திய அத்தியாயமொன்றின் தொடக்கத்துக்கான நம்பிக்கைக்கு சமிக்ஞை காட்டியிருக்கின்றது. 2015 ஜனவரியில் முடிவுக்கு வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னைய ஆட்சிக் காலத்தின் இறுதியில் (அப்போது கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராகப் பதவி வகித்தார்). இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் பல காரணிகளினால் கசப்புக்குள்ளானதற்கு முரணாக புதிய ஒரு ஆரம்பத்தை செய்வதற்கு விருப்பங்களைக் கொண்டிருப்பதாக டில்லியும் அறிகுறி காட்டியது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவும் ஜப்பானும் கூட்டாக முன்வைத்திருக்கும் யோசனைகள் உட்பட பல அபிவிருத்தி செயற்றிட்டங்களில் பணியாற்றுவதற்கு இந்தியா அக்கறை காட்டியிருக்கிறது.

இந்தியாவின் 40 கோடி டொலர்கள் கடனுதவியை விரிவுபடுத்துவது குறித்தும் நாடளாவிய ரீதியில் வீடமைப்பு திட்டங்களுக்கான இந்தியாவின் மேலதிக உதவி குறித்தும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது டில்லி விஜயத்தின்போது இந்திய பிரதமருடன் ஆராய்ந்தார். இலங்கையின் வடக்கிற்கும் கிழக்கிற்குமான விமான சேவைகள் ஏற்கனவே மேம்படுத்தப்படுகின்றன. யாழ்ப்பாணத்திற்கு இந்தியாவிலிருந்து ஒரு விமான சேவை இடம்பெறுகிறது. மட்டக்களப்புக்கான இன்னொரு விமான சேவை குறித்தும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவும் பிரதமர் மோடியும் பாதுகாப்பு விவகாரங்களைப் பொறுத்தவரை, புலனாய்வு தகவல் பரிமாற்றம், பயிற்சியளிப்பு, கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு பிறகு இந்தியாவினால் அறிவிக்கப்பட்ட 5 கோடி டொலர் விசேட கடனுதவியைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்து ஆராய்ந்தார்கள். இந்தியாவும் இலங்கையும் மாலைதீவும் பாதுகாப்பு தொடர்பான முத்தரப்பு ஏற்பாடுகளை புதுப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நட்புரிமை உணர்ந்து கொள்ளப்படக்கூடியது. ஆனால் அதில் இருக்கக் கூடிய கீறல்களையும் வெளிப்படையாகப் பார்க்கக் கூடியதாய் இருக்கின்றது. சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை இலங்கை நிறைவேற்றும் என்றும் அரிசியலமைப்புக்கான 13 ஆவது திருத் தத்தின் பிரகாரம் அதிகாரத்தைப் பரவலாக்கும் செயற் பாடுகள் முன்னோக்கி நகர்த்தப்படுமென்றும் இந்தியா நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பதாக பிரதமர் மோடி கூறினார்.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ இந்த விவகாரத்தில் எந்த உறுதிப்பாட்டையும் வழங்கியிருக்கவில்லை. 13 ஆவது திருத்தத்தை தாம் விரும்புவதாகவும் ஆனால் பெரும்பான்மை சிங்கள சமூகத்திற்கு ஏற்புடைய தல்லாத தீர்வுகளைக் காணமுடியாது என்றும் த இந்து பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் அவர் கூறியிருந்தார்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு விசேட அந்தஸ்தை வழங்க வேண்டும் என்று இந்தியா கொடுக்கின்ற குரல் ஜம்மு - காஷ்மீருக்கான விசேட அந்தஸ்தை நீக்கு வதில் மோடி அரசாங்கம் வெளிக்காட்டிய உறுதியான நிலைப்பாட்டுடன் முரண்பாடானதாக இருக்கிறது.

திருகோணமலையில் சக்தி மற்றும் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களில் இந்தியாவின் பங்கேற்பையும் மத்தள விமான நிலையத்தில் இந்தியா பங்குகளைக் கொண்டிருப்பதையும் அனுமதிக்கும் வகையில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் கைசாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொண்டு முன்னெடுப்பதற்கு வாய்ப்புக்களே இல்லை என மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக தெரிவித்தார்.

ஆனால் இலங்கை அதன் கடன் நெருக்கடியை கையாள்வதற்கு இந்தியாவின் உதவியை பிரதமர் ராஜபக்ஷ கேட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும். இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கள் 6000 கோடி டொலர்கள் நிலுவையாக உள்ளது. இதில் வருடாந்தம் சுமார் 500 கோடி டொலர்களை மீளச் செலுத்த வேண்டியிருக்கிறது. மூன்று வருடங்களுக்கு கடன் மீளச் செலுத்துகையை முடக்கி வைப்பதற்கு அவர் விடுத்திருக்கும் வேண்டுகோளை டில்லி மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதற்கு இந்தியா அளிக்கக்கூடிய பதில் நேர்மையானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து தருமாறு இலங்கை முன்னர் விடுத்த வேண்டுகோளை டில்லி ஏற்றுக் கொள்ளாததால் சீனாவுக்கு அந்த வாய்ப்பு போய்ச் சேர்ந்த கடந்த காலத்தைப் போன்று இலங்கையின் புதிய வேண்டுகோளை அலட்சியம் செய்வதோ அல்லது மறுப்பதோ இருதரப்பு உறவுகளுக்கு பெருமளவில் சேதத்தை ஏற்படுத்தக் கூடும்.

## டெக்கான் ஹெறால்ட்

"இலங்கையுடன் இன்னொரு அடி முன்னோக்கி" என்ற தலைப்பில் டெக்கான் ஹெறால்ட் அதன் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்திருப்பதாவது.

இலங்கையின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது எந்தவொரு இணக்கப்பாடும் ஏற்படவில்லை. அல்லது எந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என்ற போதிலும் அந்த விஜயம் ஆக்கபூர்வமாக அமைந்தது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பொறுத்தவரை முன்னாலுள்ள பாதை குறித்து சிறந்த தெளிவை இரு தரப்புகளுக்குமிடையிலான பேச்சுகள் கொடுத்திருப்பது போல் தெரிகிறது. கடந்த டிசெம்பரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விஜயத்தின்போது இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அறிவிக்கப்பட்ட 40 கோடி டொலர் கடனுதவியையும் பயங்கரவாத எதிர்ப்புக்கான 5 கோடி டொலர்கள் மென் கடனுதவியையும் பயன்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து இரு நாடுகளும் ஆராய்ந்திருக்கின்றன.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு மற்றும் புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் குறித்தும் ஆராய்ந்த இரு தரப்பினரும் தங்களுக்கு இடையிலான இரு தரப்புக் கூட்டுப் பங்காண்மையின் பிரதான கவனக்குவிப்பு பாதுகாப்பின் மீதானதே என மீளவும் வலியுறுத்தின.

இலங்கையில் ராஜபக்ஷக்கள் அதிகாரத்திற்கு வருவது குறித்து இந்தியா பெரிய விசனத்தைக் கொண்டிருந்தது. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த கால கட்டத்தில் சீனாவுடனான இலங்கையின் பொருளாதார, பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவை பெருமளவுக்கு வளர்ந்தது. கடன் நெருக்கடிக்குள் சிக்குப்பட்டிருக்கும் இலங்கை பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் சீனாவின் கோரிக்கைகளுக்கு (இந்தியாவுக்கு பாதகமாக அமையக் கூடிய வகையில்) இணங்க நிர்ப்பந்திக்கப்படும் என்று டில்லி அஞ்சியது. கொழும்பு துறைமுகத்தில் சீனக் கப்பல்கள் வந்து தரித்து நிற்பதற்கு இலங்கை அனுமதித்த போது அத்தகைய அச்சங்கள் வலுவடைந்தன. மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருடகால குத்தகைக்கு கையளித்த போது இந்தியாவின் பாதுகாப்பு மீது இலங்கையின் கடன்களினால் ஏற்படக் கூடிய விளைவுகள் அடிக்கோடிட்டு காட்டப்பட்டன. சீனாவுக்கு இலங்கை செலுத்த வேண்டிய பெருமளவு கடனுக்கு கைமாறாகவே அந்த அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவுக்கு பங்குகளை கொடுத்து ஒரு பரிமாற்ற ஏற்பாட்டை முன்னைய அரசாங்கம் செய்ய வேண்டியிருந்தது.

கடன் மீளச் செலுத்துகையை 3 வருட கால கட்டத்திற்கு தாமதிக்குமாறு இந்தியாவிடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது விடயத்தில் இந்தியா தாராள மனதுடன் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நடந்து கொள் வதன் மூலம் கடன் மீளச் செலுத்துகையில் இலங்கை எதிர்நோக்கும் நெருக்குதல்கள் தணியும் என்பது மாத்திரமல்ல. சீனாவின் அரவணைப்பிலிருந்து கொழும்பை விடுவிப்பதை நோக்கிய ஒரு நேர்மறை யான நடவடிக்கையாகவும் அது அமையும்.

அவரின் இந்த வார்த்தைகளை சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உறவுகளுக்கு மேலதிகமாக இந்தியா வுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு ராஜபக்ஷ அரசாங் கம் கொண்டி ருக்கக்கூடிய எந்தவொரு புதிய அக்க றையின் அல்லது விருப்பத்தின் வெளிப்பாடாக டில்லி அர்த்தப்படுத்தி விடக்கூடாது.

இலங்கை தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகளை பொறுத்வரையில் இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதை மகிந்த ராஜபக்ஷ உறுதிசெய்ய வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்திக் கேட்டார். இதுவே இந்தியாவில் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களின் நிலைப்பாடாக இருந்து வந்திருக்கிறது. ஆனால், இந்தியா அதன் சொந்த மாகாணங்களுக்கு வ்ழங்கியிருக்கின்ற அளவு சுயாட்சியை மாத்திரமே இலங்கையின் தமிழ் மாகாணங்களுக்கு வழங்குமாறு சிபாரிசு செய்ய முடியும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே இந்த நிலைப்பாடு அமைந்தது.

காஷ்மீரியர்களுக்கு சுயாட்சியையும் அரசியல் உரிமைகளையும் மோடி அரசாங்கம் நிராகரித்திருக்கும் பின்னணியில், தமிழர் உரிமை தொடர்பான மோடியின் வலியுறுத்தல் ஒரு சாரமற்ற - வெறுமையான ஒன்றாகவே ஒலிக்கிறது. இலங்கை அரசாங்கத்தினால் மோடியின் வலியுறுத்தல் அக்கறையுடன் நோக்கப்படக்கூடிய சாத்தியமில்லை.

## சொத்துக் குவிப்பு வழக்கில் சிறையிலிருக்கும்

# சசிகலாவின் சபதம் நிறைவேறுமா?



ஜெயலலிதா சமாதியில் சசிகலா சபதம் போட்ட தினம் மட்டுமல்ல... பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைக்குப் போன நாளும்கூட. இப்போது மூன்றாம் ஆண்டு நினைவு தினம். அடுத்த ஆண்டு பெப் ரவரி 14 ஆம் திகதிதான் சசிகலா விடு தலை ஆவார் எனப் பலரும் நினைக்க... இந்த ஆண்டே சிறையிலிருந்து சிறகை விரிக்கத் தயாராகிறார்.

வழக்கு விசாரணையில் சென்னையில் 13 நாட்களும் குன்ஹா தீர்ப்புக்குப் பிறகு பெங்களூரில் 22 நாட்களும் என சசிகலா 35 நாட்கள் சிறையில் இருந்திருக்கிறார். அவை தண்டனையில் கழித்துக்கொள்ளப்படும். 'தண்டனையில் மூன்றில் இரண்டு பங்கு காலத்தைச் சிறையில் கழித்து, நன்னடத்தை விதிகளையும் பின்பற்றியிருந்தால் கைதியை முன்கூட்டியே விடுதலை செய்ய வாய்ப்பிருக்கிறது' என்கிறது கர்நாடகச் சிறைத்துறை விதிகள். "கர்நாடகச் சிறைத்துறை வழங்கும் நிவாரண நாட்கள் 361 தினங்கள். ஏற்கனவே அனுபவித்த 35 நாட்களைக் கூட்டினால் 2019 நவம்பரிலேயே சசிகலா விடுதலை ஆகியிருக்க வேண்டும். கூடுதலாகவே இப்போது சிறையில் இருந்து வருகிறார். இதனால், அவர் முன்கூட்டியே விடுதலையாகும் வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது" என்கிறது சசிகலா தரப்பு.

2021 மே மாதம் தமிழக சட்டசபைக்குத் தேர்தல் நடைபெறும் சூழலில், சசிகலாவின் விடுதலை முக்கியத்துவம் பெறுகிறது. அவரை விடுதலை செய்ய அ.தி.மு.க., பி.ஜே.பி. கட்சிகள் விரும்பாது. மற்றவர்களைவிட எடப்பாடிதான் முதலில் எதிர்ப்பார். "தேர்தல் முடிந்த பிறகோ அல்லது நடைமுறைகள் எல்லாம் தொடங்கிய பிறகோ சசிகலாவை விடுதலை செய்யுங்கள்" என பி.ஜே.பி-யிடம் எடப்பாடி வேண்டிக்கொள்வார்.

சிறையில் சசிகலாவுக்கு சொகுசு வசதிகள் செய்துகொடுப்பதற்காகச் சிறைத்துறை ஏ.டி.ஜி.பி. சத்யநாராயணாவுக்கு இரண்டு கோடி ரூபாய் இலஞ்சம் கொடுத்த புகார் விசாரணையில் இருக்கிறது. பண மதிப்பிழப்பின்போது செல்லாத ரூபாய் நோட்டுகளைக் கொண்டு சசிகலா வாங்கிக் குவித்த 1,674 கோடி மதிப்பிலான சொத்துகளை முடக்குவதற்கு வருமான வரித்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனையெல்லாம் தூசு தட்டி, சசிகலாவைச் சிறையிலிருந்து வெளியே வரவிடாமல் தடுக்க முயல்வார்கள். சசிகலா சமாதானமாகப் போனால் நிலைமை மாறலாம். எது எப்படியோ தேர்தல் நேரத்தில் அவர் வெளியே வரக்கூடாது என்பதில் அ.தி.மு.கவுக்கும் பி.ஜே.பிக்கும் இருவேறு கருத்துகள் கிடையாது.

"கிரிமினல் வழக்கில் தண்டனை பெற்றவர்கள், தண்டனை அறிவிக்கப்பட்ட உடனேயே மக்கள் பிரதிநிதி பதவியில் தொடர்வதற்கான தகுதியை இழப்பதோடு, தண்டனை முடிந்த பிறகும் அடுத்த ஆறாண்டுகள் வரை தேர்தலில் போட்டியிட முடியாது" என்கிறது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம். சசிகலா வெளியே வந்தால் தேர்தலில் போட்டியிட முடியுமா? அதற்கான விடை சிக்கிம் மாநிலத்தில் இருக்கிறது.

தமிழகத்தைப் போலவே 'தாமரை' மலராத பூமி சிக்கிம்! 2019 நாடாளுமன்றத் தேர்தலோடு சிக்கிம் சட்டமன்றத்துக்கும் தேர்தல் நடைபெற்றது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக முதல்வராகக் கோலோச்சிக்கொண்டிருந்த "சிக்கிம் ஜனநாயக முன்னணி" தலைவர் பவன்குமார் சாம்லிங்கை வீழ்த்தி, "சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா"வின் தலைவர் பிரேம் சிங் தமாங் முதல்வரானார்.

முதல்வரானாரே தவிர, தமாங் எம்.எல்.ஏ.ஆகவில்லை. ஊழல் வழக்கில் தண்டனை பெற்றதால், அவரால் போட்டியிட முடியவில்லை. அடுத்த 6 மாதங்களுக்குள் ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிட்டு, எம்.எல்.ஏ.ஆனால்தான், அவரால் முதல்வராக நீடிக்க முடியும் என்ற நிலை.

தமாங் 1996-97 ஆம் ஆண்டு அமைச்சராக இருந்தபோது கறவை மாடுகள் வழங்கும் திட்ட ஊழலில் சிக்கி, ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றார்.

2019 சிக்கிம் சட்டசபைத் தேர்தலில் "சிக்கிம் ஜனநாயக முன்னணி" 15 இடங்களில் வென்று எதிர்க்கட்சி ஆனது. "ஆட்சியைப் பிடிக்க முடியாத மாநிலங்களில் கட்சியைக் கைப்பற்று" என்கிற சூத்திரத்தை சிக்கிமிலும் செய்தது பி.ஜே.பி. தேர்தல் முடிந்த இரண்டே மாதத்தில் "சிக்கிம் ஜனநாயக முன்னணி"யின் 10 எம்.எல்.ஏ-க்கள் திடீரென பி.ஜே.பி-யில் ஐக்கியமானார்கள். இதனால், பவன்குமார் சாம்லிங்கின் "சிக்கிம் ஜனநாயக முன்னணி" எதிர்க்கட்சி அந்தஸ்தை இழந்தது. அடுத்து ஆளுங் கட்சிப் பக்கம் வலையை வீசியது.

மத்திய பி.ஜே.பி.ஆட்சியின் ஆசி, முதல்வர் தமாங்குக்குத் தாராளமாகக் கிடைத்தது. விளைவு, தேர்தல் ஆணையத்தில் மனு ஒன்றை அளித்தார் தமாங். "ஆறு ஆண்டுகளுக்குத் தேர்தலில் நிற்க முடியாது என்ற சட்டத்திருத்தம் 2003 ஆம் ஆண்டுதான் கொண்டு வரப்பட்டது. முன்னதாக நடந்த வழக்குக்கு, பின்னர் நிறைவேற்றிய சட்டத்தில் தண்டனை விதிக்க முடியாது. ஆறு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது செல்லாது" என்கிறார்.

தேர்தல் ஆணையமும் 'சரிதான்' என ஏற்றுக்கொண்டு, தேர்தலில் போட்டியிட விதிக்கப்பட்ட தடையை 13 மாதங்களாகக் குறைத்து உத்தரவு பிறப்பிக்கிறது.

டான்சி வழக்கில் தண்டனை பெற்ற ஜெயலலிதா, 2001 தேர்தலில் போட்டியிட முடியவில்லை. தேர்தலில் அ.தி.மு.க.வென்று, ஆட்சியைப் பிடித்தது. ஆளுநராக இருந்த பாத்திமா பீவி ஜெயலலிதாவுக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தபோது எதிர்ப்புக் கிளம்பியது. "தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்த ஜெயலலிதாவுக்கு முதல்வராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தது தவறு.

எம்.எல்.ஏ.ஆக முடியாத ஒருவர் எப்படி முதல்வர் ஆக முடியும்?" எனச் சொல்லி ஜெயலலிதாவின் முதல்வர் பதவியை 2001 செப்டெம்பர் 21 ஆம் திகதி பறித்தது உச்ச நீதிமன்றம். "ஜெயலலிதா முதல்வராக நியமிக்கப்பட்டது செல்லாது" என 18 ஆண்டுகளுக்கு முன்பு உச்சநீதிமன்றம் உரக்கச் சொன்ன விடயம், சிக்கிம் ஆளுநர் கங்கா பிரசாத்துக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் தெரியவில்லை எனச் சொன்னால் அரசியல் அரிச்சுவடி தெரியாதவர்கள் கூட நம்பமாட்டார்கள்.



வழக்கு தொடர்பாக ஒருவர் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று விதிக்கப்படும் கால அளவைக் குறைக்கவோ, இரத்துசெய்யவோ 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் கீழ், தலைமைத் தேர்தல் ஆணையருக்கு அதிகாரம் இருக்கிறது. அதைத்தான் தேர்தல் ஆணையம் பயன்படுத்தியிருக்கிறது என்ற வாதம் வைக்கப்பட்டாலும் நியாயமான அணுகுமுறையா இது? பி.ஜே.பி.கூட்டணிக் கட்சிக்காக தமாங்குக்குத் தரப்பட்ட சலுகையை சசிகலாவும் கேட்பார்.

சசிகலா வெளியே வந்த நாளிலிருந்து ஆறு ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆனாலும் சசிகலா தேர்தலில் போட்டியிடுவார். காரணம் தமாங் ஏற்படுத்திய முன்னுதாரணம்

பி.ஜே.பி.ஆட்சி போட்டுக் கொடுத்த பாதை. சொத்துக் குவிப்பு வழக்கில்ச்சிகலா மீது எப்.ஐ.ஆர்.போடப்பட்டது 1996 ஆம் ஆண்டு. "ஆறு ஆண்டுகளுக்குத் தேர்தலில் நிற்க முடியாது என்ற சட்டத்திருத்தம் 2003 ஆம் ஆண்டுதான் கொண்டுவரப்பட்டது. 1996 ஆம் ஆண்டு போடப்பட்ட வழக்குக்குப் பிறகு நிறைவேற்றிய சட்டத்தைக் கொண்டு தண்டனை விதிக்க முடியாது" எனத் தேர்தல் ஆணையத்தின் கதவுகளைத் தட்டுவார் சசிகலா.

கிரிமினல் அரசியலை எதிர்ப்பதாக பாவ்லா காட்டும் பா.ஜ.க. தங்கள் நலனுக்காக கிரிமினல் அரசியலை ஊக்குவிப்பது சசிகலாவுக்கு சாதகமாக அமையுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### விடுதலை எப்போது?

சசிகலா விடுதலை ஆவது தொடர்பாக அவரின் சட்டத்தரணி ராஜா செந்தூர் பாண்டியன் என்ன சொல்கிறார்?

"சிறை விதிகள் படியும் சட்டப்படியும் சசிகலா முன்கூட்டியே விடுதலை அடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இது தொடர்பான வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுகளும் சாதகமாக இருக்கின்றன.

விடுதலை ஆவதற்கான நாளைக் கடந்து, மூன்று மாதங்களாக அவர் சிறையில் இருக்கிறார். விரைவில் அவர் வெளியே வருவார் என சட்டத்தரணி முறையில் எதிர்பார்க்கிறேன்."

ஜூனியர் விகடன்

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : தேன் நிலவு
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : ஏ.எம்.ராஜா
பாடியவர்கள் : ஏ.எம்.ராஜா, பி.சுசீலா



சின்ன சின்ன கண்ணிலே
வண்ண வண்ண ஓவியம்
அங்கும் இங்கும் யார் வரவை தேடுது
துணை இங்கிருக்க யாரை எண்ணி பாடுது

சின்ன சின்ன கண்ணிலே
வண்ண வண்ண ஓவியம்
அங்கும் இங்கும் யார் வரவை தேடுது
துணை இங்கிருக்க யாரை எண்ணி பாடுது

அல்லித்தண்டு போலவே துள்ளி ஆடும் மேனியை
வெள்ளி நிலா அள்ளிக்கொண்டதோ
அதில் புள்ளி மயில் பள்ளி கொண்டதோ
அல்லித்தண்டு போலவே துள்ளி ஆடும் மேனியை
வெள்ளி நிலா அள்ளிக்கொண்டதோ
அதில் புள்ளி மயில் பள்ளி கொண்டதோ

புள்ளி போடும் தோகையை
வெள்ளி வண்ண பாவையை
அள்ளிக்கொண்டு போகலாகுமோ
நீயும் கள்வனாக மாறலாகுமா

சின்ன சின்ன கண்ணிலே
வண்ண வண்ண ஓவியம்
அங்கும் இங்கும் யார் வரவை தேடுது
துணை இங்கிருக்க யாரை எண்ணி பாடுது

பின்னி வைத்த கூந்தலில்
நீ முல்லை பூவை சூடினால்
கன்னி நடை பின்னல் போடுமா
சிறு மின்னலிடை பூவை தாங்குமா

பின்னி வைத்த கூந்தலில்
நீ முல்லை பூவை சூடினால்
கன்னி நடை பின்னல் போடுமா
சிறு மின்னலிடை பூவை தாங்குமா
மின்னலிடை வாடினால்
கன்னி உந்தன் கையிலே
அன்னம் போல சாய்ந்து கொள்ளுவேன்
அதில் அந்தி பகல் பள்ளி கொள்ளுவேன்

சின்ன சின்ன கண்ணிலே
வண்ண வண்ண ஓவியம்
அங்கும் இங்கும் யார் வரவை தேடுது
துணை இங்கிருக்க யாரை எண்ணி பாடுது

சின்ன சின்ன கண்ணிலே
வண்ண வண்ண ஓவியம்
அங்கும் இங்கும் யார் வரவை தேடுது
துணை இங்கிருக்க யாரை எண்ணி பாடுது

# வி.ஆர்.தொழில்நுட்பத்தின் மூலம் இறந்த மகளுடன் சில நிமிடங்கள்

## கொரிய வீடியோ தரும் நெகிழ்ச்சி

கொரியாவில் ஒரு தாய் தன் இறந்த மகளை வி.ஆர்.தொழில்நுட்பத்தின் உதவியுடன் மீண்டும் சந்தித்துள்ளார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.




நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் டிஜிற்றல் யுகத்தில் சாத்தியமற்றது என்று நினைக்கும் விடயங்களையும் எளிதாகச் சாத்தியப்படுத்தலாம் என்ற நிலை உள்ளது. அப்படித்தான் இறந்த தன் மகளை டிஜிற்றல் முறையில் மீண்டும் சந்தித்துள்ளார் ஒரு கொரியத் தாய்.



இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் ஆதரவு பெற்றுள்ளது. அதே நேரத்தில் இதைப் பல உளவியல் ஆய்வாளர்கள் கடுமையாக விமர்சித்தும் வருகின்றனர்.

கொரியாவைச் சேர்ந்த ஜாங் ஜி சாங் என்ற பெண்ணின் மகள் நயோன். இவருக்கு 7 வயதாக இருக்கும்போது, அதாவது கடந்த 2016 ஆம் ஆண்டு ஒருவித அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். வி.ஆர். (virtual reality) கண்ணாடியின் உதவியுடன் இறந்த தன் மகளுடன் மீண்டும் இணைந்துள்ளார் ஜாங் ஜி. இந்த நிகழ்வு "உன்னைச் சந்திக்கிறேன்" என்ற தலைப்பில் அந்நாட்டு ஊடகத்தில் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

கொரியாவைச் சேர்ந்த எம்.பி.சி.என்ற நிறுவனம்தான் சிறுமி நயோனின் உருவத்தைத் தத்ரூபமாக வடிவமைத்துள்ளது. பளிச்சென மின்னும் கண்கள், கரும் அடர்த்தியான முடி, அவரது மாறாத குரல், உடல் நளினம் என அனைத்தையும் பார்த்துப் பார்த்து வடிவமைத்துள்ளது. நயோனின் தாய் வி.ஆர்.கண்ணாடி அணிந்தபடி நிற்கிறார். அப்படியே அவரது விழிகள் ஒரு பூங்காவில் விரிகிறது. ஒரு பாறையின் பின்னால் இருந்து நயோன் தாயை நோக்கி ஓடி வருகிறார்.

நீண்ட வருடங்களுக்குப் பிறகு தன் மகளைக் கண் எதிரே பார்த்த ஏக்கத்தில் அப்படியே உடைந்து அழுகிறார் ஜாங் ஜி. பின்னர் தாயும் மகளும் பேசிக்கொள்கிறார்கள். இறப்பின் நிதர்சனத்தை தன் தாய்க்குப் புரிய வைக்கிறார் நயோன். இருவரும் இணைந்து விளையாடுகிறார்கள். "நான் உன்னை நிறைய



மிஸ் பண்ணுகிறேன்" என இருவரும் மாறி மாறிக்கூறிக்கொள்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் சிறுமி தன் தாயைச் சுற்றி வந்து அவருக்கு ஒரு மலர்க் கொத்து கொடுத்து, "இனிமேல் எனக்கு எந்த வலியும் கிடையாது. அதை நீங்கள் பார்க்கலாம்" என்று புன்னகையுடன் கூறுகிறார். இறுதியாகச் சிறுமி உறங்கச் செல்வதுடன் வீடியோ முடிகிறது.

இதில் விசேட கையுறை அணிந்து ஜாங் ஜி தன் மெய் நிகர் (virtual) மகளைத் தொடுவதற்குச் சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. தாயும் மகளும் பேசிக்கொள்வதைப் பார்த்துக்கொண்டிருந்த நயோனின் தந்தையும் சகோதரரும் கண்ணீர் வடித்தனர். தன் பெற்றோர், அன்புக்குரியவர்கள், குழந்தைகளை இழந்தவர்களுக்கு உதவியாக இந்த ஆவண வீடியோ எடுக்கப்பட்டதாக ஜாங் ஜி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரது இணையப் பக்கத்தில் குறிப்பிட்டு ஜாங் ஜி, "மூன்று வருட்ங்களுக்குப் பிறகு நான் இப்போது அவளைச் சந்திப்பதைவிட அவளை இன்னும் அதிகம் நேசிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்த தொழில்நுட்பத்தின் உதவியால் என் மகளை எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம் என்ற நம்பிக்கை தற்போது பிறந்துள்ளது. இந்த நிகழ்ச்சியைப் பார்த்த பிறகு பலரும் நயோனை நினைவில் கொள்வார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"இந்த வழியின் மூலம் இறந்த ஒருவருடன் மீண்டும் ஒன்றிணைவது பல உளவியல் ரீதியான பிரச்சினைகளை உருவாக்கும். நிறைய மனநல மருத்துவர்கள் இதை ஆரோக்கியமற்றதாகக் கருதுவார்கள்.

இதுபோன்ற தொழில்நுட்பங்கள் கவலைக்குரிய நெறிமுறை சிக்கல்களை உருவாக்குகின்றன. தொலைக்காட்சிகளின் இலாபத்துக்காக மக்கள் மனதுடன் விளையாடுகிறார்கள்" என்று கடுமையாக விமர்சித்துள்ளார் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் தத்துவ மற்றும் தொழில்நுட்ப பேராசிரியர் பிளே விட்பி.





# உலக அளவில் மிக பெரிய சாதனை படைத்த ஒரு குட்டி கதை




நடிகர் விஜய்யின் மாஸ்டர் படம் பற்றிய பேச்சு தான் இப்போது தமிழ் மக்களிடம் அதிகம். அதிலும் காதலர் தின ஸ்பெஷலாக இப்படத்தில் இடம்பெறும் குட்டி கதை பாடல் வெளியாகி இருந்தது.

இதில் வசனமும், விஜய்யும் மிகவும் ஸ்டைலிஷ் ஷாக பாட பாடலே செம ட்ரெண்டிங்கில் உள்ளது. ஒவ்வொரு மணி நேரமும் பாடல் யூடியூபில் பல சாதனைகள் செய்கிறது.

5 நிமிடத்திலேயே 1 லட்சத்திற்கும் அதிகமான லைக்ஸ், குறுகிய நேரத்தில் 1 மில்லியன் ஹிட்ஸ் என பல சாதனைகளை செய்திருந்தது.

தற்போது 24 மணிநேரத்தில் அதிகம் பார்க்கப்பட்ட வீடியோக்களில் குட்டி கதை பாடல் 3வது இடத்தை பிடித்துள்ளது. இது ரசிகர்களுக்கு மேலும் கொண்டாட்ட செய்தியாக அமைந்துள்ளது.





# 100 ஓட்டங்கள் தாண்டாத ஹோலி

# விக்கெட் இல்லா பும்ரா

# நின்று அடித்த நியூசிலாந்து

## இந்தியாவின் தொடர் தோல்விக்குக் காரணம் என்ன?




31 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தொடரில் அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியுற்று மிகவும் மோசமான பின்னடைவைச் சந்தித்திருக்கிறது இந்தியா. அதுவும் ஹோலி தலைமையிலான இந்திய அணி தொடர் வெற்றிகளைப் பெற்றுவந்த நிலையில் இத்தோல்வி இவ்வணியின் மீது பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

5-0 என இருபது-20 தொடரை வென்ற ஹோலி அண்ட் கோ மிகப்பெரிய நம்பிக்கையுடன் மீண்டும் ஒரு வயிட்வோஷ்க்குத் தயாராக இருந்தது. ஆனால், யாருமே எதிர்பார்க்காத நிகழ்வு. மிகப்பெரிய அதிர்ச்சியை இந்திய அணிக்குக் கொடுத்தது நியூசிலாந்து. 3-0 என இந்தி யாவை வயிட்வோஷ் செய்திருக்கிறது நியூசிலாந்து. அதிர்ந்து போய் நிற்கிறார் ஹோலி.

இருபது-20 தொடரை 5-0 என்று இந்திய அணி வயிட்வோஷ் செய்த நிலையில் ஒரு நாள் தொடரை 3-0 என வயிட்வோஷ் செய்து பதிலடி கொடுத்துள்ளது நியூசிலாந்து. இந்திய அணி கடைசியாக 1989 மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப்பயணத்தில் 5-0 என வயிட்வோஷ் தோல்வியைச் சந்தித்துள்ளது. 31 ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி ஓர் அவமானகரமான தோல்வியைச் சந்தித்துள்ளது இந்திய அணி! ஏன் இந்த வரலாற்று மோசமான தோல்வி... எங்கே சறுக்கியது இந்தியா?

ஒவ்வோர் உலகக்கோப்பையும் முடிந்த பின் அதற்கு அடுத்த உலகக்கோப்பைக்குத் தயாராகும் வகையில் அணி தயார்படுத்தப்படும். ஆனால், இந்திய அணியில் சில பொசிஷன்களைத் தவிர மற்ற இடங்களுக்குச் சரியான வீரர்களைத் தயார் செய்யவில்லை என்பதே உண்மை. சரியான சகலதுறை வீரர் கள் இல்லாமல் அணி திணறி வருகிறது. ஹர்திக் பாண்டியா ஒருவரைத் தவிர வேறு எந்த ஒரு வேகப்பந்து வீச்சு சகலதுறை வீரர்களும் நம்மால் கண்டுபிடிக்கமுடியவில்லை. இவ்வளவு பெரிய நாட்டில் பாண்டியாவுக்கு மாற்று வீரரை அடையாளம் காண முடியாமல் இருப்பது வேதனைக்குரியது. பாண்டியா காயத்திலிருந்து மீண்டு வரும்வரை கேதர் ஜாதவை அணியில் எடுப்பது எல்லாம் எந்த வகையான வியூகம் என்றே தெரியவில்லை.

உலகின் நம்பர் 1 பட்ஸ்மேன் ஹோலி சதம் மேல் சதங்களை விளாசுபவர், ரன் மெஷின்... ஆனால் முதல்முறையாக ஒரு ஒருநாள் தொடரில் அணித்தலைவராக 100 ஓட்டங்களைத் தாண்டவில்லை என்பதோடு, முதல்முறையாகத் தொடந்து 3 முறை போல்டாகியிருப்பது அதிர்ச் சியளிக்கிறது. ரோஹித் ஷர்மா, ஷிகர் தவான் இல்லாத நிலையில் டாப் ஆர்டர் பிரஷர் முழுவதும் ஹோலி மீதே விழுந்தது. அந்த பிரஷரை சமாளிக்க முடியாமல், வழக்கமாகப் பந்தை தன்னை நோக்கி வரவைத்து ஆடுபவர் இந்தத் தொடரில் இவர் பந்தைத் தேடி முன்னே சென்று அவுட் ஆனதெல்லாம் அவரது துடுப்பாட்டத்தின் நடைமுறையில் இல்லாத ஒன்று.

அதுவும் லெக் ஸ்பின்னில் தொடர்ந்து திணறி வருகிறார். இதுவே இவரது வீக்னஸ் ஆகி விடுமோ என்று அச்சமாக இருக்கிறது. இங் கிலாந்தில் ஆதில் ரஷீத், அவுஸ்திரேலியாவில் ஆடம் ஸாம்பா, ஐபில் போட்டிகளில் ஷ்ரேயாஸ் கோபால் இப்போது நியூசிலாந்தில் இஷ்சோதி என லெக் ஸ்பின்னர்களிடம் தனது விக்கெட் டைத் தொடர்ந்து பறிகொடுத்துக்கொண்டிருக்கிறார். இது தொடரக்கூடாது. எப்படி முதல் இங்கிலாந்து சீரிஸில், ஸ்விங் கண்டிஷனில் திணறியவர் அடுத்த சீரிஸில் மீண்டு வந்து பல சாதனைகளைப் படைத்தாரோ அதே மாதிரி இந்த லெக்ஸ்பின் பிரச்சினையிலிருந்தும் மீண்டு வந்து விட வேண்டும்.




உலகின் நம்பர் 1 பௌலர் பும்ரா எப்பேர்ப்பட்ட துடுப்பாட்டக்காரரையும் தனது யார்க்கரால் திணறடிப்பவர். இறுதி ஓவர்களில் தனது ஸ்லோ பந்துகளால் பட்ஸ்மேன்களை திக்குமுக்காடச் செய்பவர்... ஆனால், காயத்திலிருந்து மீண்டு வந்ததிலிருந்து தனது பழைய பௌலிங் வீசும் திறனை சற்றே இழந்து வருகிறார். குறிப்பாக ஒருநாள் தொடர்களில் அதுவும் இந்தத் தொடரில் விக்கெட் எதுவும் எடுக்காமல் 167 ஓட்டங்களைக் கொடுத்துள்ளார்.

பும்ராவின் ஸ்பெஷலே பட்ஸ்மேன்களுக்கு ஒரு எண்டில் டைட் லைனில் பந்து வீசி அவர்களுக்கு பிரஷரை ஏற்றி மற்ற பௌலர்களிடம் ஷாட்ஸ்க்குச் செல்லுமாறு தூண்டி அவர்களின் விக்கெட்டை விழ வைப்பதுதான். அது இந்தத் தொடரில் முழுவதுமாக இல்லாமல் போய்விட்டது. கப்தில் போன்ற பட்ஸ் மேன்கள் இவரது பந்தில் அதிரடியாக ஆடியும், ராஸ் டெய்லர், கிராந்தோம் போன்ற பட்ஸ்மேன்கள் இவரது பந்தில் ஓவருக்கு 3 முதல் 4 ஓட்டங்கள் எடுத்துவிட்டு தாகூர் போன்ற பௌலர்களை டார்க்கெட் செய்து ஓவருக்கு 10 முதல் 15 ஓட்டங்களை எடுத்தனர். இதுவே இந்திய பௌலிங் டிபார்ட்மென்ட்டுக்குப் பெரிய தலை வலியாக இருந்தது.


இந்தத் தொடரில் இந்திய அணிக்கு ஒரே ஆறுதல் மிடில் ஆர்டரில் ஷ்ரேயாஸ் ஐயரும், கே.எல்.ராகுலும் சிறப்பாக ஆடியதே! இருவரும் இந்தத் தொடரில் சதம் அடித்து அசத்தினார்கள். 2018 இற்குப் பிறகு இந்திய மிடில் ஆர்டர் பட்ஸ்மேன் சதம் அடிப்பது இதுவே முதல் முறை. இந்தியாவுக்கு நெடுங்காலப் பிரச்சினையாக இருந்த மிடில் ஆர்டர் பிரச்சினை இந்த இருவரின் ஆட்டத்தின் மூலம் ஓரளவு சரியாகி இருக்கிறது. இது தொடர வேண்டும் என்பதே ரசிகர்களின் ஆசை.

கேன் வில்லியம்சன் முதல் 2 போட்டிகளில் ஆடாத நிலையில் தலைவர் பதவியை ஏற்றடாம் லேதம் சாதுர்யமாகச் செயறபட்டு முக்கியமான நேரங்களில் பௌலர்களை மாற்றி விக்கெட்களை எடுத்து ஓட்டங்களைக் கட்டுப்படுத்தி அசத்திவிட்டார். அதுவும் இரண்டாவது போட்டியில் பிட்சை சரியாகக் கணித்து ஸ்பின்னர்கள் இல்லாமல் தைரியமாக ஃபாஸ்ட் பௌலர்களை மட்டுமே கொண்டு இறங்கியது எல்லாம் தேர்ந்த தலைவர்களாலே செய்ய முடிந்த ஒன்று. அதை டாம்லேதம் செய்தார்.

20 ஓவர் போட்டிகளில் மூன்று போட்டிகளில் வெற்றி வாய்ப்பை நழுவவிட்டவர் ரெயிலர். ஒரு நாள் போட்டிகளில் அதே தவறைச் செய்யத் தயாராக இல்லை. காயம் பட்ட சிங்கத்தின் மூச்சு கர்ஜனையை விட பயங்கரமாக இருக்கும் என்பதை இந்தத் தொடரின் மூலம் காண்பித்து மான் ஒப் த சீரிஸ் அவார்ட்டை வாங்கிச் சென்று விட்டார். ஸ்லாக், ஸ்வீப் ஷாட்தான் அவருடைய பலம். அதை இந்தத் தொடர் முழுவதும் பயன்படுத்தி சிக்ஸர்களாக அடித்துத் தள்ளினார். அது ஜடேஜா வீசிய ஸ்பின் பந்தாக இருக்கட்டும் இல்லை தாகூர் வீசிய வேகப் பந்தாக இருக்கட்டும். மிட் விக்கெட் திசையில் பந்து சிக்ஸருக்குப் பறந்துகொண்டே இருந்தது. முதல் போட்டியில் இந்தியா 347 ஓட்டங்களைக் குவித்திருந்த போதும் அசராமல் சேஸ் செய்தார். 84 பந்துகளை மட்டுமே சந்தித்தவர் 10 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடித்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து அணி ஸ்கோர் 197 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகள் இருந்தபோது அதிக பட்சம் இன்னும் 20 ஓட்டங்கள் எடுப்பார்கள் என நினைத்துக்கொண்டிருந்த போது அதிரடியைக் கையில் எடுத்து 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடித்து அணியின் ஸ்கோரை 273 என்று மேலே உயர்த்திவிட்டார் டெய்லர். இந்த இரண்டு ஆட்டங்களும் நம்மிடமிருந்து வெற்றியைப் பறித்துவிட்டது என்பதே உண்மை.

# சரியான தண்டனை



திரும்பத் திரும்ப பிக்பொக்கெட் அடிச்சிட்டு ஜெயிலுக்கு வர்றியே, நீ திருந்தவே மாட்டியா?" என்றார் ஜட்ஜ் ஜவர்லால்.

"எவ்வளவு தரம் பிக் பொக் கெட் அடிச்சாலும் அதே தண்ட னையே தர்றீங்களே. நீங்க சட் டத்தைத் திருத்த மாட்டீங்களா?" என்றான் பிக் பாக்கெட் பக்கிரி.

ஜட்ஜ்'க்கு சுருக்கென்றது.

பக்கிரியை ஜெயிலுக்கு அழை த்துப் போகச் சொல்லிவிட்டு ஜெயிலரைத் தனியாக அழைத்து ஏதோ பேசினார் ஜட்ஜ்.

ஜெயிலர், பிக்பொக்கெட் அடித்த பத்துப் பேரை ஒரு பிளாக்கில் வைத்தார். பக்கிரியைத் தனியாக அழைத்து சொன்னார்,

"இந்த பிளாக்கில் உனக்கு நேரப்படி சோறு கிடையாது. இந்த பிளாக்குக்கு ஒரு கேண்டீன் இருக்கிறது. செய்கிற வேலைக்கு தினமும் இருநூறு ரூபாய் கூலி. அதைக் கொண்டு போய் காசு கொடுத்துச் சாப்பிட வேண்டும். ஒரு டிஃபன் ஐம்பது ரூபாய். ஒரு சாப்பாடு நூறு ரூபாய். மிச்சம் பிடிக்கிற காசு உனக்கு"

பக்கிரி சந்தோஷமாக ஒப்புக் கொண்டான்.

ஜெயிலர் மற்ற ஒன்பது பேரைத் தனியாக அழைத்தார்.

"பக்கிரி கூலியை வாங்கிக் கிட்டு செல்லுக்குப் போகிற வழி யில அவனை பிக் பொக்கெட் அடிக்கிறது உங்க வேலை. அவ னுக்குத் தெரியவே கூடாது. தினம் ஒருத்தரா இந்த வேலை யைச் செய்யணும், யார் எப்ப பண்றீங்கன்னு தெரியக் கூடாது. தெரிஞ்சா உங்க யாருக்கும் சோறு கிடையாது" என்றார்.

அவர்கள் இந்தத் தொழில் சவாலை ஏற்றார்கள்.

முதல் நாளே பக்கிரி பிக் பொக்கெட்டில் காசை விட்டான். எவ்வளவு கெஞ்சியும் அவனுக்கு இலவசமாய் டிஃபன் தரவில்லை. பசியில் அவனைத் துடிக்க விட்டு கெஞ்சோ கெஞ்சென்று கெஞ்ச விட்டு அப்புறம் கொஞ்சம் சாப்பிடத் தந்தார்கள்.

அவன் சாப்பாடு கிடைக்கா மல் தவிப்பதை மற்ற ஒன்பது பேரும் பார்த்துக் கொண்டிருந் தாலும் வேறு வழியில்லை. ஆட் டத்துக்கு ஒப்புக் கொள்ளா விட் டால் ஒன்பது பேர் பட்டினி! அதை விட ஒருத்தன் பட்டினி பரவாயி ல்லையே!

எல்லோரும் விடுதலை ஆகும் அன்று ஜட்ஜ் ஜவர்லால் வந்தார்.

"சட்டத்தையோ, தண்டனை யையோ கடுமையாக மாற்றுகிற அதிகாரம் எனக்கில்லை. ஆனால் ஜெயில் வழக்கங்களை முன் அனுமதியோடு பரீட்சார்த்தமாக மாற்றும் அதிகாரம் ஜெயிலருக்கு உண்டு. உங்கள் மனப்பாங்கு இப்போது எப்படி இருக்கிறது?" என்றார்.

"ஒரு நாள் முழுக்க கஷ்டப் பட்டு சம்பாதிச்சதை ஒரு செக்க ண்டில தட்டிக்கிட்டு போறது எவ் வளவு அக்கிரமம்ன்னு இப்போ புரியுது. இனி பிக்பொக்கெட் அடிக்க எனக்கு மனசு வராது" என்றான் பக்கிரி.

"பிக் பொக்கெட் கொடுத்தவன் பசியில துடிக்கிறதைப் பார்க்க சகிக்கல்லை. செத்தாலும் இனிமே பிக்பாக்கெட் அடிக்க மாட்டோம்" என்றார்கள் மற்ற ஒன்பது பேரும்.

ஜட்ஜ் ஒரு திருக்குறள் அபி மானி. வள்ளுவர் சொன்னதைத் தான் அவர் செய்தார்.

**தக்காங்கு நாடித் தலைச்**
**செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து**

குற்றம் செய்யப்பட்ட குற்ற வாளி மீண்டும் அத்தகைய குற் றத்தைச் செய்யாத வண்ணம் தண்டனை வழங்குகிறவன் தான் சிறந்த அரசன் ஆவான்.

# அனுசரித்து வாழ்ந்தால்...

தன் மனைவி தன்னுடன் தோளோடு தோள் கொடுத்து நிற்காத எந்த கணவனுக்கும் ஏற்படும் அவமானமும் தலை குனி வும் வேறெந்த அவமானத்தையும் விட அவனை அதிகம் காயப்ப டுத்தும்....!மிகவும் வேதனைப்படுத்தும்.!எங்கு போனாலும் என் கணவர் முன்னே சென்று எனக்கு இடம் பிடித்து தருவார்..பஸ் இல் ஏறும் போது விழாக்களில் விருந்துகளில் எனக்கு முன்பே ஓடி சென்று எனக்கு இடம் பிடித்து....இல்லாவிட்டால் ஏதாவது எனக்கு வசதியாக ஏற்பாடு பண்ணி தருவார்.!!!



பிரயாணம் செய்யும் போது நான் அசந்து தூங்கி விடு வேன்...!.அவரோ ஒரு நிமிடம் கூட கண் அசர மாட்டார்.!பல முறை 8 மணி நேரம் 12 மணி நேரம் அவசர பயணத்தின் போது பஸ்ஸில் இடம் கிடைக்காமல் என்னை மட்டும் உட்கார வைத்து பாதுகா ப்பிற்காக...பக்கத்திலேயே கம்பியை பிடித்து நின்று வந்திருக் கிறார்..!இன்னிக்குத் தினமும் என் கணவனின் கல்லறைக்குப் போறேன்...!எனக்காக எல்லாத்தையும் தயார் செய்த நீங்க முன்னாடி போயிட்டிங்களே?"இதோ நான் பின்னாலேயே வந்துகிட்டு இருக்கேன்னு சொல்வேன்.!

சரி மகளே.! நான் வாறேன் என்று புறப்பட்ட முதியவளை வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்தாள் அந்த இளம் மனைவி?.....!.என்ன நினைத்தாளோ மண்டபத்திற்கு உள் சென்று தன் கணவனை தேட ஆரம்பித்தாள்.....!!!!!!ஆம், நம் மனைவிதானே எப்படி நடந்தாலும் பரவாயில்லை என கணவனும்,...நம்..கணவன் தானே எப்படி பேசினாலும் பரவாயில்லை என மனைவியும் எண்ண வேண்டும்.!

(தொடரும்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1978

### ரம்மியா

**செய்த தவறுகளை ஒப்புக் கொள்வதற்கான மன தைரியமும் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கான மனப்பக்குவமும் இருந்தால் வாழ்க்கையில் வெற்றிதான்!**



### மதன்

**வளைந்து நெளிந்து சென்றால்தான் செல்ல வேண்டிய இடத்திற்குச் செல்ல முடியும்... பாதையிலும் சரி, வாழ்க்கையிலும் சரி**



### ராஜன்

**அமைதியான மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு நடந்ததை மறந்துவிடு! நடப்பதை ஏற்றுக் கொள்! நடக்க இருப்பதில் நம்பிக்கை வை!**




### வினோத்

**முயல்பவனுக்குத் தட்டிக்கொடு!**
**இயலாத வனுக்கு விட்டுக்கொடு!**
**கேட்பவனுக்கு சொல்லிக்கொடு!**
**வாழ்வில் விழுந்தவனை தூக்கிவிடு**



### கபிலன்

**அத்தனையும் அழகாய் தெரிவதும் களையிழந்து தோன்றுவதும் நாம் பார்க்கும் பார்வையால்தான்... எண்ணங்களை அழகாக்குங்கள்... பார்வையும் அழகாகும்**



### சண்முகம்

**சின்னச் சின்ன விடயமாக இருந்தாலும் இறைவனை முழுமையாக நம்புங்கள்... ஏனென்றால் நம்து பெரிய கஷ்டங்களை எல்லாம் நீக்குபவன் அவன் மட்டுமே!**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 211

# தொழில் புரியும் சூழலை மகிழ்வானதாக்கி உடல் நலம் பேண...



நாம் தொழில் புரியும் சூழலை மகிழ்வானதாகவும் மனநிறைவானதாகவும் பேணிக் கொள்வது இலகுவானது. எமது வாழ்நாளில் பெரும்பகுதியை எமது வேலைத்தளத்தில் செலவிடுகிறோம். அது அமைதியானதாகவும் மகிழ்வானதாகவும் அமையாவிடின் அது எமது மனநிலையில் பல பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், நீரிழிவு, பாரிசவாதம் போன்ற பல சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகிறது.

இலகுவான வழிமுறைகள் மூலம் நாம் தொழில்புரியும் சூழலை மகிழ்வானதாகவும் திருப்திகரமானதாகவும் மாற்றி அமைப்போமாயின் ஏற்படும் அனுகூலங்கள் பல.

எமது வாழ்க்கைத் தராதரமும் எமது ஊக்கமும் மேம்படும், சிறப்பாகவும் இலகுவாகவும் எமது தொழிலை செய்யக்கூடியதாக இருக்கும், நாம் தொற்று நோய்களுக்கு உட்படும் சந்தர்ப்பம் பெருமளவில் குறைவடையும். நாம் எமது கல்வித்தகைமையிலும் தொழிலிலும் உயர்ச்சிபெற உறுதுணையாக அமையும். எமது மகிழ்வும் ஊக்கமும் உயரும்.எமது குடும்பத்தின் ஆரோக்கிய நிலை மேம்படவும் இது உறுதுணையாக அமை யும்.

எம்முடன் தொழில் புரிபவர்களிடையே காணப்படும் நல்ல இயல்புகளை அடையாளப்படுத்தி அவற்றைக் கற்றுக்கொள்ள முயல்வோம். அத்துடன் அவர்களின் நல்ல இயல்புகளை ஊக்கப்படுத்தி பாராட்டுவோம். அறிந்தோ அறியாமலோ நாம் விடும் தவறுகளுக்காக மன்னிப்புக்கோருவோம். மீண்டும் அந்தத் தவறு நிகழாமல் பார்த்துக் கொள்வோம்.

எம்முடன் பணிபுரியும் சிலருடன் பழகுவது சில சமயம் கடினமானதாக இருக்கலாம். சிலர் கடினமானவர்கள் போலத் தோற்றப்பட்டாலும் மென்மையான மனம் கொண்டவர்கள். அவர்களை விளங்கிக்கொள்ள முயல்வோம். அவர்களிடம் எவ்வாறு பழகிக்கொள் வது என்பதைக் கற்றுக் கொள்வோம். ஒருவரைப்பற்றி இன்னொருவரிடம் விமர்சனம் செய்வதை தவிர்த்திடுவோம். ஒருவரை நாம் நெறிப்படுத்த விரும்பின் அவர் அமைதியாக இரு க்கும் சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் அவருடன் கலந்துரையாடுவோம்.

தொழில்புரியும் சூழலில் எமது பலம், பலவீனங்களை அடையாளப்படுத்த முயல்வோம். எமது பலவீனங்களை கையாள்வது எப்படி என சிந்திப்போம். எமக்கு கவலையோ கோபமோ ஏற்படக்கூடிய சம்பவங்கள் நிகழ்ந்தால் அது



சம்பந்தமாக எமக்கு நெருக்கமானவர்களுடன் கலந்துரையாடுவோம். எமக்கு மனத்தாக்கங்கள் ஏற்படுத்தும் சம்பவங்களை நாம் பிறிதொருவருக்கு செய்வதை தவிர்த்து விடுவோம்.

எமது நடவடிக்கைகள் எம்மையும் மற்றவர்களையும் ஊக்கப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொள்வோம். எமக்கு மன ஆறுதலும் அமைதியும் ஏற்படும் நடவடிக்கைகளில் மற்றவர்களையும் ஈடுபடுத்த முயல்வோம்.

எம்மைப்பற்றி விமர்சனங்களை எதிர் கொள்ள எம்மை தயார்படுத்திக் கொள்வோம். அவற்றிலே சரியான நோக்கத்துடன் சொல்லப் படும் விமர்சனங்களை அடையாளப்படுத்த முயல்வோம்.விமர்சிப்பவர்களுடன் வாதிடு வதை இயன்றவரை தவிர்ப்போம்.

சக உத்தியோகத்தர்களின் நலனிலும் உயர்விலும் அக்கறை கொள்வோம். தொழில் புரியும் இடத்தை அழகானதாகவும் தூய்மையானதாக வும் வைத்திருக்க எமது பங்களிப்பை வழங்கு் வோம். இவை மனதுக்கு ஒரு புத்துணர்ச்சியை வழங்கி நிற்கும்.

அன்றாடம் நாம் செய்யும் சிறு சிறு விடயங் கள் எம் வாழ்வியலை அழகாக்கும். மனதுக்கு ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் வழங்கும்.அது எமது உடல் சுகத்தை மெருகேற்ற உறுதுணையாக அமையும்.

எமது வேலைத்தளத்தை மகிழ்வானதாக மாற்ற நாம் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் எம்மை கைவிட்டுவிட நாம் அதிலே தோற்றும் போகலாம். ஆனால் நாம் முயற்சியை கைவிடா மல் தொடர்வதிலேயே மகிழ்வும் வெற்றியும் தங்கியிருக்கிறது.

விடயங்களை எடுத்துச்சொல்வதில் நேர த்தை விரயமாக்குவதிலும் பார்க்க எடுத்துக் காட் டாக இருப்பது பலரில் மனமாற்றத்தை ஏற்படுத்த உதவும். வேலைத்தளத்தை மகிழ்வாக்க எம்மை மாற்றிக்கொள்வதில் கூடிய கவனம் எடுப்போம்.

Dr .சி.சிவன்சுதன். பொது வைத்திய நிபுணர்

## பற்பசையிலிருக்கும் புளோரைட் மூன்று விதமாகப் பற்களைப் பாதுகாக்கும்

1. பற்கள் மீது கல்சியம் படியும் வேகத்தை கூட்டுவது மற்றும் பற்கள் மீது படிந்த கல்சியத்தின் அளவு குறைவடைந்து செல்லும் வேகத்தைக் குறைப்பதன் மூலமாக பற்கள் அழிவடைவதைத் தடுக்கும்.

2. பற்கள் மீது கல்சியம் புளோரோ எபடயிட் உருவாவதனால் பல் மிளிரி பலமடைந்து அமிலத்தாக்கத்தை எதிர்க்கும்.

3. புளோரைட்டில் பக்டீரியா எதிர்ப்புச் சக்தியுள்ளது. நீங்கள் பாவிக்கும் பற்பசைப் பக்கட்டில் இருக்கும் லேபலை நன்றாகப் பரிசீலித்து அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் புளோரைட்டின் அளவு (1000ppm–1500 ppm) உள்ளடக்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்